அருட்பெருஞ் ஜோதி! அருட்பெருஞ் ஜோதி!
தனிப்பெருங் கருணை! அருட்பெருஞ் ஜோதி!

Koviloor Digital Library

# அருட்பெருஞ் ஜோதி அகவல்

AC.No. 16595
R 65



வெளியீடு:
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
அருட்ஜோதிபுரம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-4

# அருட்பெருஞ்ஜோதி அகவல்

A. No. 16555
LIBRARY. KOVILOOR

நூலாசிரியர்

## திருவருட் பிரகாச வள்ளலார்

தொகுப்பு :

**திரு. R.பாலகிருஷ்ணன்** எம்.ஏ
சங்க செயலர்
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
அருட்ஜோதிபுரம்,படப்பை-601 301.

**முதல் பதிப்பு 27.2.2002**
**2-ம் பதிப்பு வெளியீடு 4.2.2004**

**6-ம் ஆண்டு தைப்பூச ஜோதி தரிசன விழாவில் வெளியிடப்பட்டது.**

Koviloor Digital Library

# ☞ உள்ளே - - - -

1. சுத்த சன்மார்க்க விண்ணப்பம்
2. நூல்
3. திருப்பள்ளி எழுச்சி
4. திருக்கதவந் திறத்தல்
5. திருவடிப் புகழ்ச்சி
6. அருட்பெருஞ்ஜோதி அகவல்
7. அருட்பெருஞ்ஜோதி அட்டகம்
8. வேண்டுதல்
9. ஜோதி
10. சுத்த சன்மார்க்க வேண்டுகோள்
11. திருவருள் வேட்டல்
12. மரணமிலாப் பெருவாழ்வு (அ) ஞானசரியை
13. சிற்சத்தி துதி (அ) கொடிப் பாடல்
14. ஜீவகாருண்யம் - பசியின் அவத்தை
15. மனுமுறை கண்ட வாசகம்

நூல் கிடைக்கும் இடம்

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

அருட்ஜோதிபுரம்

ஆத்தனஞ்சேரி (இ) படப்பை 601 301

காஞ்சி மாவட்டம், போன் : **954111-274584**

Koviloor Digital Library

# சமர்ப்பணம்

பூர்வ புண்ணிய வசத்தால், ஜீவகாருண்ய கடாட்சமும், இறை அன்பும், உயிர்க்கருணையும் ஒருங்கே நிறைந்து, கல்வி கேள்விகளால் சிறந்து, மக்கள் தொண்டே மகேசன் தொண்டாக நினைத்து இளமை தொட்டே பொதுச் சேவையில் ஈடுபட்டு அநேக தர்மகாரியங்களில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு, ஆன்றோர் பெருமக்களால் வழங்கப்பட்ட அநேக சிறப்பு விருதுகளையும் பெற்று,

காட்சிக்கு எளியராய், கடுஞ்சொல் நீக்கிய நேசப் பண்புடையாளராய், எவரையும் சமமாக பாவிக்கும் பொதுநோக்கு பார்வை கொண்டவராய், சாத்வீக மாமணியாய், இறை நெறியின் அருட் காவலராய் விளங்கும் அருளாளர் **M.சாந்திலால்** ஐயா அவர்கள், படப்பை அருட்ஜோதி புரத்தில், அருள் பொழிந்து கொண்டிருக்கும் சத்திய ஞான தீபத்தின் காவலராய் விளங்கி வருகிறார்கள். 1995 முதல் அருட்ஜோதிபுரம் சத்திய ஞான தீபத்தை காத்துவரும் அன்னாரின் பொன்னார் திருவடிகளுக்கு இந்த தெய்வீக நூலை சமர்ப்பணம் செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்க அன்னார் தொண்டு! வளர்க அவர்கள் மாபுகழ்!

இங்ஙனம்,

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

அருட்ஜோதிபுரம்.

Koviloor Digital Library

# மதிப்புரை

இன்றைய நாளில், ஆயிரமாயிரம் நூல்கள் புற்றீசல்போல் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவை, அன்றாட பொழுது போக்கிற்கே உதவக்கூடும். ஆனால் அன்றும், இன்றும், என்றும், ஞானிகள் தந்தஅருள்மொழிகளை உடைய பாமாலைகள் அழிவதில்லை. மாறாக அருள்உள்ளம் நிரம்பிய உத்தமர்கள் வாயிலாக அது வெளிப்படவே செய்கிறது.

சுமார் 175 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய வடலூர் வள்ளற்பெருமான் அருளிய எண்ணாயிரம் திருவருட்பா பாடல்களும், கற்பார் உள்ளங்களை கொள்ளை கொண்டு, அவர்களது நெஞ்சை தூய்மையால் நீராட்டி, புனிதப்படுத்தும் அற்புத ஆற்றல் படைத்தவை.

திருவருட்பா திருமுறைகளிலிருந்து வழிபாட்டிற்காக தொகுக்கப்பட்டு இன்று வெளிவரும் இந்நூல் ரத்தின சுருக்கமான, பேராற்றல் வாய்ந்த பாடல்களைக் கொண்டது. இதை வெளியிடுட்ம அருட்ஜோதிபுரம் சன்மார்க்க சங்க தொண்டர்களுக்கு எனது இனிய வாழ்த்துக்கள். மேன்மேலும் அருட்ஜோதிபுரம் சன்மார்க்க சங்கம், வள்ளலார் அருளிய வசனப்பாக கருத்துக்களை சிறு சிறு வெளியீடுகளாக மக்கள் மத்தியில் பரவும் வகையில் இலவசமாக வெளியிட முயற்சி மேற்கொள்ள எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் வெளிவருதற்கு உற்ற துணயாய் இருந்து, அருளாளர்களை ஆட்படுத்தி இம்மாபெரும் காரியத்தைச் செய்த வல்லக்கோட்டை முருகன் அடிமையர் தவத்திரு **M.V. ரங்கநாதன்** மற்றும் **V. ராஜாராம்** அவர்கட்கு எனது இதயம் கனிந்த பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்

**அரிமா M. ஹரிராம்**

(தலைவர், ஸ்ரீ மகாமேரு தியான நிலைய டிரஸ்ட்
மற்றும் அருட்ஜோதிபுரம் சன்மார்க்க சங்க தலைவர்)

Koviloor Digital Library

# நூல் தனிச்சிறப்பு

இயற்கை உண்மை தனிப்பெரும் பதியாய், எவ்வுயிர்க்கும் தந்தையாய், தாயாய் எல்லாம் தாமாய் விளங்கும் **அருட்பெருஞ் ஜோதி தனிப்பெருங்கருணை ஆண்டவர்** பூரண திருவருட் சம்மதத்தோடு இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற **திருவருட் பிரகாச வள்ளலார்** என்னும் அருட்சிறப்பு பெயர் தாங்கிய **வடலூர் சிதம்பரம் இராமலிங்க பெருமான்,** இறைவன் பேரருள் பெருமை எவ்வகையாக உள்ளது என்பதையும் அவ்விறைவன் தமக்கு அருளிய பேரருள் வல்லப திறத்தையும் கடல்மடை திறந்தது போல், எழுதுவதற்கு அரிய அற்புத திருவாசகங்களால் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பா திருமுறைகளில் மாணிக்கம் போல மணிமுடியாய் திகழ்வது தான் **அருட்பெருஞ் ஜோதி அகவல்** என்னும் முழு நீள வழிபாட்டு பாடல் ஆகும்.

வள்ளற் பெருமான் 'சத்விசாரம்' என்ற சாதனத்தை கூறுமிடத்தில் 1 ஜாம நேரம் அதாவது 3 மணி நேரம் இடைவிடாது இறைவனை சிந்தித்தால் நம் உடலில் 'சுத்த உஷ்ணம்' உண்டாகும் என்றும் அந்த உஷ்ணத்தைப் பெற்றுக் கொண்டால் நாம் பெற வேண்டிய ஆன்ம லாபத்தை அடைய முடியும் என்றும் கூறுகின்றார்கள். இறைவனை எவ்வாறு சிந்திப்பது, எவ்வாறு தோத்தரிப்பது என்பதற் காகவே இந்த முழு நீள வழிபாட்டுப் பாடலை இயற்றி அருளியுள்ளார்கள்.

Koviloor Digital Library

இந்த அகவலை **உணர்ந்து ஓத** 3 மணி நேரம் பிடிக்கும். அவ்வாறு உணர்ந்து ஓதுவதே சிறந்தது. இவ்வாறு ஓதுவதால் ஆன்ம நெகிழ்ச்சியும், அறிவு விளக்கமும், ஜீவ தயவும் விருத்தியாகும். உள்ளொளியைப் பெருக்கும்.

திருமணம், புதுமனை புகு விழா, விழா நாட்கள் போன்ற சிறப்பு நாட்களில் இதை முறையாக, நிதானமாக, நெகிழ்ச்சியுடன் உணர்ந்து ஓத வேண்டும். இதன் பலனை வாசகர்கள் நிச்சயமாக உணர்ந்து கொள்வார்கள்.

இதன் சிறப்பு சொல்லில் நிறைவு பெறாது. கல்வி, செல்வம், விரும்பிய திருமணம், மகப்பேறு, வியாபாரம், உத்தியோகம் முதலானவை இன்றி விசனப்படுகின்றவர்கள் **ஜீவகாருண்ய அனுசரிப்புடன்** இந்த அகவலை முழு நம்பிக்கையுடன் ஓதிவர, சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு மற்றும் மேலான பேரின்ப சித்தி முத்தி அனுபவங்கள் அடைவதும் உறுதி.

| **இப்பதிப்பின் சிறப்புகள் :** | |
|---|---|
| 1. | பிழையற்றது. |
| 2. | அளவான சந்தி பிரிப்பு |
| 3. | பெரிய எழுத்து. |
| 4. | முறையாக வடிவமைக்கப்பட்டது. |
| 5. | கையடக்கமானது. |

Koviloor Digital Library

# வாழ்த்துரை

வடலூர் வள்ளலார் என பெருமையுடனும் அன்புடனும் அழைக்கப்படும் திருவருட் பிரகாச வள்ளற் பெருமான் இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய தெய்வத் திருமறைதான் திருவருட்பா. சமரச வேதமாய்த் திகழும் திருவருட்பாவில் இருந்து நமக்குக் கிடைத்திருப்பது, "அருட்பெருஞ்ஜோதி அகவல்" என்னும் மாணிக்க மணிமகுடம். இதை, இயற்கை உண்மை தனிப்பெரும்பதியாய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருக்கு அணிந்து, எல்லையில்லா இன்பப் பெருக்கில் திளைக்கின்றார் வள்ளற்பெருமான் அவர்கள்.

இத்தனிச்சிறப்பு தெய்நூலை, அருட்ஜோதிபுரம் சன்மார்க்க சங்கம் அடுத்தடுத்து வெளியிடுவது கண்டு மனம் பூரிப்பு மிக அடைகின்றோம். தற்போது, இன்னும் பல அருட்பா முத்துக்களை உடன் சேர்த்து வெளியிடுவது மேலும் மகிழ்ச்சி அளிப்பதாய் உள்ளது.

கிடைத்தற்கரிய மனித தேகம் பெற்ற ஆன்ம நேய சகோதரர்கள் அனைவரும் இந்நூலை வாங்கி, ஓதி பயன் பெறவும், வள்ளலார் வழியில், உயிர்க்கொலை செய்யாமலும், புலால் உண்பதை தவிர்த்தும், பசியால் வாடும் உயிர்களின் பசி நீக்கியும், செய்யக்கூடாத பாவங்களை செய்யாமல் விலக்கியும், ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைபிடித்தும் வாழ்வாங்கு வாழ வேண்டுமெனவும் இதயம் கனிந்து வாழ்த்துகின்றோம்.

இந்நூலை வெளியிடும் அருட்ஜோதிபுரம் சன்மார்க்கத் தொண்டர்கள் யாவரும், எல்லா நலமும், வளமும் பெற்று, வள்ளலார் அருளிய கொள்கைகளை மக்களிடையே பரப்புவதில் மேலும் ஆக்கமும் ஊக்கமும் பெற்று வாழ்க! வளர்க!! என வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்
ஸ்ரீ வல்லக்கோட்டை முருகன் அடிமையர்கள்
**M.V.** ரங்கநாதன் (பி.ஏ. ஆனர்ஸ்)
**V.** ராஜாராம் (ஓய்வு ஆசிரியர்)

Koviloor Digital Library
**சிவஞானமூர்த்தி** (பெருங்களத்தூர்), **நாராயணன்** (அரக்கோணம்)
**நடராசன்** (ஆக்கூர்), **K.A. இராமமூர்த்தி** (வந்தவாசி)
**D.சிவராமன்**(சிங்கப்பூர்), **கூ.எ.குப்புசாமி, M.மணி** (கூடுவாஞ்சேரி)
**முத்தைய்யா, க.மு. பரணன், ரங்கநாதன், ஆஞ்சநேய சீனிவாசன்** (அனகை), **M.முரளி, G. ஆறுமுகம்,** (பொழிசை)
**ஜெயேந்திரன்** (கோயம்பேடு), **காளத்தி ஐயா** (காஞ்சிபுரம்)
**R.S. குஞ்சிதபாதம்**(சானடோரியம்)**K. கிருஷ்ணகுமார்**(எழிச்சூர்)
**S. மணவாளன்**(பள்ளிப்பட்டு) **M. அருணாச்சலம்** (தாம்பரம்)
**D. தனசேகர், செந்தில் ஏகாம்பரம்** (தாம்பரம்)
**மோகன், லிங்கம்,** (கி. நகர்) **விஜயகுமார்** (கி. நகர்)
**மோகனசுந்தரம், M. கேசவன்** (பெருங்களத்தூர்)
**M. குணசேகர்,**(நெடுங்குன்றம்) **T.G. சக்திவேல்**(ஈக்காட்டுத்தாங்கல்)
**P.பிச்சையாண்டி, பிரம்மஸ்ரீ N.சுப்பிரமணியம்** (சென்னை)
**பிரம்மஸ்ரீ வேலாயுதம்,**(சென்னை) **D.சுந்தரராமுலு**(வேலப்பன் சாவடி)
**G. லோகநாதன்** (பூந்தமல்லி), **E. முருகைய்யன்** (பூந்தமல்லி)
**மேகநாதன்** (முகைப்பேர்), **G. ஞானமணி** (குன்றத்தூர்)
**பூமிநாதன்**(வடபழனி) **G.L. ரவி, T.S. சிவலிங்கம்,** (சென்னை)
**மாரியப்பன் குழுவினர்** (கோயம்பேடு)

## அருட்ஜோதிபுரம் சங்க மெய்யன்பர்கள்

## அருட்திருவாளர்கள்

M. வீரராகவன் – T. ஐம்புலிங்கம் – T.K.முனுசாமி – K. பாலகிருஷ்ணன் – P நாராயணன் – கற்பகம்பாலகிருஷ்ணன் – A. E. தெய்வசிகாமணி – G. நாராயணன் – R. திரிலோகசந்தர் – S. ரமேஷ் – K. மணி – R. நாராயணமூர்த்தி – A.A. தயாளன் – E. குப்பன் – C. கனகராஜ் – ஐயாசாமி – வெல்டிங் ரமேஷ் – அப்பாவு – V. புனிதவேலு – A. நடராஜன் – தம்பிரான் – லோகநாதன் – நாகராசன், இராமச்சந்திரன் (மண்ணிவாக்கம்) – பெருமாள், மோகன் (சென்னை) – விஜயகுமார் (மடம்) – தேவராஜ், V. பாலு

இங்ஙனம்

**அருட்ஜோதிபுரம்**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் (சார்பாக)**

**அருட்திரு K.தீனன்**(சங்க துணைத்தலைவர்)

**அருட்திரு. A. சண்முகம்** (சங்க துணைச் செயலாளர்)

Koviloor Digital Library

# நன்றி

அருட்பெருஞ்ஜோதி அகவல் எனும் இத் தெய்வீக நூல் வெளிவருவதில் எப்போதும் பெருமை அடையும் இச்சங்கத்தின் தலைவரும், ஸ்ரீ நகரம், ஸ்ரீ மகாமேரு தியான நிலையத்தின் டிரஸ்டியும் ஆன தவத்திரு **M. ஹரிராம் சுவாமிகள்** இந் நூலுக்கு சிறந்ததோர் மதிப்புரை வழங்கி சிறப்பித்துள்ளார்கள். அன்னாரின் பொன்னார் திருவடிகட்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து மகிழ்கின்றோம்.

இத் தெய்வீக நூல் வெளியிடுவதில் ஆர்வமும் ஒத்துழைப்பும் நல்குவதில் முதலிடம் வகிக்கும் ஸ்ரீ வல்லக்கோட்டை முருகன் அடிமையரும், திருத் தொண்டர்களுமான ஜீவகாருண்ய செம்மல்கள், தவத்திரு **M.V. அரங்கநாதன்** ஐயா, **தவத்திரு V. இராஜாராம்** ஐயா ஆகியோர் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்துள்ளார்கள். அன்னார்களது பொன்னார் திருவடிகளுக்கு உளம்கனிந்த நன்றியினை உரித்தாக்கு கின்றோம்.

இத்தெய்வீக நூலை 2002 ம் ஆண்டு ஜோதி தரிசனப் பெருவிழாவில் முதல் பதிப்பாக வெளியிட்டபோது இதற்கு மனமுவந்து பொருளுதவி அளித்து உதவிய அருட்செல்வர்கள், தாம்பரம் வசந்தபவன் உரிமையாளர் **திரு. M.** ரவி அவர்கள், வானகரம் **திரு. M. அப்துல் ரகீம்** ஐயா, அண்ணா நகர் **திரு. கோபால்வெங்கடேஷ்**, ஐயா, ஆவடி **திரு. B. ஜெயச்சந்திரன்** ஐயா ஆகியோர்களின் நல் உள்ளங்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து மகிழ்கின்றோம்.

தற்போது 2-ம் பதிப்பாக வெளிவரும் இந்நூல் வெளிவருவதில் மிகவும் ஆர்வம்காட்டி ஒத்துழைப்பு நல்கிய பெருமை காஞ்சிபுரம் மாவட்ட சன்மார்க்க சங்க ஒருங்கிணைப்புப்

Koviloor Digital Library

பொதுச்செயலரும், இச்சங்கத்தின் துணைத் தலைவருமான அருட்திரு.ஜோதி. **வீ.கோட்டீஸ்வரன்** மற்றும் அவர்களது சகாக்கள் **K.ஆறுமுகம், K.ராஜேந்திரன், M.பழனி, G.குமார்** முதலானவர்களையே சாரும். அன்னார்களுக்கும் இச்சங்கம் தமது அன்புகலந்த நன்றிப்பெருக்கை ஊற்றம் செய்கிறது.

பல்வேறு பொருளாதார இடர்ப்பாடுகளுக்கிடையேயும் இந்த நூலை அவசியம் வெளியிட்டே ஆக வேண்டும் என்ற நிலை உருவாகிய இடம், அருட்செல்வர் **A.L. செல்லைய்யா** அவர்களின் "ஸ்ரீ ஜானகி அம்மாள் நினைவகம்" ஆகும். ஆங்கு அன்பர்கள் வழிபாடு நடத்த சென்றபோது அருட்பெருஞ்ஜோதி அகவல் நூல் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்நிலை தவிர்க்கவே இறையருள், இந்நூல் வெளியிட ஆணைபிறப்பித்தது. அருட்செல்வர் **A.L.செல்லைய்யா** அவர்களின் தூய உள்ளத்திற்கு மனமகிழ்வுடன் நன்றியினை உரித்தாக்குகின்றோம்.

இந்நூல் வெளிவருவதில் மட்டற்ற மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளும் கீழ்க்காணும் நமது சன்மார்க்க சங்க, ஜீவகாருண்ய செம்மல்களும், காஞ்சிபுரம் மாவட்ட சன்மார்க்க சங்க ஒருங்கிணைப்பு பொறுப்பாளர்களும், அருட்ஜோதிபுரம் சங்க மெய் அன்பர்களும் ஆகிய அனைவருக்கும் இச்சங்கம் தமது அன்புகலந்த நன்றியையும், வாழ்த்தையும் தெரிவித்து மகிழ்கிறது:–

அருட்திருவாளர்கள்

**R. தேவன்** (காஞ்சி மாவட்ட சன்மார்க்க சங்க ஒருங்கிணைப்புத் தலைவர்)
**K. சந்தானம்** (கொளப்பாக்கம்), **S. குமார்** (கருங்குழி)
**N.B.S.மணியன்** (மணவாள நகர்)
**V.G.மணி** (திருவள்ளூர் மாவட்ட சன்மார்க்க சங்க ஒருங்கிணைப்புத் தலைவர்)
**V.பாலசுந்தரம், தங்கவேலு, உமாபதி, பாண்டியன், மனோகரன்** (செங்கை), **இராமச்சந்திரன்** (வேங்கடமங்கலம்)
**அசுவத்தாமன்** (கே.கே. நகர்), **மோகநாதன்** (படூர்)

Koviloor Digital Library

# விண்ணப்பம்

எல்லாமுடைய அருட்பெருஞ் ஜோதி அற்புதக் கடவுளே !

இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும்; வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றாவண்ணம் அருள் செய்தல் வேண்டும்.

சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.

எல்லாமாகிய தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரே ! தேவரீர் திருவருட் பெருங் கருணைக்கு வந்தனம் ! வந்தனம் !

Koviloor Digital Library

# நூல்

எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் றனையே யேத்து.

திருவிளங்கச் சிவயோகச் சித்தியெலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்கஒளி சிறந்ததிரு விளக்கே !
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்கஅரு ளுதவுபெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்து ஒருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக்
கொழுந்தே.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படும்பரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புரு வாம்பர சிவமே.

Koviloor Digital Library

# திருப்பள்ளி எழுச்சி

பொழுது விடிந்ததென் உள்ளமென் கமலம்
பூத்தது பொன்னொளி பொங்கிய தெங்கும்
தொழுதுநிற் கின்றனன் செய்பணி யெல்லாம்
சொல்லுதல் வேண்டும்என் வல்லசற் குருவே
முழுதுமா னானென ஆகம வேத
முறைகளெ லாமொழி கின்றமுன் னவனே
எழுதுதல் அரியசீர் அருட்பெருஞ் ஜோதி
என்தந்தையே பள்ளி எழுந்தருள் வாயே. 1

துற்குண மாயைபோய்த் தொலைந்தது ஞானம்
தோன்றிட பொன்னொளி தோற்றிய கதிர்தான்
சிற்குண வரைமிசை உதயஞ்செய் ததுமா
சித்திகள் அடிப்பணிச் செய்திடச் சூழ்ந்த
நற்குண சன்மார்க்க சங்கத்தா ரெல்லாம்
நண்ணினர் தோத்திரம் பண்ணிநிற் கின்றார்
எற்குண வளித்தவென் அருட்பெருஞ் ஜோதி
என்னம்மையே பள்ளி எழுந்தருள் வாயே. 2

Koviloor Digital Library

நிலந்தெளிந்தது கண மழுங்கின சுவண
நீடொளி தோன்றிற்றுக் கோடொலிக் கின்ற
அலர்ந்தது தாமரை ஆணவ இருள்போய்
அழிந்தது கழிந்தது மாயைமா லிரவு
புலர்ந்தது தொண்டரோ டண்டருங் கூடிப்
போற்றியோ சிவசிவ போற்றியென் கின்றார்
இலங்குரு அளித்தவென் அருட்பெருஞ் ஜோதி
என்குருவே பள்ளி எழுந்தருள் வாயே. 3

கல்லாய மனங்களும் கரையப்பொன் னொளிதான்
கண்டது கங்குலும் விண்டது தொண்டர்
பல்லாரு மெய்தினர் பாடி நின்றாடிப்
பரவுகின் றார் அன்பு விரவுகின் றாராய்
நல்லார் மெய்ஞ் ஞானிகள் யோகிகள் பிறரும்
நண்ணினர் சூழ்ந்தனர் புண்ணிய நிதியே
எல்லாஞ்செய் வல்லவென் அருட்பெருஞ்ஜோதி
என்தெய்வமே பள்ளி எழுந்தருள் வாயே. 4

புன்மாலை இரவெலாம் புலர்ந்தது ஞானப்
பொருப்பின்மேற் பொற்கதிர் பொலிந்தது புலவோர்
சொன்மாலை தொடுத்தனர் துதித்துநிற் கின்றார்
சுத்தசன் மார்க்க சங்கத்தவர் எல்லாம்
மன்மாலை மாலையா வந்துசூழ் கின்றார்
வானவர் நெருங்கினர் வாழியென் கின்றார்
என்மாலை அணிந்தவென் அருட்பெருஞ்ஜோதி
என்பதியே பள்ளி எழுந்தருள் வாயே. 5

Koviloor Digital Library

ஒருமையின் உலகெலாம் ஓங்குக எனவே
ஊதின சின்னங்கள் ஊதின சங்கம்
பெருமைகொள் சமரச சுத்த சன்மார்க்கப்
பெரும்புகழ் பேசினர் பெரியவர் சூழ்ந்தார்
அருமையும் எளிமையும் ஆகியன் றாகி
அம்பலத்தே சித்தி ஆடல்செய் பதியே
இருமையும் அளித்தவென் அருட்பெருஞ்ஜோதி
என்னரசே பள்ளி யெழுந்தருள் வாயே. 6

சினைப்பள்ளித் தாமங்கள் கொணர்ந்தனர் அடியார்
சிவசிவ போற்றியென் றுவகைகொள் கின்றார்
நினைப்பள்ளி யுண்ணத்தெள் ளாரமு தளிக்கும்
நேரமிந் நேரமென் றாரியர் புகன்றார்
முனைப்பள்ளி பயிற்றாதென் றனைக்கல்வி பயிற்றி
முழுதுணர் வித்துடற் பழுதெலாம் தவிர்த்தே
எனைப்பள்ளி எழுப்பிய அருட்பெருஞ்ஜோதி
என்னப்பனே பள்ளி யெழுந்தருள் வாயே. 7

மதம்பிடித் தவர்எல்லாம் வாய்பிடிப் புண்டு
வந்துநிற் கின்றனர் வாய்திறப் பிப்பான்
கதம்பிடித் தவர்எல்லாம் கடும்பிணி யாலே
கலங்கினர் சூழ்ந்தனர் உலம்புறுகின்றார்
பதம்பிடித் தவர்எல்லாம் அம்பலப் பாட்டே
பாடினர் ஆடினர் பரவிநிற் கின்றார்
இதம்பிடித் தெனையாண்ட அருட்பெருஞ்ஜோதி
என்னையனே பள்ளி யெழுந்தருள் வாயே. 8

Koviloor Digital Library

மருளொடு மாயைபோய்த் தொலைந்தது மதங்கள்
வாய்மூடிக் கொண்டன மலர்ந்தது கமலம்
அருளொளி விளங்கிய தொருதிருச் சபையும்
அலங்கரிக் கின்றனர் துலங்கிவீற் றிருக்கத்
தெருளொடு பொருளும்மென் மேலெனக்களித்துச்
சித்தெலாஞ் செய்திடத் திருவருள்புரிந்தே
இருளறுத் தெனையாண்ட அருட்பெருஞ்ஜோதி
என்வள்ளலே பள்ளி யெழுந்தருள் வாயே. 9

அலங்கரிக் கின்றோம்ஓர் திருச்சபை அதிலே
அமர்ந்தருட் ஜோதிகொண் டடிச்சிறி யோமை
வலம்பெறும் இறவாத வாழ்வில்வைத் திடவே
வாழ்த்துகின்றோம் முன்னர் வணங்கி நிற்கின்றோம்
விலங்கிய திருளெலாம் விடிந்தது பொழுது
விரைந்தெமக் கருளுதல் வேண்டும்இத் தருணம்
இலங்குநற் றருணமெம் அருட்பெருஞ்ஜோதி
எம்தந்தையே பள்ளி எழுந்தருள் வாயே. 10

## திருக்கதவந் திறத்தல்

திருக்கதவந் திறவாயோ திரைகளெலாந் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்ஜோதித் திருவுருக்காட் டாயோ
உருக்கியமு தூற்றெடுத்தென் உடம்புயிரோ டுளமும்
ஒளிமயமே யாக்குறமெய் உணர்ச்சியரு ளாயோ
கருக்கருதாத் தனிவடிவோய் நின்னை என்னுட் கலந்தே
கங்குல்பக லின்றியென்றும் களித்திடச்செய் யாயோ
செருக்கருதா தவர்க்கருளுஞ் சித்திபுரத் தரசே
சித்த சிகா மணியேயென் திருநடநா யகனே

Koviloor Digital Library

மணிக்கதவம் திறவாயோ மறைப்பையெலாம் தவிர்த்தே
மாற்றறியாப் பொன்னே நின் வடிவது காட்டாயோ
கணிக்கறியாப் பெருநிலையில் என்னொடு நீ கலந்தே
கரைகடந்த பெரும் போகம் கண்டிடச் செய்யாயோ
தணிக்கறியாக் காதல்மிகப் பெருகுகின்ற தரசே
தாங்கமுடி யாதினி என் தனித்தலைமைப் பதியே
திணிக் கலையாதிய வெல்லாம் பணிக்க வல்ல சிவமே
சித்த சிகாமணியே என் திருநட நாயகனே 1

உன்புடை நான் பிறர்போலே உடுக்க விழைந்தேனோ
உண்ணவிழைந் தேனோ வேறு உடைமை விழைந்தேனோ
அன்புடையாய் என்றனை நீ அணைந்திடவே விழைந்தேன்
அந்தோ என் ஆசைவெள்ளம் அணை கடந்த தரசே
என்புடைவந்து அணைக என இயம்புகின்றேன் உலகோர்
என்சொலினும் சொல்லுக என் இலச்சையெலாம்
விடுத்தேன்
தென்புடையோர் முகநோக்கித் திருப்பொது நிற்கின்றோய்
சித்தசிகாமணியே என் திருநட நாயகனே 2

இறந்திறந்தே இளைத்தவெலாம் போதும் இந்த உடம்பே
இயற்கை உடம்பாக அருள் இன்னமுதம் அளித்தென்
புறந்தழுவி அகம் புணர்ந்தே கலந்து கொண்டு எந்நாளும்
பூரணமாம் சிவபோகம் பொங்கியிட விழைந்தேன்
பிறந்து இறந்து பொய்க்கதியைப் பெறநினைத்து ஏமாந்த
பேதையர் போல் எனைநினையேல் பெரிய திருக்கதவம்
திறந்தருளி அணைந்திடுவாய் சிற்சபைவாழ் அரசே
சித்தசிகாமணியே என் திருநட நாயகனே 3

Koviloor Digital Library

# திருவடிப் புகழ்ச்சி

பரசிவம் சின்மயம் பூரணம் சிவபோக
பாக்கியம் பரம நிதியம்
பரசுகம் தன்மயம் சச்சிதா னந்தமெய்ப்
பரம ஏகாந்த நிலையம்
பரமஞானம் பரமசத்துவ மகத்துவம்
பரம கைவல்ய நிமலம்
பரமதத்துவ நிரதிசய நிட்களம்பூத
பௌதிகா தார நிபுணம் 4
பவ பந்த நிக்ரக வினோத சகளம் சிற்பரம்
பரானந்த சொரூபம்
பரிசயாதீதம் சுயம் சதோதயம் வரம்
பரமார்த்த முக்த மௌனம்
படன வேதாந்தாந்தம் ஆகமாந்தாந்த நிரு
பாதிகம் பரம சாந்தம்
பரநாத தத்துவாந்தம் சகச தரிசனம்
பகிரங்கம் அந்த ரங்கம் 8
பரவியோமம் பரம ஜோதிமயம் விபுலம்
பரம்பரம் அனந்தம் அசலம்
பரமலோகாதிக்க நித்திய சாம்பிராச்சியம்
பரபதம் பரம சூக்ஷமம்

Koviloor Digital Library

பராபரம் அநாமயம் நிராதரம் அகோசரம்
பரமதந்திரம் விசித்திரம்
பரா அமுதம் நிராகரம் விகாசனம் விகோடணம்
பரசுகோதயம் அக்ஷயம் 12
பரிபவ விமோசனம் குணரகிதம் விசுவம்
பதித்துவ பரோபரீணம்
பஞ்சகிர்த்திய சுத்த கர்த்தத்துவம் தற்
பரம் சிதம்பர விலாசம்
பகர்சுபாவம் புனிதம் அதுலம் அது லிதம்
அம்பராம்பர நிராலம்பனம்
பரவு சாக்ஷாத்கார நிர் அவயவம் கற்
பனாதீத நிருவிகாரம் 16
பரதுரிய அநுபவம் குருதுரிய பதம் அம்
பகம் பகாதீத விமலம்
பரம கருணாம்பரம் தற்பதம் கனசொற்
பதாதீதம் இன்பவடிவம்
பரோக்ஷ ஞானாதீதம் அபரோக்ஷ ஞானானு
பவ விலாசப் பிரகாசம்
பாவனாதீதம் குணாதீதம் உபசாந்த
பதமகா மௌனரூபம் 20
பரமபோதம் போத ரகித சகிதம்சம்
பவாதீதம் அப்ரமேயம்
பகரனந் தானந்தம் அமலம் உசிதம்
சிற்பதம் சதானந்த சாரம்

Koviloor Digital Library

பரையாதீ கரணாங்க சாங்க ஸௌபாங்கவிம்
பாகார நிருவி கற்பம்
பரசுகா ரம்பம் பரம் பிரம வித்தம்
பரானந்த புரண போகம் 24
பரிமிதா தீதம் பரோதயம் பரகிதம்
பரபரீணம் பராந்தம்
பரமாற்புதம் பரம சேதனம் பசுபாச
பாவனம் பரம மோட்சம்
பரமானு குணநவா தீதம் சிதாகாச
பாஸ்கரம் பரம போகம்
பரிபாக வேதன வரோ தயானந்த
பதபாலனம் பரம யோகம் 28
பரம சாத்திய அதீதானந்த போக்கியம்
பரிகதம் பரிவேத் தியம்
பரகேவலாத் விதானந் தானுபவ சத்த
பாதாக்ர சுத்த பலிதம்
பரமசுத்தாத் விதானந்த அனு பூதிகம்
பரிபூத சிற் குணாந்தம்
பரமசித்தாந்த நிகமாந்த சமரச சுத்த
பரமா னுபவ விலாசம் 32
தரமிகும் சர்வசா திட்டான சத்தியம்
சர்வ ஆனந்த போகம்
சார்ந்த சர்வாதார சர்வமங்கள சர்வ
சத்திதரம் என்றள விலாச்

Koviloor Digital Library

சகுண நிர்க்குணமுறு சலட்சண விலட்சணத்
தன்மை பலவாக நாடித்
தம்மைநிகர் மறையெலாம் இன்னும் அளவிட
நின்ற சங்கரன் அநாதி ஆதி 36
சாமகீதப் பிரியன் மணிகண்ட சீகண்ட
சசிகண்ட சாமகண்ட
சயசயவெனும் தொண்டர் இதயமலர் மேவிய
சடாமகுடன் மதன தகனன்
சந்திர சேகரன் இடபவாகனன் கங்காதரன்
சூல பாணி இறைவன்
தனிமுதல் உமாபதி புராந்தகன் பசுபதி
சயம்பு மாதேவன் அமலன் 40
தாண்டவன் தலைமாலை பூண்டவன் தொழும்
அன்பர் தங்களுக்கு அருளாண்டவன்
தன்னிகரில் சித்தெலாம் வல்லவன் வடதிசைச்
சைலமெனும் ஒரு வில்லவன்
தக்ஷணாமூர்த்தி அருண்மூர்த்தி புண்ணியமூர்த்தி
தகும்அட்ட மூர்த்தி யானோன்
தலைமைபெறு கணநாயகன் குழகன் அழகன்
மெய்ச்சாமி நம்தேவ தேவன் 44
சம்புவே தண்டன் பிறப்பிலான் முடிவிலான்
தாணு முக்கண்கள் உடையான்
சதுரன் கடாசல உரிப் போர்வையான் செந்
தழல்கரத் தேந்தி நின்றோன்

Koviloor Digital Library

சர்வ காரணன்விரற் காலகாலன் சர்வ
சம்பிரமன் சர்வேச் சுரன்
தகைகொள் பரமேச்சுரன் சிவபிரான் எம்பிரான்
தம்பிரான் செம்பொற்பதம். 48
தகவுபெறு நிட்பேத நிட்கம்பமாம் பரா
சத்தி வடிவாம் பொற்பதம்
தக்கநிட் காடின்ய சம்வேத நாங்க சிற்
சத்தி வடிவாம் பொற்பதம்
சாற்றரிய இச்சை ஞானம்கிரியை என்னுமுச்
சத்தி வடிவாம் பொற்பதம்
தடையிலா நிர்விடய சிற்குண சிவானந்த
சத்தி வடிவாம் பொற்பதம் 52
தகுவிந்தை மோகினியை மானை அசைவிக்கும் ஒரு
சத்தி வடிவாம் பொற்பதம்
தாழ்வில் ஈசானமுதல் மூர்த்திவரை ஐஞ்சத்தி
தஞ்சத்தியாம் பொற்பதம்
சவிகற்ப நிருவிகற்பம் பெறும் அனந்தமா
சத்திசத்தாம் பொற்பதம்
தடநிருப அவிவர்த்த சாமர்த்திய திருவருட்
சத்தி உருவாம் பொற்பதம் 56
தவாத சாந்தப்பதம் துவாத சாந்தப்பதம்
தரும்இணை மலர்ப் பூம்பதம்
சகலர் விஞ்ஞானகலர் பிரளயாகலர் இதய
சாட்சியாகிய பூம்பதம்

Koviloor Digital Library

தணிவிலா அணுபக்ஷ சம்பு பக்ஷங்களில்
சமரசமுறும் பூம்பதம்
தருபரம் சூக்குமம் தூலம் இவை நிலவிய
தமக்குள் உயிராம் பூம்பதம் 60
சரவசர அபரிமித விவித ஆன்மப் பகுதி
தாங்கும் திருப்பூம் பதம்
தண்டபிண்டாண்ட அகிலாண்ட பிரமாண்டம்
தடிக்க அருளும் பூம்பதம்
தத்வ தாத்விக சக சிருட்டி திதி சங்கார
சகல கர்த்துரு பூம்பதம்
சகசமல இருளகல நின்மல சுயம்ப்ரகாசம்
குலவும் நற்பூம்பதம் 64
மரபுறு மதாதீத வெளிநடுவில் ஆனந்த
மாநடனமிடு பூம்பதம்
மன்னும் வினைஒப்புமல பரிபாகம் வாய்க்கமா
மாயையை மிதிக்கும்பதம்
மலிபிறிவி மறலியின் அழுந்தும் உயிர் தமை
அருளின் மருவுற எடுக்கும் பதம்
வளர் ஊர்த்த வீரதாண்டவமுதல் பஞ்சகம்
மகிழ்ந்திட இயற்றும் பதம் 68
வல்லமுயலகன் மீதில் ஊன்றிய திருப்பதம்
வளந்தரத் தூக்கும் பதம்
வல்வினை யெலாந்தவிர்த்து அழியாத சுத்தநிலை
வாய்த்திட வழங்கும் பதம்

Koviloor Digital Library

மறைதுதிக் கும்பதம் மறைச்சிலம் பொளிர்ப்பதம்
மறைப் பாதுகைச் செம்பதம்
மறைமுடி மணிப்பதம் மறைக்கும் எட்டாப்பதம்
மறைப்பரி உகைக்கும் பதம் 72
மறையவன் உளங்கொண்டபதம் அமிதகோடியாம்
மறையவர் சிரஞ்சூழ் பதம்
மறையவன் சிரசிகாமணி யெனும் பதம்மலர் கொள்
மறையவன் வாழ்த்தும் பதம்
மறையவன் செயவுலகம் ஆக்கின்ற அதிகார
வாழ்வை ஈந்தருளும் பதம்
மறையவன் கனவினுங் காணாதபதம் அந்த
மறையவன் பரவும் பதம் 76
மால்விடை இவர்ந்திடு மலர்ப்பதம் தெய்வநெடு
மால் அருச்சிக்கும் பதம்
மால்பரவி நாடொறும் வணங்கும்பதம் மிக்கதிரு
மால்விழி இலங்கும் பதம்
மால்தேட நின்றபதம் ஓர் அனந்தங்கோடி
மால்தலை அலங்கற் பதம்
மான்முடிப்பதம் நெடியமால் உளப்பதம் அந்த
மாலும் அறிவரிதாம் பதம் 80
மால்கொள் அவதாரங்கள் பத்தினும் வழிபட்டு
வாய்மைபெற நிற்கும் பதம்
மாலுலகு காக்கின்ற வண்மைபெற்று அடிமையின்
வதிந்திட அளிக்கும் பதம்

வரையுறும் உருத்திரர்கள் புகழ்பதம் பலகோடி
    வயவுருத்திரர் சூழ்பதம்
வாய்ந்திடும் உருத்திரர்க்கு இயல்கொள் முத்
    தொழில்செய்யும் வண்மைதந் தருளும்பதம் 84
வான இந்திரராதி எண்டிசைக் காவலர்கள்
    மாதவத் திறனாம் பதம்
மதியிரவி ஆதிசுரர் அசுரர் அந்தரர் வான
    வாசிகள் வழுத்தும் பதம்
மணியுரகர் கருடர் காந்தருவர் விஞ்சையர்சித்தர்
    மாமுனிவர் ஏத்தும் பதம்
மாநிருதர் பைசாசர் கிம்புருடர் யக்ஷர்கள்
    மதித்து வர மேற்கும் பதம் 88
மன்னு கின்னரர் பூதர் வித்தியாதரர் போகர்
    மற்றையர்கள் பற்றும் பதம்
வண்மைபெறு நந்திமுதல் சிவகணத் தலைவர்கள்
    மனக்கோயில் வாழும் பதம்
மாதேவி எங்கள் மலைமங்கை என்னம்மை மென்
    மலர்க்கையால் வருடும் பதம்
மறலியை உதைத்தருள் கழற்பதம் அரக்கனை
    மலைக்கீழ் அடர்க்கும் பதம் 92
வஞ்சமறு நெஞ்சினிடை எஞ்சலற விஞ்சுதிறன்
    மஞ்சுற விளங்கும் பதம்
வந்தனைசெய் புந்தியவர் தந்துயர் தவிர்ந்திட
    உள் மந்தண நவிற்றும் பதம்

Koviloor Digital Library

மாறிலொரு மாறனுள மீறின் மகிழ் வீறியிட
மாறி நடமாடும் பதம்

மறக்கருணையுந் தனி அறக்கருணையுந் தந்து
வாழ்விக்கும் ஒண்மைப் பதம்

இரவுறும் பகலடியர் இருமருங்கினும் உறுவர்
என வயங்கிய சீர்ப்பதம்

எம்பந்தமற எமதுசம்பந்த வள்ளல் மொழி
இயன்மண மணக்கும் பதம்

ஈவரசர் எம்முடைய நாவரசர் சொற்பதிக
இசைபரி மளிக்கும் பதம்

ஏவலார் புகழ் எமது நாவலாரூரர் புகல்
இசைதிருப் பாட்டுப்பதம்

ஏதவூர் தங்காத வாதவூர் எம்கோவின்
இன் சொல்மணி அணியும் பதம்

எல்லூரு மணிமாட நல்லூரின் அப்பர் முடி
இடைவைகி அருள்மென் பதம்

எடுமேல் எனத்தொண்டர் முடிமேல் மறுத்திடவும்
இடைவலிந்து ஏறும் பதம்

எழில்பரவை யிசைய ஆரூர் மருகினருள் கொண்டு
இராமுழுதும் உலவும் பதம்

இன்தொண்டர் பசியறக் கச்சூரின் மனைதொறும்
இரக்கநடை கொள்ளும் பதம்

இளைப்புறல் அறிந்து அன்பர் பொதிசோறு அருந்த
முன்னிருந்து பின்நடக்கும் பதம்

Koviloor Digital Library

எறிவிறகு விற்க வளர்கூடற் றெருத்தொறும்
இயங்கிய இரக்கப் பதம்
இறுவைகையங் கரையின் மண்படப் பல்கால்
எழுந்து விளையாடும் பதம் 108
எங்கே மெய் அன்பருளர் அங்கே நலந்தர
எழுந்தருளும் வண்மைப் பதம்
எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம் அன்றே
இரங்கி ஈந்தருளும் பதம்
என்போன்றவர்க்கு மிகு பொன் போன்ற கருணை
தந்து இதயத்திருக்கும் பதம்
என்னுயிரையன்ன பதம் என்னுயிர்க்குயிராய்
இலங்கு செம்பதுமப் பதம் 112
என் அறிவெனும் பதம் என் அறிவினுக்கறிவாய்
இருந்த செங்கமலப் பதம்
என் அன்பெனும் பதம் என் அன்பிற்கு வித்தாய்
இசைந்த கோகனகப் பதம்
என் தவமெனும் பதம் என் மெய்த்தவப் பயனாய்
இயைந்த செஞ் சலசப் பதம்
என்னிரு கண்மணியான பதம் என் கண்மணிகளுக்கு
இனியநல் விருந்தாம் பதம் 116
என் செல்வமாம்பதம் என்மெய்ச்செல்வ வருவாய்
யெனும் தாமரைப் பொற்பதம்
என்பெரிய வாழ்வான பதம்என் களிப்பாம்
இரும்பதம் என்நிதியாம் பதம்

Koviloor Digital Library

என்தந்தை தாயெனும் இணைப்பதம் என்
உறவாம் இயற்பதம் என்நட்பாம் பதம்
என்குருவெனும் பதம்என் இட்டதெய்வப் பதம்
எனதுகுல தெய்வப் பதம் 120
என்பொறிகளுக் கெல்லாம் நல்விடயமாம் பதம் என்
எழுமையும் விடாப்பொற்பதம்
என்குறையெலாம் தவிர்த்துஆட் கொண்டபதம்
எனக்கு எய்ப்பில் வைப்பாகும் பதம்
எல்லார்க்கும் நல்லபதம் எல்லாஞ்செய் வல்லபதம்
இணையிலாத் துணையாம் பதம்
எழுமனம் உடைந்து உடைந்து உருகிநெகிழ்
பத்தர்கட்கு இன்னமுதமாகும் பதம் 124
எண்ணுறிற் பாலில்நறு நெய்யொடு சருக்கரை
இசைந்தென இனிக்கும் பதம்
ஏற்றமுக்கனிபாகு கன்னல் கற்கண்டு
தேனென்ன மதுரிக்கும் பதம்
எங்கள்பதம் எங்கள் பதம் என்று சமயத்தேவர்
இசை வழக்கிடு நற்பதம்
ஈறிலாப்பதம் எலாந்தரு திருப்பதம் அழிவில்
இன்பு உதவு கின்ற பதமே. 128

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

## "சுத்த சன்மார்க்க குரு தோத்திரம்"

வந்தருள் புரிக! விரைந்திது தருணம்!
மாமணி மன்றிலே ஞான
சுந்தர வடிவச் சோதியாய் விளங்கும்
சுத்த சன்மார்க்க சற்குருவே!
தந்தருள் புரிக! வரமெலாம் வல்ல
தனியருட் ஜோதியை எனது
சிந்தையில் புணர்ப்பித்து என்னொடுங் கலந்தே
செய்துவித் தருள்க, செய் வகையே.

## அருட்பெருஞ்ஜோதி அகவல்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

அருட்சிவ நெறிசார் அருட்பெரு நிலைவாழ்
அருட்சிவ பதியாம் அருட்பெருஞ் ஜோதி

ஆகம முடிமேல் ஆரண முடிமேல்
ஆகநின் றோங்கிய அருட்பெருஞ் ஜோதி 6

Koviloor Digital Library

இகநிலைப் பொருளாய்ப் பரநிலைப் பொருளாய்
அகமறப் பொருந்திய அருட்பெருஞ் ஜோதி

ஈனமின்று இகபரத்து இரண்டின்மேற் பொருளாய்
ஆனலின்று ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

உரைமனங் கடந்த ஒருபெரு வெளிமேல்
அரைசுசெய் தோங்கும் அருட்பெருஞ் ஜோதி

ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும்
ஆக்கமும் அருளிய அருட்பெருஞ் ஜோதி

எல்லையில் பிறப்பெனும் இருங்கடல் கடத்தியென்
அல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

ஏறா நிலைமிசை ஏற்றியென் றனக்கே
ஆறாறு காட்டிய அருட்பெருஞ் ஜோதி

ஐயமும் திரிபும் அறுத்தெனது உடம்பினுள்
ஐயமும் நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

ஒன்றென இரண்டென ஒன்றிரண் டெனஇவை
அன்றென விளங்கிய அருட்பெருஞ் ஜோதி

ஓதாது உணர்ந்திட ஒளியளித்து எனக்கே
ஆதாரம் ஆகிய அருட்பெருஞ் ஜோதி

ஔவியம் ஆதியோர் ஆறுந் தவிர்த்தபேர்
அவ்வியல் வழுத்தும் அருட்பெருஞ் ஜோதி 26

Koviloor Digital Library

திருநிலைத் தனிவெளி சிவவெளி எனுமோர்
அருள்வெளிப் பதிவளர் அருட்பெருஞ் ஜோதி

சுத்தசன் மார்க்க சுகத்தனி வெளியெனும்
அத்தகைச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

சுத்தமெய்ஞ் ஞான சுகோதய வெளியெனும்
அத்து வித்ச்சபை அருட்பெருஞ் ஜோதி

தூய கலாந்த சுகந்தரு வெளியெனும்
ஆயசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி

ஞான யோகாந்த நடத்திரு வெளியெனும்
ஆனியில் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

விமலபோ தாந்தமா மெய்ப்பொருள் வெளியெனும்
அமலசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி

பெரிய நாதாந்தப் பெருநிலை வெளியெனும்
அரியசிற் றம்பலத்து அருட்பெருஞ் ஜோதி

சுத்த வேதாந்தத் துரியமேல் வெளியெனும்
அத்தகு சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

சுத்த சித்தாந்த சுகப்பெரு வெளியெனும்
அத்தனிச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

தகரமெய்ஞ் ஞானத் தனிப்பெரு வெளியெனும்
அகர நிலைப்பதி அருட்பெருஞ் ஜோதி 46

Koviloor Digital Library

தத்துவா தீத தனிப்பொருள் வெளியெனும்
அத்திரு அம்பலத்து அருட்பெருஞ் ஜோதி

சச்சிதா னந்தத் தனிப்பர வெளியெனும்
அச்சியல் அம்பலத்து அருட்பெருஞ் ஜோதி

சாகாக் கலைநிலை தழைத்திடு வெளியெனும்
ஆகாயத் தொளிர் அருட்பெருஞ் ஜோதி

காரண காரியம் காட்டிடு வெளியெனும்
ஆரணச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

ஏகம் அனேகம் எனப்பகர் வெளியெனும்
ஆகமச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

வேதா கமங்களின் விளைவுகட்கு எல்லாம்
ஆதார மாம்சபை அருட்பெருஞ் ஜோதி

என்றா தியச்சுடர்க்கு இயல்நிலை யாயது
அன்றாம் திருச்சபை அருட்பெருஞ் ஜோதி

சமயம் கடந்த தனிப்பொருள் வெளியாய்
அமையும் திருச்சபை அருட்பெருஞ் ஜோதி

முச்சுடர் களுமொளி முயங்குற அளித்தருள்
அச்சுட ராம்சபை அருட்பெருஞ் ஜோதி

துரியமும் கடந்த சுகபூரணந் தரும்
அரியசிற் றம்பலத்து அருட்பெருஞ் ஜோதி 66

Koviloor Digital Library

எவ்வகைச் சுகங்களும் இனிதுற அளித்தருள்
அவ்வகைச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

இயற்கை உண்மையதாய் இயற்கை இன்பமுமாம்
அயர்ப்பிலாச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

சாக்கிரா தீதத் தனிவெளி யாய்நிறை
வாக்கிய சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

சுட்டுதற்கு அரிதாம் சுகாதீத வெளியெனும்
அட்டமேற் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

நவந்தவிர் நிலைகளும் நண்ணுமோர் நிலையாய்
அவந்தவிர் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

உபயபக் கங்களும் ஒன்றெனக் காட்டிய
அபயசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி

சேகர மாம்பல சித்தி நிலைக்கெலாம்
ஆகர மாம்சபை அருட்பெருஞ் ஜோதி

மனாதிகட்கு அரிய மதாதீத வெளியாம்
அனாதிசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி

ஓதிநின்று உணர்ந்துஉணர்ந்து உணர்தற்கு அரிதாம்
ஆதிசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி

வாரமும் அழியா வரமும் தருந்திரு
ஆரமு தாம்சபை அருட்பெருஞ் ஜோதி 86

Koviloor Digital Library

இழியாப் பெருநலம் எல்லாம் அளித்தருள்
அழியாச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

கற்பம் பலபல கழியினும் அழிவுறா
அற்புதம் தருஞ்சபை அருட்பெருஞ் ஜோதி

எனைத்துந் துன்பிலா இயலளித்து எண்ணிய
அனைத்துந் தருஞ்சபை அருட்பெருஞ் ஜோதி

பாணிப்பு இலதாய்ப் பரவினோர்க்கு அருள்புரி
ஆணிப்பொன் அம்பலத்து அருட்பெருஞ் ஜோதி

எம்பலம் எனத்தொழுது ஏத்தினோர்க்கு அருள்புரி
அம்பலத்து ஆடல்செய் அருட்பெருஞ் ஜோதி

தம்பர ஞான சிதம்பரம் எனுமோர்
அம்பரத்து ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

எச்சபை பொதுவென இயம்பினர் அறிஞர்கள்
அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ் ஜோதி

வாடுதல் நீக்கிய மணிமன்று இடையே
ஆடுதல் வல்ல அருட்பெருஞ் ஜோதி

நாடகத் திருச்செயல் நவிற்றிடும் ஒருபேர்
ஆடகப் பொதுவொளிர் அருட்பெருஞ் ஜோதி

கற்பனை முழுவதும் கடந்தொளி தருமோர்
அற்புதச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி 106

Koviloor Digital Library

ஈன்றநற் றாயினும் இனிய பெருந்தயவு
ஆன்றசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி

இன்புறு நானுளத்து எண்ணியாங்கு எண்ணியாங்கு
அன்புறத் தருசபை அருட்பெருஞ் ஜோதி

எம்மையும் என்னைவிட்டு இறையும் பிரியாது
அம்மை அப்பனுமாம் அருட்பெருஞ் ஜோதி

பிரிவுற்று அறியாப் பெரும்பொருளாய் என்
அறிவுக்கு அறிவாம் அருட்பெருஞ் ஜோதி

சாதியும் மதமும் சமயமும் காணா
ஆதி அனாதியாம் அருட்பெருஞ் ஜோதி

தநுகர ணாதிகள் தாங்கடந்து அறியுமோர்
அநுபவம் ஆகிய அருட்பெருஞ் ஜோதி

உனுமுணர் உணர்வாய் உணர்வெலாம் கடந்த
அநுபவா தீத அருட்பெருஞ் ஜோதி

பொதுஉணர் உணரும் போதலால் பிரித்தே
அதுவெனில் தோன்றா அருட்பெருஞ் ஜோதி

உளவினில் அறிந்தால் ஒழியமற்று அளக்கின்
அளவினில் அளவாம் அருட்பெருஞ் ஜோதி

என்னையும் பணிகொண்டு இறவா வரமளித்து
அன்னையில் உவந்த அருட்பெருஞ் ஜோதி **126**

Koviloor Digital Library

ஓதி ஓதாமல் உறவெனுக்கு அளித்த
ஆதியீறு இல்லா அருட்பெருஞ் ஜோதி

படியடி வான்முடி பற்றினும் தோற்றா
அடிமுடி எனுமோர் அருட்பெருஞ் ஜோதி

பவனத்தின் அண்டப் பரப்பின் எங்கெங்கும்
அவனுக்கு அவனாம் அருட்பெருஞ் ஜோதி

திவளுற்ற அண்டத் திரளின் எங்கெங்கும்
அவளுக்கு அவளாம் அருட்பெருஞ் ஜோதி

மதனுற்ற அண்ட வரைப்பின் எங்கெங்கும்
அதனுக்கு அதுவாம் அருட்பெருஞ் ஜோதி

எப்பாலு மாய்வெளி எல்லாங் கடந்துமேல்
அப்பாலும் ஆகிய அருட்பெருஞ் ஜோதி

வல்லதாய் எல்லாம் ஆகி எல்லாமும்
அல்லதாய் விளங்கும் அருட்பெருஞ் ஜோதி

எப்பொருள் மெய்ப்பொருள் என்பர்மெய் கண்டோர்
அப்பொருள் ஆகிய அருட்பெருஞ் ஜோதி

தாங்ககி லாண்ட சராசர நிலைநின்று
ஆங்குற விளங்கும் அருட்பெருஞ் ஜோதி

சத்தர்கள் எல்லாம் தழைத்திட அகம்புறத்து
அத்திசை விளங்கும் அருட்பெருஞ் ஜோதி 146

Koviloor Digital Library

சத்திகள் எல்லாம் தழைக்க எங்கெங்கும்
அத்தகை விளங்கும் அருட்பெருஞ் ஜோதி

முந்துறும் ஐந்தொழில் மூர்த்திகள் பலர்க்கும்
ஐந்தொழில் அளிக்கும் அருட்பெருஞ் ஜோதி

பெரிதினும் பெரிதாய் சிறிதினும் சிறிதாய்
அரிதினும் அரிதாம் அருட்பெருஞ் ஜோதி

காட்சியும் காணாக் காட்சியும் அதுதரும்
ஆட்சியும் ஆகிய அருட்பெருஞ் ஜோதி

இன்புறு சித்திகள் எல்லாம் புரிகவென்று
அன்புடன் எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

இறவா வரமளித்து என்னைமேல் ஏற்றிய
அறவாழி யாந்தனி அருட்பெருஞ் ஜோதி

நானந்தம் இல்லா நலம்பெற எனக்கே
ஆனந்தம் நல்கிய அருட்பெருஞ் ஜோதி

எண்ணிய எண்ணியாங்கு இயற்றுக என்றெனை
அண்ணியுள் ஓங்கும் அருட்பெருஞ் ஜோதி

மேயினை மெய்ப்பொருள் விளங்கினை நீயது
ஆயினை என்றருள் அருட்பெருஞ் ஜோதி

எண்ணிற் செழுந்தேன் இனியதெள் அமுதென
அண்ணித்து இனிக்கும் அருட்பெருஞ் ஜோதி 166

Koviloor Digital Library

சிந்தையில் துன்பொழி சிவம்பெறு கெனத்தொழில்
ஐந்தையும் எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

எங்கெங்கு இருந்துஉயிர் ஏதெது வேண்டினும்
அங்கங்கு இருந்தருள் அருட்பெருஞ்ஜோதி

சகமுதல் புறப்புறம் தங்கிய அகப்புறம்
அகம்புறம் முற்றுமாம் அருட்பெருஞ் ஜோதி

சிகரமும் வகரமும் சேர்தனி உகரமும்
அகரமும் ஆகிய அருட்பெருஞ் ஜோதி

உபரச வேதியின் உபயமும் பரமும்
அபரமும் ஆகிய அருட்பெருஞ் ஜோதி

மந்தணம் இதுவென மறுவிலா மதியால்
அந்தணர் வழுத்தும் அருட்பெருஞ் ஜோதி

எம்புயக் கனியென எண்ணுவார் இதய
அம்புயத்து அமர்ந்த அருட்பெருஞ் ஜோதி

செடியறுத்தே திட தேகமும் போகமும்
அடியருக்கே தரும் அருட்பெருஞ் ஜோதி

துன்பறுத்து ஒருசிவ துரிய சுகந்தனை
அன்பருக்கே தரும் அருட்பெருஞ் ஜோதி

பொதுவது சிறப்பது புதியது பழையதென்று
அதுவது வாய்த்திகழ் அருட்பெருஞ் ஜோதி 186

Koviloor Digital Library

சேதனப் பெருநிலை திகழ்தரும் ஒருபரை
ஆதனத்து ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

ஓமயத் திருவுரு உவப்புடன் அளித்தெனக்கு
ஆமயத் தடைதவிர் அருட்பெருஞ் ஜோதி

எப்படி எண்ணியது என்கருத்து இங்கெனக்கு
அப்படி அருளிய அருட்பெருஞ் ஜோதி

எத்தகை விழைந்தன என்மனம் இங்கெனக்கு
அத்தகை அருளிய அருட்பெருஞ் ஜோதி

இங்குறத் திரிந்துஉளம் இளையா வகையெனக்கு
அங்கையில் கனியாம் அருட்பெருஞ் ஜோதி

பாருயப் புரிகெனப் பணித்தெனக்கு அருளியென்
ஆருயிர்க் குள்ளொளிர் அருட்பெருஞ் ஜோதி

தேவியுற்று ஒளிர்தரு திருவுரு உடன்எனது
ஆவியில் கலந்தொளிர் அருட்பெருஞ் ஜோதி

எவ்வழி மெய்வழி என்ப வேதாகமம்
அவ்வழி எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

வையமும் வானமும் வாழ்த்திட எனக்கருள்
ஐயறிவு அளித்த அருட்பெருஞ் ஜோதி

சாமாறு அனைத்தும் தவிர்த்திங்கு எனக்கே
ஆமாறு அருளிய அருட்பெருஞ் ஜோதி 206

Koviloor Digital Library

சத்தியமாம் சிவ சத்தியை ஈந்தெனக்கு
அத்திறல் வளர்க்கும் அருட்பெருஞ் ஜோதி

சாவா நிலையிது தந்தனம் உனக்கே
ஆவா எனவருள் அருட்பெருஞ் ஜோதி

சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் ஜோதி

மயர்ந்திடேல் சிறிதும் மனந்தளர்ந்து அஞ்சேல்
அயர்ந்திடேல் என்றருள் அருட்பெருஞ் ஜோதி

தேசுறத் திகழ்தரு திருநெறிப் பொருளியல்
ஆசறத் தெரித்த அருட்பெருஞ் ஜோதி

காட்டிய உலகெலாம் கருணையால் சித்தியின்
ஆட்டியல் புரியும் அருட்பெருஞ் ஜோதி

எங்குலம் எம்மினம் என்ப தொண்ணூற்றாறு
அங்குலம் என்றருள் அருட்பெருஞ் ஜோதி

எம்மதம் எம்மிறை என்ப உயிர்த்திறள்
அம்மதம் என்றருள் அருட்பெருஞ் ஜோதி

கூறிய க்ருநிலை குலவிய கீழ்மேல்
ஆறியல் எனவுரை அருட்பெருஞ் ஜோதி

எண்தர முடியாது இலங்கிய பற்பல
அண்டமும் நிறைந்தொளிர் அருட்பெருஞ் ஜோதி 226

Koviloor Digital Library

சாருயிர்க்கு எல்லாம் தாரக மாம்பரை
ஆருயிர்க்கு உயிராம் அருட்பெருஞ் ஜோதி

வாழி நீடுழி வாழியென்று ஓங்குபேர்
ஆழியை அளித்த அருட்பெருஞ் ஜோதி

மாய்ந்தவர் மீட்டும் வருநெறி தந்திதை
ஆய்ந்திடென்று உரைத்த அருட்பெருஞ் ஜோதி

எச்சம் நினக்கிலை எல்லாம் பெறுகவென்று
அச்சம் தவிர்த்தவென் அருட்பெருஞ் ஜோதி

நீடுக நீயே நீளுலகு அனைத்தும் நின்றுஆடுக
என்றவென் அருட்பெருஞ் ஜோதி

முத்திறல் வடிவமும் உன்னியாங்கு எய்துறும்
அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

மூவகைச் சித்தியின் முடிபுகள் முழுவதும்
ஆவகை எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

கரும சித்திகளின் கலைபல கோடியும்
அரசுற எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

யோக சித்திகள்வகை உறுபல கோடியும்
ஆகவென்று எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

ஞான சித்தியின்வகை நல்விரிவு அனைத்தும்
ஆனியின்று எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி **246**

Koviloor Digital Library

புடையுறு சித்தியின் பொருட்டே முத்தியை
அடைவது என்றருளிய அருட்பெருஞ் ஜோதி

முத்தியென்பது நிலைமுன் உறு சாதனம்
அத்தக என்றவென் அருட்பெருஞ் ஜோதி

சித்தியென்பது நிலை சேர்ந்த அநுபவம்
அத்திறல் என்றவென் அருட்பெருஞ் ஜோதி

ஏகசிற் சித்தியே இயலுற அனேகம்
ஆகியது என்றவென் அருட்பெருஞ் ஜோதி

இன்ப சித்தியின்இயல் ஏகம் அனேகம்
அன்பருக்கு என்றவென் அருட்பெருஞ் ஜோதி

எட்டிரண்டு என்பன இயலுமுற் படியென
அட்டநின்று அருளிய அருட்பெருஞ் ஜோதி

இப்படி கண்டனை இனியுறு படியெலாம்
அப்படியே எனும் அருட்பெருஞ் ஜோதி

படிமுடி கடந்தனை பாரிது பாரென
அடிமுடி காட்டிய அருட்பெருஞ் ஜோதி

ஜோதியுட் ஜோதியின் சொருபமே அந்தம்
ஆதியென்று அருளிய அருட்பெருஞ் ஜோதி

இந்தசிற் ஜோதியின் இயலுறு ஆதி
அந்தமென்று அருளிய அருட்பெருஞ் ஜோதி 266

Koviloor Digital Library

ஆதியும் அந்தமும் அறிந்தனை நீயே
ஆதியென்று அருளிய அருட்பெருஞ் ஜோதி

நல்லமுது என்னொரு நாவுளம் காட்டியென்
அல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

கற்பகம் என்னுளம் கைதனில் கொடுத்தே
அற்புதம் இயற்றெனும் அருட்பெருஞ் ஜோதி

கதிர்நலம் என்னிரு கண்களில் கொடுத்தே
அதிசயம் இயற்றெனும் அருட்பெருஞ் ஜோதி

அருளொளி என்தனி அறிவினில் விரித்தே
அருள்நெறி விளக்கெனும் அருட்பெருஞ் ஜோதி

பரையொளி என்மனப் பதியினில் விரித்தே
அரசது இயற்றெனும் அருட்பெருஞ் ஜோதி

வல்லப சத்திகள் வகையெலாம் அளித்தெனது
அல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

ஆரியல் அகம்புறம் அகப்புறம் புறப்புறம்
ஆரமுது எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

சூரிய சந்திர ஜோதியுள் ஜோதியென்று
ஆரியர் புகழ்தரும் அருட்பெருஞ் ஜோதி

பிறிவேது இனியுனைப் பிடித்தனம் உனக்குநம்
அறிவே வடிவெனும் அருட்பெருஞ் ஜோதி 286

Koviloor Digital Library

எஞ்சேல் உலகினில் யாதொன்று பற்றியும்
அஞ்சேல் என்றருள் அருட்பெருஞ் ஜோதி

மாண்டு உழலாவகை வந்து இளங்காலையே
ஆண்டுகொண்டு அருளிய அருட்பெருஞ் ஜோதி

பற்றுகள் அனைத்தையும் பற்றறத் தவிர்த்தெனது
அற்றமும் நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

சமயம் குலமுதல் சார்பெலாம் விடுத்த
அமயம் தோன்றிய அருட்பெருஞ் ஜோதி

வாய்தற்கு உரித்தெனும் மறை ஆகமங்களால்
ஆய்தற்கு அரிய அருட்பெருஞ் ஜோதி

எல்லாம் வல்லசித்து எனக்களித்து எனக்குனை
அல்லாது இலையெனும் அருட்பெருஞ் ஜோதி

நவையிலா உளத்தின் நாடிய நாடிய
அவையெலாம் அளிக்கும் அருட்பெருஞ் ஜோதி

கூறுதைத்து என்பால் குற்றமும் குணங்கொண்டு
ஆற்றன்மிக் களித்த அருட்பெருஞ் ஜோதி

நன்றறிவு அறியா நாயினேன் தனையும்
அன்றுவந்து ஆண்ட அருட்பெருஞ் ஜோதி

நாயினும் கடையேன் ஈயினும் இழிந்தேன்
ஆயினும் அருளிய அருட்பெருஞ் ஜோதி 306

Koviloor Digital Library

தோத்திரம் புகலேன் பாத்திரம் அல்லேன்
ஆத்திரம் அளித்த அருட்பெருஞ் ஜோதி

எச்சோ தனைகளும் இயற்றாது எனக்கே
அச்சோ என்றருள் அருட்பெருஞ் ஜோதி

ஏறா நிலைநடு ஏற்றியென் றனைஈண்டு
ஆறாறு கடத்திய அருட்பெருஞ் ஜோதி

தாபத் துயரம் தவிர்த்துல குறுமெலா
ஆபத்தும் நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

மருட்பகை தவிர்த்தெனை வாழ்வித்து எனக்கே
அருட்குரு வாகிய அருட்பெருஞ் ஜோதி

உருவமும் அருவமும் உபயமும் ஆகிய
அருள்நிலை தெரித்த அருட்பெருஞ் ஜோதி

இருளறுத்து என்னுளத்து எண்ணியாங்கு அருளி
அருளமுது அளித்த அருட்பெருஞ் ஜோதி

தெருள்நிலை இதுவெனத் தெருட்டிஎன் உளத்திருந்து
அருள்நிலை காட்டிய அருட்பெருஞ் ஜோதி

பொருட்பதம் எல்லாம் புரிந்து மேலோங்கிய
அருட்பதம் அளித்த அருட்பெருஞ் ஜோதி

உருள்சகடு ஆகிய உளஞ்சலி யாவகை
அருள்வழி நிறுத்திய அருட்பெருஞ் ஜோதி 326

Koviloor Digital Library

வெருள்மன மாயை வினையிருள் நீக்கியுள்
அருள்விளக்கு ஏற்றிய அருட்பெருஞ் ஜோதி

சுருள்விரி உடைமனச் சுழலெலாம் அறுத்தே
அருள்ஒளி நிரப்பிய அருட்பெருஞ் ஜோதி

விருப்போடு இகலுறு வெறுப்பும் தவிர்த்தே
அருட்பேறு அளித்த அருட்பெருஞ் ஜோதி

அருட்பேர் தரித்து உலகனைத்தும் மலர்ந்திட
அருட்சீர் அளித்த அருட்பெருஞ் ஜோதி

உலகெலாம் பரவஎன் உள்ளத்து இருந்தே
அலகிலா ஒளிசெய் அருட்பெருஞ் ஜோதி

விண்ணினுள் விண்ணாய் விண்ணடு விண்ணாய்
அண்ணி நிறைந்த அருட்பெருஞ் ஜோதி!

விண்ணுறு விண்ணாய் விண்ணிலை விண்ணாய்
அண்ணி வயங்கும் அருட்பெருஞ் ஜோதி

காற்றினுட் காற்றாய் காற்றிடைக் காற்றாய்
ஆற்றலின் ஓங்கும் அருட்பெருஞ் ஜோதி

காற்றுறு காற்றாய்க் கானிலைக் காற்றாய்
ஆற்ற விளங்கும் அருட்பெருஞ் ஜோதி

அனலினுள் அனலாய் அனல்நடு அனலாய்
அனலுற விளங்கும் அருட்பெருஞ் ஜோதி 346

Koviloor Digital Library

அனலுறும் அனலாய் அனனிலை அனலாய்
அனலுற வயங்கும் அருட்பெருஞ் ஜோதி

புனலினுட் புனலாய்ப் புனலிடைப் புனலாய்
அனையென வயங்கும் அருட்பெருஞ் ஜோதி

புனலுறு புனலாய்ப் புனனிலைப் புனலாய்
அனையெனப் பெருகும் அருட்பெருஞ் ஜோதி

புவியினுட் புவியாய்ப் புவிநடுப் புவியாய்
அவைதர வயங்கும் அருட்பெருஞ் ஜோதி

புவியுறு புவியாய்ப் புவிநிலைப் புவியாய்
அவைகொள விரிந்த அருட்பெருஞ் ஜோதி

விண்ணிலை சிவத்தின் வியனிலை அளவி
அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வளிநிலை சத்தியின் வளர்நிலை அளவி
அளியுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பது நிலைநடு நிலையெலாம் அளவி
அருப்பிட வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நீர்நிலை திரைவளர் நிலைதனை அளவி
ஆர்வுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புவிநிலை சுத்தமாம் பொற்பதி அளவி
அவையுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 366

Koviloor Digital Library

மண்ணினில் திண்மையை வகுத்ததில் கிடக்கை
அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணினில் பொன்மை வகுத்ததில் ஐமையை
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணினில் ஐம்பூ வகுத்ததில் ஐந்திறம்
அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணினில் நாற்றம் வகுத்தது பல்வகை
அண்ணுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணினில் பற்பல வகைகரு நிலையியல்
அண்ணுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணினில் ஐந்தியல் வகுத்ததில் பல்பயன்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணிடை அடிநிலை வகுத்ததில் பன்னிலை
அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணில் ஐந்தைந்து வகையும் கலந்துகொண்டு
அண்ணுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணியல் சத்திகள் மண்செயல் சத்திகள்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணுருச் சத்திகள் மண்கலைச் சத்திகள்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 386

Koviloor Digital Library

மண்ணொளிச் சத்திகள் மண்கருச் சத்திகள்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மண்கணச் சத்திகள் வகைபல பலவும்
அண்கொள அமைத்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணிலைச் சத்தர்கள் வகைபல பலவும்
அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

மண்கரு உயிர்த்தொகை வகைவிரி பலவா
அண்கொள அமைத்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணினில் பொருள்பல வகைவிரி வெவ்வேறு
அண்ணுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணுறு நிலைபல வகுத்ததில் செயல்பல
அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணிடைப் பக்குவம் வகுத்ததில் பயன்பல
அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

மண்ணியல் பலபல வகுத்ததில் பிறவும்
அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

நீரினில் தண்மையும் நிகழூர் ஒழுக்கமும்
ஆருற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நீரினில் பசுமையை நிறுத்தி அதில்பல
ஆருற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 406

Koviloor Digital Library

நீரிடைப் பூவியல் நிகழுறு திறவியல்
ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி!

நீரினில் சுவைநிலை நிரைத்ததில் பல்வகை
ஆருறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

நீரினிற் கருநிலை நிகழ்த்திய பற்பல
ஆருற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நீரிடை நான்கியல் நிலவுவித்து அதிற்பல
ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நீரிடை அடிநடு நிலையுற வகுத்தனல்
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

நீரிடை ஒளியியல் நிகழ்பல குணவியல்
ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நீரிடைச் சத்திகள் நிகழ்வகை பலபல
ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நீரினில் சத்தர்கள் நிறைவகை யுறைவகை
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

நீரிடை உயிர்பல நிகழுறு பொருள்பல
ஆருற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

நீரிடை நிலைபல நிலையுறு செயல்பல
ஆர்கொள வகுத்த அருட்பெருஞ் ஜோதி 426

Koviloor Digital Library

நீருறு பக்குவ நிறைவுறு பயன்பல
ஆருற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

நீரியல் பலபல நிரைத்ததில் பிறவும்
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

தீயினில் சூட்டியல் சேர்தரச் செலவியல்
ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தீயினில் வெண்மைத் திகழியல் பலவா
ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தீயிடைப் பூவெலாந் திகழுறு திறமெலாம்
ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தீயிடை ஒளியே திகழுற அமைத்ததில்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தீயிடை அருநிலை திருநிலை கருநிலை
ஆயுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

தீயிடை மூவியல் செறிவித்து அதிற்பல
ஆய்வகை அமைத்த அருட்பெருஞ் ஜோதி

தீயிடை நடுநிலை திகழ்நடு நடுநிலை ஆயுற
அமைத்த அருட்பெருஞ் ஜோதி

தீயிடைப் பெருந்திறல் சித்திகள் பலபல
ஆயுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 446

Koviloor Digital Library

தீயிடைச் சித்துகள் செப்புறும் அனைத்தும்
ஆயுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

தீயிடைச் சத்திகள் செறிதரு சத்தர்கள்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தீயிடை உயிர்பல திகழுறு பொருள்பல
ஆய்வகை அமைத்த அருட்பெருஞ் ஜோதி

தீயிடை நிலைபல திகழ்செயல் பலபயன்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தீயினில் பக்குவம் சேர்குணம் இயற்குணம்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தீயிடை உருக்கியல் சிறப்பியல் பொதுவியல்
ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தீயியல் பலபல செறித்ததில் பலவும்
ஆயுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி

காற்றிடை அசையியல் கலையியல் உயிரியல்
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

காற்றிடைப் பூவியல் கருதுறு திறவியல்
ஆற்றலின் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

காற்றினில் ஊறியல் காட்டுறு பலபல
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி 466

Koviloor Digital Library

காற்றினில் பெருநிலை கருநிலை அளவில
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

காற்றிடை யீரியல் காட்டி அதில்பல
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

காற்றினில் இடைநடு கடைநடு அகம்புறம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

காற்றினில் குணம்பல கணம்பல வணம்பல
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

காற்றிடைச் சத்திகள் கணக்கில உலப்பில
ஆற்றவும் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

காற்றிடைச் சத்தர்கள் கணிதங் கடந்தன
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

காற்றிடை உயிர்பல கதிபல கலைபல
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

காற்றிடை நானிலைக் கருவிகள் அனைத்தையும்
ஆற்றுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

காற்றிடை உணரியல் கருதியல் ஆதிய
ஆற்றுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

காற்றிடைச் செயலெலாம் கருதிய பயனெலாம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 486

Koviloor Digital Library

காற்றினில் பக்குவக் கதியெலாம் விளைவித்து
ஆற்றலின் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

காற்றினில் காலங் கருதுறு வகையெலாம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

காற்றியல் பலபல கணித்ததில் பிறவும்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வெளியிடைப் பகுதியின் விரிவியல் அணைவியல்
அளியுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வெளியிடைப் பூவெலாம் வியப்புறு திறனெலாம்
அளியுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வெளியினில் ஒலிநிறை வியனிலை அனைத்தும்
அளியுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வெளியிடைக் கருநிலை விரிநிலை அருநிலை
அளிகொள வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வெளியிடை முடிநிலை விளங்குற வகுத்தே
அளிபெற விளக்கும் அருட்பெருஞ் ஜோதி

வெளியினில் சத்திகள் வியப்புற சத்தர்கள்
அளியுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வெளியிடை ஒன்றே விரித்ததில் பற்பல
அளியுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 506

Koviloor Digital Library

வெளியிடை பலவே விரித்ததில் பற்பல
அளிதர அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வெளியிடை உயிரியல் வித்தியல் சித்தியல்
அளிபெற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வெளியின் அனைத்தையும் விரித்ததில் பிறவும்
அளியுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

புறநடுவொடு கடை புணர்ப்பித்து ஒருமுதல்
அறமுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புறந்தலை நடுவொடு புணர்ப்பித்து ஒருகடை
அறம்பெற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகப்புற நடுக்கடை அணைவால் புறமுதல்
அகப்பட வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகப்புற நடுமுதல் அணைவால் புறக்கடை
அகப்பட அமைத்த அருட்பெருஞ் ஜோதி

கருதக நடுவொடு கடையணைந்து அகமுதல்
அருளுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

தணியக நடுவொடு தலையணைந்து அகக்கடை
அணியுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகநடு புறக்கடை அணைந்து அகப்புறமுதல்
அகமுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 526

Koviloor Digital Library

அகநடு புறத்தலை யணைந்து அகப்புறக்கடை
அகலிடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகநடு அதனால் அகப்புற நடுவை
அகமற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகப்புற நடுவால் அணிபுற நடுவை
அகப்பட அமைத்த அருட்பெருஞ் ஜோதி

புறநடு அதனால் புறப்புற நடுவை
அறமுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புகலரும் அகண்ட பூரண நடுவால்
அகநடு வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புறப்புறக் கடைமுதல் புணர்ப்பால் புறப்புற
அறக்கணம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புறத்தியல் கடைமுதல் புணர்ப்பால் புறத்துறும்
அறக்கணம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகப்புறக் கடைமுதல் அணைவால் அக்கணம்
அகத்துற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகக்கடை முதற்புணர்ப்பு அதனால் அகக்கணம்
அகத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வானிடைக் காற்றும் காற்றிடை நெருப்பும்
ஆனற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 546

Koviloor Digital Library

நெருப்பிடை நீரும் நீரிடைப் புவியும்
அருப்பிட வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நீர்மேல் நெருப்பும் நெருப்பின்மேல் உயிர்ப்பும்
ஆர்வுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புனன்மேல் புவியும் புவிமேல் புடைப்பும்
அனன்மேல் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பக்குதிவான் வெளியில் படர்ந்தமா பூத
அகல்வெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உயிர்வெளி யிடையே உரைக்கரும் பகுதி
அயவெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உயிர்வெளி அதனை உணர்கலை வெளியில்
அயலற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

கலைவெளி அதனைக் கலப்பறு சுத்த
அலர்வெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி

சுத்தநல் வெளியைத் துரிசறு பரவெளி
அத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பரவெளி அதனைப் பரம்பர வெளியில்
அரசுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பரம்பர வெளியைப் பராபர வெளியில்
அரந்தெற வகுத்த அருட்பெருஞ் ஜோதி **566**

Koviloor Digital Library

பராபர வெளியைப் பகர்பெரு வெளியில்
அராவற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பெருவெளி அதனைப் பெருஞ்சுக வெளியில்
அருளுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

குணமுதற் கருவிகள் கூடிய பகுதியில்
அணைவுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மனமுதற் கருவிகள் மன்னுயிர் வெளியிடை
அனமுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

காலமே முதலிய கருவிகள் கலைவெளி
ஆலுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

துரிசறு கருவிகள் சுத்தநல் வெளியிடை
அரசுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

இவ்வெளி யெல்லாம் இலங்க அண்டங்கள்
அவ்வயின் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

ஓங்கிய அண்டம் ஒளிபெற முச்சுடர்
ஆங்கிடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

சிருட்டித் தலைவரைச் சிருட்டி அண்டங்களை
அருட்டிறல் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

காவல்செய் தலைவரைக் காவல் அண்டங்களை
ஆவகை அமைத்த அருட்பெருஞ் ஜோதி 586

Koviloor Digital Library

அழித்தல்செய் தலைவரை அவர் அண்டங்களை
அழுக்கற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

மறைத்திடு தலைவரை மற்றும் அண்டங்களை
அறத்தொடு வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தெளிவுசெய் தலைவரைத் திகழும் அண்டங்களை
அளிபெற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

விந்துவாம் சத்தியை விந்தின் அண்டங்களை
அந்திறல் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

ஓங்கார சத்திகள் உற்ற அண்டங்களை
ஆங்காக அமைத்த அருட்பெருஞ் ஜோதி

சத்தத் தலைவரைச் சாற்றும் அண்டங்களை
அத்தகை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நாதமாம் பிரமமும் நாத அண்டங்களும்
ஆதரம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பகர்பரா சத்தியைப் பதியும் அண்டங்களை
அகமற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பரசிவ பதியைப் பரசிவாண் டங்களை
அரசுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

எண்ணில்பல் சத்தியை எண்ணில் அண்டங்களை
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 606

Koviloor Digital Library

அளவில்பல் சத்தரை அளவில் அண்டங்களை
அளவற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உயிர்வகை அண்டம் உலப்பில எண்ணில
அயர்வற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

களவில கடல்வகை கங்கில கரையில
அளவில வகுத்த அருட்பெருஞ் ஜோதி

கடலவை அனைத்தும் கரையின்றி நிலையுற
அடலனல் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

கடல்களும் மலைகளும் கதிகளும் நதிகளும்
அடலுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

கடலிடைப் பல்வளம் கணித்ததில் பல்லுயிர்
அடலுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மலையிடைப் பல்வளம் வகுத்ததில் பல்லுயிர்
அலைவற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

ஒன்றினில் ஒன்றே ஒன்றிடை ஆயிரம்
அன்றற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பத்திடை ஆயிரம் பகரதில் கோடி
அத்துற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நூற்றிடை இலக்க நுவலதில் அனந்தம்
ஆற்றிடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி 626

Koviloor Digital Library

கோடியில் அனந்த கோடிபல் கோடி
ஆடுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வித்தியல் ஒன்றா விளைவியல் பலவா
அத்தகை அமைத்த அருட்பெருஞ் ஜோதி

விளைவியல் அனைத்தும் வித்திடை அடங்க
அளவுசெய்து அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வித்தும் பதமும் விளையுப கரிப்பும்
அத்திறல் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வித்திடை முளையும் முளையிடை விளைவும்
அத்தக அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வித்தினுள் வித்தும் வித்ததில் வித்தும்
அத்திறம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

விளைவினுள் விளைவும் விளைவதில் விளைவும்
அளையுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

முளையதின் முளையும் முளையினுள் முளையும்
அளைதர அமைத்த அருட்பெருஞ் ஜோதி

வித்திடைப் பதமும் பதத்திடை வித்தும்
அத்துற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பதமதில் பதமும் பதத்தினுட் பதமும்
அதிர்வற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 646

Koviloor Digital Library

ஒற்றுமை வேற்றுமை உரிமைகள் அனைத்தும்
அற்றென வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பொருணிலை உறுப்பியல் பொதுவகை முதலிய
அருளுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உறவினில் உறவும் உறவினில் பகையும்
அறனுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பகையினில் பகையும் பகையினில் உறவும்
அகைவுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பாதியும் முழுதும் பதிசெயும் அந்தமும்
ஆதியும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

துணையும் நிமித்தமும் துலங்கதின் அதுவும்
அணைவுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உருவதின் உருவும் உருவினுள் உருவும்
அருளுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

அருவினுள் அருவும் அருவதில் அருவும்
அருளியல் அமைத்த அருட்பெருஞ் ஜோதி

கரணமும் இடமும் கலைமுதல் அணையுமோர்
அரணிலை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உருவதில் அருவும் அருவதில் உருவும்
அருளுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 666

Koviloor Digital Library

வண்ணமும் வடிவும் மயங்கிய வகைபல
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

சிறுமையில் சிறுமையும் சிறுமையில். பெருமையும்
அறிதர வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பெருமையில் பெருமையும் பெருமையில் சிறுமையும்
அருணிலை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

திண்மையில் திண்மையும் திண்மையில் நேர்மையும்
அண்மையின் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மென்மையில் மென்மையும் மென்மையில் வன்மையும்
அன்மையற்று அமைத்த அருட்பெருஞ் ஜோதி

அடியினுள் அடியும் அடியிடை அடியும்
அடியுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

நடுவினுள் நடுவும் நடுவதின் நடுவும்
அடர்வுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

முடியினுள் முடியும் முடியினின் முடியும்
அடர்தர அமைத்த அருட்பெருஞ் ஜோதி

அகப்பூ அகவுறுப்பு ஆக்க அதற்கவை
அகத்தே வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புறப்பூ புறத்தில் புனையுரு வாக்கிட
அறத்துடன் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 686

Koviloor Digital Library

அகப்புறப்பூ அகப்புற உறுப்பு இயற்றிட
அகத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புறப்புறப் பூவதில் புறப்புற உறுப்புற
அறத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பாரிடை வேர்வையிற் பையிடை முட்டையில்
ஆருயிர் அமைக்கும் அருட்பெருஞ் ஜோதி

ஊர்வன பறப்பன உறுவன நடப்பன
ஆர்வுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அசைவில அசைவுள ஆருயிர்த் திரள்பல
அசலற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அறிவொரு வகைமுதல் ஐவகை அறுவகை
அறிதர வகுத்த அருட்பெருஞ் ஜோதி

வெவ்வேறு இயலொடு வெவ்வேறு பயனுற
அவ்வாறு அமைத்த அருட்பெருஞ் ஜோதி

சித்திர விசித்திர சிருட்டிகள் பலபல
அத்தகை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்ணினுள் ஆணும் ஆணினுள் பெண்ணும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்ணினுள் மூன்றும் ஆணினுள் இரண்டும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 706

Koviloor Digital Library

பெண்ணிடை நான்கும் ஆணிடை மூன்றும்
அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்ணியல் ஆணும் ஆணியற் பெண்ணும்
அண்ணுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்திறல் புறத்தும் ஆண்திறல் அகத்தும்
அண்டுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்ணியல் மனமும் ஆணியல் அறிவும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தனித்தனி வடிவினும் தக்கஆண் பெண்ணியல்
அனைத்துற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உனற்கரும் உயிருள உடலுள உலகுள
அனைத்தையும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

ஓவுறா எழுவகை உயிர்முதல் அனைத்தும்
ஆவகை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பைகளின் முட்டையில் பாரினில் வேர்வினில்
ஐபெற அமைத்த அருட்பெருஞ் ஜோதி

தாய்கருப் பையினுள் தங்கிய உயிர்களை
ஆய்வுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

முட்டைவாய்ப் பயிலும் முழுவுயிர்த் திரள்களை
அட்டமே காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 726

Koviloor Digital Library

நிலம்பெறும் உயிர்வகை நீள்குழு அனைத்தும்
அலம்பெறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

வேர்வுற உதித்த மிகுமுயிர்த் திரள்களை
ஆர்வுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

உடலுறு பிணியால் உயிருடல் கெடாவகை
அடலுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

சிசுமுதல் பருவச் செயல்களின் உயிர்களை
அசைவறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

உயிருறும் உடலையும் உடலுறு உயிரையும்
அயர்வறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

பாடுறும் அவத்தைகள் பலவினும் உயிர்களை
ஆடுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

முச்சுடர் ஆதியால் எச்சக உயிரையும்
அச்சறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

வான்முகிற் சத்தியால் மழைபொழிவித்து உயிர்
ஆனறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

இன்புறு சத்தியால் எழில்மழை பொழிவித்து
அன்புறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

எண்ணியற் சத்தியால் எல்லா உலகினும்
அண்ணுயிர் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 746

Koviloor Digital Library

அண்டப் புறப்புற அமுதம் பொழிந்துயிர்
அண்டுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

தேவரை எல்லாம் திகழ்புற அமுதளித்து
ஆவகை காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

அகப்புற அமுதளித்து ஐவரா திகளை
அகப்படக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

தரும் அகஅமுதால் சத்தி சத்தர்களை
அருளினில் காக்கும் அருட்பெருஞ் ஜோதி

காலமும் நியதியும் காட்டி எவ்வுயிரையும்
ஆலுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

விச்சையை இச்சையை விளைவித்து உயிர்களை
அச்சறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

போகமும் களிப்பும் பொருந்துவித்து உயிர்களை
ஆகமுள் காக்கும் அருட்பெருஞ் ஜோதி

கலையறிவு அளித்துக் களிப்பினில் உயிரெலாம்
அலைவறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

விடய நிகழ்ச்சியால் மிகுமுயிர் அனைத்தையும்
அடைவறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

துன்பளித்து ஆங்கே சுகமளித்து உயிர்களை
அன்புறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 766

Koviloor Digital Library

கரணேந் தியத்தால் கள்ப்புற உயிர்களை
அரணேர்ந்து அளித்தருள் அருட்பெருஞ் ஜோதி

எத்தகை எவ்வுயிர் எண்ணின அவ்வுயிர்க்கு
அத்தகை அளித்தருள் அருட்பெருஞ் ஜோதி

எப்படி எவ்வுயிர் எண்ணின அவ்வுயிருக்கு
அப்படி அளித்தருள் அருட்பெருஞ் ஜோதி

ஏங்காது உயிர்த்திரள் எங்கெங்கு இருந்தன
ஆங்காங்கு அளித்தருள் அருட்பெருஞ் ஜோதி

சொல்லுறும் அசுத்தத் தொல்லுயிர்க்கு அவ்வகை
அல்லலில் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

சுத்தமும் அசுத்தமும் தோயுயிர்க்கு இருமையின்
அத்தகை காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

வாய்ந்திடும் சுத்த வகையுயிர்க்கு ஒருமையின்
ஆய்ந்துறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

எவையெலாம் எவையெலாம் ஈண்டின வீண்டின
அவையெலாம் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

அண்டத் துரிசையும் அகிலத் துரிசையும்
அண்டற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

பிண்டத் துரிசையும் பேருயிர் துரிசையும்
அண்டற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 786

Koviloor Digital Library

உயிருறு மாயையின் உறுவிரிவு அனைத்தும்
அயிரற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

உயிருறும் இருவினை உறுவிரிவு அனைத்தும்
அயர்வற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

காமப்புடைப்பு உயிர்கண் தொடரா வகை
ஆமற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

பொங்குறு வெகுளிப் புடைப்புகள் எல்லாம்
அங்கற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

மதம்புரை மோகமும் மற்றவும் ஆங்காங்கு
அதம்பெற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

வடுவுறும் அசுத்த வாதனை அனைத்தையும்
அடர்பற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

சுத்தமும் அசுத்தமும் தோய்ந்த வாதனைகளை
அத்தகை அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

நால்வயில் துரிசும் நண்ணுயிர் ஆதியில்
ஆலற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

நால்வயில் படைப்பும் நால்வயில் காப்பும்
ஆலற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

மூவிடத்து இருமையின் முன்னிய தொழிற்கரில்
ஆவிடத்து அடக்கும் அருட்பெருஞ் ஜோதி 806

Koviloor Digital Library

மூவிட மும்மையின் முன்னிய தொழிற்கரில்
ஆவிடம் அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

தத்துவச் சேட்டையும் தத்துவத் துரிசும்
அத்தகை அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

சுத்தமா நிலையில் சூழுறு விரிவை
அத்தகை அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

கரைவின் மாமாயைக் கரும்பெருந் திரையால்
அரைசது மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

பேருறு நீலப் பெருந்திரை அதனால்
ஆருயிர் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

பச்சைத் திரையால் பரவெளி அதனை
அச்சுற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

செம்மைத் திரையால் சித்துறு வெளியை
அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

பொன்மைத் திரையால் பொருளுறு வெளியை
அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

வெண்மைத் திரையால் மெய்ப்பதி வெளியை
அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

கலப்புத் திரையால் கருதனு பவங்களை
அலப்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி **826**

Koviloor Digital Library

விடய நிலைகளை வெவ்வேறு திரைகளால்
அடர்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

தத்துவ நிலைகளைத் தனித்தனி திரையால்
அத்திற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

திரைமறைப்பு எல்லாம் தீர்த்து ஆங்காங்கே
அரசுறக் காட்டும் அருட்பெருஞ் ஜோதி

தோற்றமா மாயைத் தொடர்பறுத்து அருளின்
ஆற்றலைக் காட்டும் அருட்பெருஞ் ஜோதி

சுத்தமா மாயைத் தொடர்பறுத்து அருளை
அத்தகை காட்டும் அருட்பெருஞ் ஜோதி

எனைத்து ஆணவமுதல் எல்லாம் தவிர்த்தே
அனுக்கிரகம் புரி அருட்பெருஞ் ஜோதி

விடய மறைப்பெலாம் விடுவித்து உயிர்களை
அடைவுறத் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

சொருப மறைப்பெலாம் தொலைப்பித்து உயிர்களை
அருளினில் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

மறைப்பின் மறந்தன வருவித்து ஆங்கே
அறத்தொடு தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

எவ்வகை உயிர்களும் இன்புற ஆங்கே
அவ்வகை தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி **846**

Koviloor Digital Library

கடவுளர் மறைப்பைக் கடிந்துஅவர்க்கு இன்பம்
அடையுறத் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

சத்திகள் மறைப்பைத் தவிர்த்துஅவர்க்கு இன்பம்
~~அத்தகை~~ தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

சத்தர்கள் மறைப்பைத் தவிர்த்து அவர்க்கு இன்பம்
அத்தகை தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

படைக்கும் தலைவர்கள் பற்பல கோடியை
அடைப்புறப் படைக்கும் அருட்பெருஞ் ஜோதி

காக்கும் தலைவர்கள் கணக்கில்பல் கோடியை
ஆக்குறக் காக்கும் அருட்பெருஞ் ஜோதி

அடக்கும் தலைவர்கள் அளவிலர் தம்மையும்
அடர்ப்பற அடக்கும் அருட்பெருஞ் ஜோதி

மறைக்கும் தலைவர்கள் வகைபல கோடியை
அறத்தொடு மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

தெருட்டுந் தலைவர்கள் சேர்பல கோடியை
அருட்டிறந் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

ஐந்தொழி லாதிசெய் ஐவரா திகளை
ஐந்தொழி லாதிசெய் அருட்பெருஞ் ஜோதி

இறந்தவர் எல்லாம் எழுந்திட உலகில்
அறந்தலை அளித்த அருட்பெருஞ் ஜோதி 866

Koviloor Digital Library

செத்தவர் எல்லாம் சிரித்தாங்கு எழுதிறல்
அத்தகை காட்டிய அருட்பெருஞ் ஜோதி

இறந்தவர் எழுகவென்று எண்ணியாங்கு எழுப்பிட
அறந்துணை எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

செத்தவர் எழுகெனச் செப்பியாங்கு எழுப்பிட
அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

சித்தெலாம் வல்ல திறலளித்து எனக்கே
அத்தனென்று ஓங்கும் அருட்பெருஞ் ஜோதி

ஒன்றது இரண்டது ஒன்றின் இரண்டது
ஒன்றினுள் ஒன்றது ஒன்றெனும் ஒன்றே

ஒன்றல இரண்டல ஒன்றின் இரண்டல
ஒன்றினுள் ஒன்றல ஒன்றெனும் ஒன்றே

ஒன்றினுள் ஒன்றுள ஒன்றினில் ஒன்றில
ஒன்றற ஒன்றிய ஒன்றெனும் ஒன்றே

களங்கநீத்து உலகம் களிப்புற மெய்ந்நெறி
விளங்கவென் உள்ளே விளங்குமெய்ப் பொருளே

மூவிரு நிலையின் முடிநடு முடிமேல்
ஓவற விளங்கும் ஒருமைமெய்ப் பொருளே

எழுநிலை மிசையே இன்புருவாகி
வழுநிலை நீக்கி வயங்குமெய்ப் பொருளே 886

Koviloor Digital Library

நவநிலை மிசையே நடுவுறு நடுவே
சிவமய மாகித் திகழ்ந்தமெய்ப் பொருளே

ஏகா தசநிலை யாததில் நடுவே
ஏகா தனமிசை இருந்தமெய்ப் பொருளே

திரையோ தசநிலை சிவவெளி நடுவே
வரையோ தருசுக வாழ்க்கைமெய்ப் பொருளே

ஈரெண் நிலையென இயம்புமேல் நிலையில்
பூரண சுகமாய்ப் பொருந்துமெய்ப் பொருளே

எல்லா நிலைகளும் இசைந்தாங் காங்கே
எல்லாம் ஆகி இலங்குமெய்ப் பொருளே

மனாதிகள் பொருந்தா வானடு வானாய்
அனாதி உண்மையதாய் அமர்ந்தமெய்ப் பொருளே

தானொரு தானாய்த் தானே தானாய்
ஊனுயிர் விளக்கும் ஒருதனிப் பொருளே

அதுவினுள் அதுவாய் அதுவே அதுவாய்ப்
பொதுவினுள் நடிக்கும் பூரணப் பொருளே

இயல்பினுள் இயல்பாய் இயல்பே இயல்பாய்
உயலுற விளங்கும் ஒருதனிப் பொருளே

அருவினுள் அருவாய் அருவரு வருவாய்
உருவினுள் விளங்கும் ஒருபரம் பொருளே 906

Koviloor Digital Library

அலகிலாச் சித்தாய் அதுநிலை அதுவாய்
உலகெலாம் விளங்கும் ஒருதனிப் பொருளே

பொருளினுள் பொருளாய்ப் பொருளது பொருளாய்
ஒருமையின் விளங்கும் ஒருதனிப் பொருளே

ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கெழு
கோடியும் விளங்கக் குலவுமெய்ப் பொருளே

கூட்டுறு சித்திகள் கோடிபல் கோடியும்
ஆட்டுற விளங்கும் அரும்பெரும் பொருளே

அறிவுறு சித்திகள் அனந்தகோ டிகளும்
பிறிவற விளக்கும் பெருந்தனிப் பொருளே

வீடுகள் எல்லாம் விதிநெறி விளங்க
ஆடல்செய் தருளும் அரும்பெரும் பொருளே

பற்றுகள் எல்லாம் பதிநெறி விளங்க
உற்றருள் ஆடல்செய் ஒருதனிப் பொருளே

பரத்தினில் பரமே பரத்தின்மேற் பரமே
பரத்தினுட் பரமே பரம்பரம் பரமே

பரம்பெறும் பரமே பரந்தரும் பரமே
பரம்பதம் பரமே பரஞ் சிதம்பரமே

பரம்புகழ் பரமே பரம்பகர் பரமே
பரம்சுக பரமே பரஞ்சிவ பரமே 926

Koviloor Digital Library

பரங்கொள் சிற்பரமே பரஞ்செய் தற்பரமே
தரங்கொள் பொற்பரமே தனிப்பெரும் பரமே

வரம்பரா பரமே வணம்பரா பரமே
பரம்பரா பரமே பதம்பரா பரமே

சத்திய பதமே சத்துவ பதமே
நித்திய பதமே நிற்குண பதமே

தத்துவ பதமே தற்பத பதமே
சித்துறு பதமே சிற்சுக பதமே

தம்பரம் பதமே தனிச்சுகம் பதமே
அம்பரம் பதமே அருட்பரம் பதமே

தந்திர பதமே சந்திர பதமே
மந்திர பதமே மந்தண பதமே

நவந்தரு பதமே நடந்தரு பதமே
சிவந்தரு பதமே சிவசிவ பதமே

பிரமமெய்க் கதியே பிரமமெய்ப் பதியே
பிரமநிற் குணமே பிரமசிற் குணமே

பிரமமே பிரமப் பெருநிலை மிசையுறும்
பரமமே பரம பதந்தருஞ் சிவமே

அவனோடு அவளாய் அதுவாய் அலவாய்
நவ:ஃமா நிலைமிசை நண்ணிய சிவமே 946

Koviloor Digital Library

எம்பொருள் ஆகி எமக்கருள் புரியும்
செம்பொருள் ஆகிய சிவமே சிவமே

ஒருநிலை இதுவே உயர்நிலை எனுமொரு
திருநிலை மேவிய சிவமே சிவமே

மெய்வைத்து அழியா வெறுவெளி நடுவுறு
தெய்வப் பதியாம் சிவமே சிவமே

புரைதவிர்த்து எனக்கே பொன்முடி சூட்டிச்
சிரமுற நாட்டிய சிவமே சிவமே

கல்வியுஞ் சாகாக் கல்வியும் அழியாச்
செல்வமும் அளித்த சிவமே சிவமே

அருளமுது எனக்கே அளித்தருள் நெறிவாய்த்
தெருளுற வளர்க்கும் சிவமே சிவமே

சத்தெலாம் ஆகியும் தானொரு தானாம்
சித்தெலாம் வல்லதோர் திருவருட் சிவமே

எங்கே கருணை இயற்கையில் உள்ளன
அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே

யாரே என்னினும் இரங்குகின் றார்க்குச்
சீரே அளிக்கும் சிதம்பர சிவமே

பொய்ந் நெறி அனைத்தினும் புகுத்தாது எனையருட்
செந்நெறி செலுத்திய சிற்சபைச் சிவமே 966

Koviloor Digital Library

கொல்லா நெறியே குருவருள் நெறியெனப்
பல்கால் எனக்குப் பகர்ந்தமெய்ச் சிவமே

உயிரெலாம் பொதுவின் உளம்பட நோக்குக
செயிரெலாம் விடுகெனச் செப்பிய சிவமே

பயிர்ப்புறு கரணப் பரிசுகள் பற்பல
உயிர்த்திரள் ஒன்றென உரைத்தமெய்ச் சிவமே

உயிருள்யாம் எம்முள்உயிர் இவை உணர்ந்தே
உயிர்நலம் பரவுகென்று உரைத்தமெய்ச் சிவமே

இயலருள் ஒளியோர் ஏகதேசத்தில் நாம்
உயிரொளி காண்கவென்று உரைத்தமெய்ச் சிவமே

அருள்அலாது அணுவும்அசைந்திடாது அதனால்
அருள்நலம் பரவுகென்று அறைந்தமெய்ச் சிவமே

அருளுறின் எல்லாம் ஆகும் ஈதுண்மை
அருளுற முயல்கவென்று அருளிய சிவமே

அருள்நெறி ஒன்றே தெருள்நெறி மற்றெலாம்
இருள்நெறி எனஎனக்கு இயம்பிய சிவமே

அருள்பெறில் துரும்புமோர் ஐந்தொழில் புரியும்
தெருளிது எனவே செப்பிய சிவமே

அருளறிவு ஒன்றே அறிவுமற்று எல்லாம்
மருளறிவு என்றே வகுத்தமெய்ச் சிவமே 986

Koviloor Digital Library

அருட்சுகம் ஒன்றே அரும்பெறல் பெருஞ்சுகம்
மருட்சுகம் பிறவென வகுத்தமெய்ச் சிவமே

அருட்பேறு அதுவே அரும்பெறல் பெரும்பேறு
இருட்பேறு அறுக்குமென்று இயம்பிய சிவமே

அருள்தனி வல்லபம் அதுவே எலாஞ்செய்
பொருள்தனிச் சித்தெனப் புகன்றமெய்ச் சிவமே

அருளறியார் தமை அறியார் எம்மையும்
பொருளறியார் எனப் புகன்றமெய்ச் சிவமே

அருள்நிலை ஒன்றே அனைத்தும் பெறுநிலை
பொருள்நிலை காண்கெனப் புகன்றமெய்ச் சிவமே

அருள்வடிவு அதுவே அழியாத் தனிவடிவு
அருள்பெற முயலுகென்று அருளிய சிவமே

அருளே நம்மியல் அருளே நம்முரு
அருளே நம்வடி வாம்என்ற சிவமே

அருளே நம்மடி அருளே நம்முடி
அருளே நம்நடு வாம்என்ற சிவமே

அருளே நம்மறி அருளே நம்மனம்
அருளே நம்குண மாம்என்ற சிவமே

அருளே நம்பதி அருளே நம்பதம்
அருளே நம்மிட மாம்என்ற சிவமே 1006

Koviloor Digital Library

அருளே நம்துணை அருளே நம்தொழில்
அருளே நம்விருப் பாம்என்ற சிவமே

அருளே நம்பொருள் அருளே நம்ஒளி
அருளே நாம்அறி வாய்என்ற சிவமே

அருளே நம்குலம் அருளே நம்இனம்
அருளே நாம்அறி வாய்என்ற சிவமே

அருளே நம்சுகம் அருளே நம்பெயர்
அருளே நாம்அறி வாய்என்ற சிவமே

அருளொளி அடைந்தனை அருளமுது உண்டனை
அருண்மதி வாழ்கவென்று அருளிய சிவமே

அருள்நிலை பெற்றனை அருள்வடி வுற்றனை
அருளரசு இயற்றுகென்று அருளிய சிவமே

உள்ளகத்து அமர்ந்து எனதுஉயிரில் கலந்தருள்
வள்ளல் சிற்றம்பலம் வளர்சிவ பதியே

நிகரிலா இன்ப நிலைநடு வைத்தெனைத்
தகவொடு காக்கும் தனிச்சிவ பதியே

சுத்தசன் மார்க்க சுகநிலை தனில்எனைச்
சத்தியன் ஆக்கிய தனிச்சிவ பதியே

ஐவருங் காண்டற்கு அரும்பெரும் பொருள்என்
கைவரப் புரிந்த கதிசிவ பதியே 1026

Koviloor Digital Library

துன்பம் தொலைத்தருள் ஜோதியால் நிறைந்த
இன்பம் எனக்கருள் எழில்சிவ பதியே

சித்தமும் வாக்கும் செல்லாப் பெருநிலை
ஒத்துறவு ஏற்றிய ஒருசிவ பதியே

கையறவு அனைத்தும் கடிந்தெனைத் தேற்றி
வையமேல் வைத்த மாசிவ பதியே

இன்புறச் சிறியேன் எண்ணுதோறு எண்ணுதோறு
அன்பொடென் கண்ணுறும் அருட்சிவ பதியே

பிழையெலாம் பொறுத்தெனுள் பிறங்கிய கருணை
மழையெலாம் பொழிந்து வளர்சிவ பதியே

உளத்தினும் கண்ணினும் உயிரினும் எனது
குளத்தினும் நிரம்பிய குருசிவ பதியே

பரமுடன் அபரம் பகர்நிலை இவையெனத்
திரமுற அருளிய திருவருட் குருவே

மதிநிலை இரவியின் வளர்நிலை அனலின்
திதிநிலை அனைத்தும் தெரித்தசற் குருவே

கணநிலை அவற்றின் கருநிலை அனைத்தும்
குணமுறத் தெரித்துஉட் குலவுசற் குருவே

பதிநிலை பசுநிலை பாச நிலையெலாம்
மதியுறத் தெரித்துள் வயங்குசற் குருவே 1046

Koviloor Digital Library

பிரம ரகசியம் பேசிஎன் உளத்தே
தரமுற விளங்குஞ் சாந்தசற் குருவே

பரம ரகசியம் பகர்ந்தெனது உளத்தே
வரமுற வளர்த்து வயற்குசற் குருவே

சிவரகசியம் எலாம் தெரிவித்து எனக்கே
நவநிலை காட்டிய ஞானசற் குருவே

சத்தியல் அனைத்தும் சித்தியல் முழுதும்
அத்தகை தெரித்த அருட்சிவ குருவே

அறிபவை எல்லாம் அறிவித்து என்னுள்ளே
பிறிவற விளங்கும் பெரியசற் குருவே

கேட்பவை எல்லாம் கேட்பித்து என்னுள்ளே
வேட்கையின் விளங்கும் விமலசற் குருவே

காண்பவை எல்லாம் காட்டுவித்து எனக்கே
மாண்பதம் அளித்து வயங்குசற் குருவே

செய்பவை எல்லாம் செய்வித்து எனக்கே
உய்பவை அளித்தெனுள் ஓங்கு சற்குருவே

உண்பவை எல்லாம் உண்ணுவித்து என்னுள்
பண்பினில் விளங்கும் பரமசற் குருவே

சாகாக் கல்வியின் தரமெலாங் கற்பித்து
ஏகாக்கரப் பொருள் ஈந்தசற் குருவே 1066

Koviloor Digital Library

சத்தியமாம் சிவ சித்திகள் அனைத்தையும்
மெய்த்தகை அளித்தெனுள் விளங்குசற் குருவே

எல்லா நிலைகளும் ஏற்றிச் சித்தெலாம்
வல்லான் எனவெனை வைத்தசற் குருவே

சீருற அருளாம் தேசுற அழியாப்
பேருற என்னைப் பெற்றநல் தாயே

பொருந்திய அருட்பெரும் போகமே உறுகெனப்
பெருந் தயவால்எனைப் பெற்றநல் தாயே

ஆன்ற சன்மார்க்கம் அணிபெற எனைத்தான்
ஈன்றமுது அளித்த இனியநல் தாயே

பசித்திடுதோறும் என்பால் அணைந்து அருளால்
வசித்தமுது அருள்புரி வாய்மைநல் தாயே

தளர்ந்ததோறு அடியேன் சார்பணைந்து என்னை
உளம் தெளிவித்த ஒருமைநல் தாயே

அருளமுதே முதல் ஐவகை அமுதமும்
தெருளுற எனக்கருள் செல்வநல் தாயே

இயலுமுதே முதல் எழுவகை அமுதமும்
உயலுற எனக்கருள் உரியநற் றாயே

நண்புறும் எண்வகை நவவகை அமுதமும்
பண்புற எனக்கருள் பண்படைத் தாயே 1086

Koviloor Digital Library

மற்றுள அமுத வகையெலாம் எனக்கே
உற்றுணவு அளித்தருள் ஓங்குநல் தாயே

கலக்கமும் அச்சமும் கடிந்தெனது உளத்தே
அலக்கணும் தவிர்த்தருள் அன்புடைத் தாயே

துய்ப்பினில் அனைத்தும் சுகம்பெற அளித்தெனக்கு
எய்ப்பெலாம் தவிர்த்த இன்புடைத் தாயே

சித்திகள் எல்லாம் தெளிந்திட எனக்கே
சத்தியை அளித்த தயவுடைத் தாயே

சத்திநி பாதம் தனைஅளித்து எனைமேல்
வைத்தமுது அளித்த மரபுடைத் தாயே

சத்தி சத்தர்களெலாம் சார்ந்தெனது ஏவல்செய்
சித்தியை அளித்த தெய்வநல் தாயே

தன்னிகர் இல்லாத் தலைவனைக் காட்டியே
என்னைமேல் ஏற்றிய இனியநல் தாயே

வெளிப்பட விரும்பிய விளைவெலாம் எனக்கே
அளித்தளித்து இன்புசெய் அன்புடைத் தாயே

எண்ணகத்தொடு புறத்து என்னை எஞ்ஞான்றும்
கண்ணெனக் காக்கும் கருணைநல் தாயே

இன்னருள் அமுதளித்து இறவாத் திறல்புரிந்து
என்னை வளர்த்திடும் இன்புடைத் தாயே 1106

Koviloor Digital Library

என்னுடல் என்னுயிர் என்னறி வெல்லாம்
தன்னவென்று ஆக்கிய தயவுடைத் தாயே

தெரியா வகையால் சிறியேன் தளர்ந்திடத்
தரியாது அணைத்த தயவுடைத் தாயே

சினமுதல் அனைத்தையும் தீர்த்துஎனை நனவினும்
கனவினும் பிரியாக் கருணைநல் தாயே

தூக்கமும் சோம்பும்என் துன்பமும் அச்சமும்
ஏக்கமும் நீக்கிய என்தனித் தாயே

துன்பெலாம் தவிர்த்துஉளே அன்பெலாம் நிரம்ப
இன்பெலாம் அளித்த என்றனித் தந்தையே

எல்லா நன்மையும் என்றனக்கு அளித்த
எல்லாம் வல்லசித்து என்றனித் தந்தையே

நாயிற் கடையேன் நலம்பெறக் காட்டிய
தாயிற் பெரிதும் தயவுடைத் தந்தையே

அறிவிலாப் பருவத்து அறிவெனக்கு அளித்தே
பிறிவிலாது அமர்ந்த பேரருள் தந்தையே

புன்னிகர் இல்லேன் பொருட்டு இவணடைந்த
தன்னிகர் இல்லாத் தனிப்பெருந் தந்தையே

அகத்தினும் புறத்தினும் அமர்ந்து அருட்ஜோதி
சகத்தினில் எனக்கே தந்தமெய் தந்தையே 1126

Koviloor Digital Library

இணையிலாக் களிப்புற்று இருந்திட எனக்கே
துணையடி சென்னியில் சூட்டிய தந்தையே

ஆதியீறு அறியா அருளரசு ஆட்சியில்
ஜோதிமா மகுடம் சூட்டிய தந்தையே

எட்டிரண்டு அறிவித்து எனைத்தனி ஏற்றிப்
பட்டி மண்டபத்தில் பதித்தமெய்த் தந்தையே

தங்கோல் அளவது தந்து அருட்ஜோதிச்
செங்கோல் செலுத்தெனச் செப்பிய தந்தையே

தன்பொருள் அனைத்தையும் தன்னரசு ஆட்சியில்
என்பொருள் ஆக்கிய என்றனித் தந்தையே

தன்வடிவு அனைத்தையும் தன்னரசு ஆட்சியில்
என்வடிவு ஆக்கிய என்றனித் தந்தையே

தன்சித்து அனைத்தையும் தன் சமூகத்தினில்
என்சித்து ஆக்கிய என்றனித் தந்தையே

தன்வசமாகிய தத்துவம் அனைத்தையும்
என்வசம் ஆக்கிய என்னுயிர்த் தந்தையே

தன்கையில் பிடித்த தனியருள் ஜோதியை
என்கையில் கொடுத்த என்றனித் தந்தையே

தன்னையும் தன்னருள் சத்தியின் வடிவையும்
என்னையும் ஒன்றென இயற்றிய தந்தையே 1146

Koviloor Digital Library
தன்னியல் என்னியல் தன்செயல் என்செயல்
என்ன வியற்றிய என்றனித் தந்தையே

தன்னுரு என்னுரு தன்உரை என்உரை
என்ன வியற்றிய என்றனித் தந்தையே

சதுரப் பேரருள் தனிப்பெருந் தலைவனென்று
எதிரற்று ஓங்கிய என்னுடைத் தந்தையே

மனவாக்கு அறியா வரைப்பினில் எனக்கே
இனவாக்கு அருளிய என்னுயிர்த் தந்தையே

உணர்ந்து உணர்ந்து உணரினும் உணராப்பெருநிலை
அணைந்திட எனக்கே அருளிய தந்தையே

துரியவாழ்வு உடனே சுக பூரணமெனும்
பெரிய வாழ்வு அளித்த பெருந்தனித் தந்தையே

ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
பேறளித்து ஆண்ட பெருந்தகைத் தந்தையே

எவ்வகைத் திறத்தினும் எய்துதற்கு அரிதாம்
அவ்வகை நிலையெனக்கு அளித்தநல் தந்தையே

இனிப்பிறவா நெறி எனக்களித்து அருளிய
தனிப்பெருந் தலைமைத் தந்தையே தந்தையே

பற்றயர்ந்து அஞ்சிய பரிவுகண்டு அணைந்தெனைச்
சற்றுமஞ்சேல் எனத் தாங்கிய துணையே 1166

Koviloor Digital Library

தளர்ந்தஅத் தருணமென் தளர்வெலாம் தவிர்த்துட்
கிளர்ந்திட எனக்குக் கிடைத்தமெய்த் துணையே

துறையிது வழியிது துணிவிது நீசெயும்
முறையிது எனவே மொழிந்தமெய்த் துணையே

எங்குறு தீமையும் எனைத்தொட ராவகை
கங்குலும் பகலுமெய்க் காவல்செய் துணையே

வேண்டிய வேண்டிய விருப்பெலாம் எனக்கே
ஈண்டிருந் தருள்புரி என்னுயிர்த் துணையே

இகத்தினும் பரத்தினும் எனக்கிடர் சாராது
அகத்தினும் புறத்தினும் அமர்ந்தமெய்த் துணையே

அயர்வற எனக்கே அருள்துணையாகி என்
உயிரினும் சிறந்த ஒருமையென் நட்பே

அன்பினில் கலந்தெனது அறிவினில் பயின்றே
இன்பினில் அளைந்தஎன் இன்னுயிர் நட்பே

நான்புரி வனவெலாம் தான்புரிந்து எனக்கே
வான்பதம் அளிக்க வாய்த்த நன்நட்பே

உள்ளமும் உணர்ச்சியும் உயிரும் கலந்துகொண்டு
எள்ளுறு நெய்யில்என் உள்ளுறு நட்பே

செற்றமும் தீமையும் தீர்த்துநான் செய்த
குற்றமும் குணமாக் கொண்டவென் நட்பே 1186

Koviloor Digital Library

குணங்குறி முதலிய குறித்திடாது எனையே
அணங்கறக் கலந்த அன்புடை நட்பே

பிணக்கும் பேதமும் பேயுலகோர் புகல்
கணக்கும் தீர்த்துஎனைக் கலந்தநன் நட்பே

சவலைநெஞ் சகத்தின் தளர்ச்சியும் அச்சமும்
கவலையும் தவிர்த்தெனை கலந்தநன் நட்பே

களைப்பறிந்து எடுத்துக் கலக்கம் தவிர்த்தெனக்கு
இளைப்பறிந்து உதவிய என்னுயிர் உறவே

தன்னைத் தழுவுறு தரம்சிறிது அறியா
என்னைத் தழுவிய என்னுயிர் உறவே

மனக்குறை நீக்கிநல் வாழ்வளித்து என்றும்
எனக்குற வாகிய என்னுயிர் உறவே

துன்னும் அனாதியே சூழ்ந்தெனைப் பிரியாது
என்னுற வாகிய என்னுயிர் உறவே

என்றுமோர் நிலையாய் என்றுமோர் இயலாய்
என்றுமுள் அதுவாம் என்றனிச் சத்தே

அனைத்துலகு அவைகளும் ஆங்காங்கு உணரினும்
இனைத்தென அறியா என்றனிச் சத்தே

பொதுமறை முடிகளும் புகலவை முடிகளும்
இதுவெனற்கு அரிதாம் என்றனிச் சத்தே 1206

Koviloor Digital Library

ஆகம முடிகளும் அவைபுகல் முடிகளும்
ஏகுதற்கு அரிதாம் என்றனிச் சத்தே

சத்தியம் சத்தியம் சத்தியம் எனவே
இத்தகை வழுத்தும் என்றனிச் சத்தே

துரியமும்கடந்ததோர் பெரியவான் பொருளென
உரைசெய் வேதங்கள் உன்னுமெய்ச் சத்தே

அன்றதன் அப்பால் அதன்பரத்து அதுதான்
என்றிட நிறைந்த என்றனிச் சத்தே

என்றுமுள் அதுவாய் எங்குமோர் நிறைவாய்
என்றும் விளங்கிடும் என்றனிச் சித்தே

சத்திகள் பலவாய்ச் சத்தர்கள் பலவாய்
இத்தகை விளங்கும் என்றனிச் சித்தே

தத்துவம் பலவாய்த் தத்துவி பலவாய்
இத்தகை விளங்கும் என்றனிச் சித்தே

படிநிலை பலவாய்ப் பதநிலை பலவாய்
இடிவற விளங்கிடும் என்றனிச் சித்தே

மூர்த்தர்கள் பலவாய் மூர்த்திகள் பலவாய்
ஏற்பட விளக்கிடும் என்றனிச் சித்தே

உயிர்வகை பலவாய் உடல்வகை பலவாய்
இயலுற விளக்கிடும் என்றனிச் சித்தே 1226

Koviloor Digital Library

அறிவவை பலவாய் அறிவன பலவாய்
எறிவற விளக்கிடும் என்றனிச் சித்தே

நினைவவை பலவாய் நினைவன பலவாய்
இனைவற விளக்கிடும் என்றனிச் சித்தே

காட்சிகள் பல்வாய்க் காண்பன பலவாய்
ஏட்சியின் விளக்கிடும் என்றனிச் சித்தே

செய்வினை பலவாய்ச் செய்வன பலவாய்
எய்வற விளக்கிடும் என்றனிச் சித்தே

அண்ட சராசரம் அனைத்தையும் பிறவையும்
எண்டற விளக்கும் என்றனிச் சித்தே

எல்லாம் வல்லசித்து எனமறை புகன்றிட
எல்லாம் விளக்கிடும் என்றனிச் சித்தே

ஒன்றதில் ஒன்றென்று உரைக்கவும் படாதாய்
என்றுமோர் படித்தாம் என்றனி இன்பே

இதுவது என்னா இயலுடை அதுவாய்
எதிரற நிறைந்த என்றனி இன்பே

ஆக்குறும் அவத்தைகள் அனைத்தையும் கடந்துமேல்
ஏக்கற நிறைந்த என்றனி இன்பே

அறிவுக்கு அறிவினில் அதுவது அதுவாய்
எறிவற்று ஓங்கிய என்றனி இன்பே 1246

Koviloor Digital Library

விடயம் எவற்றினும் மேன்மேல் விளைந்தவை
இடையிடை ஓங்கிய என்றனி இன்பே

இம்மையும் மறுமையும் இயம்பிடும் ஒருமையும்
எம்மையும் நிரம்பிடும் என்றனி இன்பே

முத்தர்கள் சித்தர்கள் சத்திகள் சத்தர்கள்
எத்திறத் தவர்க்குமாம் என்றனி இன்பே

எல்லா நிலைகளின் எல்லா உயிருறும்
எல்லா இன்புமாம் என்றனி இன்பே

கரும்புறு சாறும் கனிந்தமுக் கனியின்
விரும்புறும் இரதமும் மிக்கதீம் பாலும்

குணங்கொள்கோற் றேனும் கூட்டி ஒன்றாக்கி
மணங்கொளப் பதஞ்செய் வகையுற இயற்றிய

உணவெனப் பல்கால் உரைக்கினும் நிகரா
வணமுறும் இன்ப மயமே அதுவாய்க்

கலந்தறி உருவாய்க் கருதுதற் கரிதாய்
நலந்தரு விளக்கமும் நவிலருந் தண்மையும்

உள்ளதாய் என்றும் உள்ளதாய் என்னுள்
உள்ளதாய் என்றன் உயிருளம் உடம்புடன்

எல்லாம் இனிப்ப இயலுறு சுவையளித்து
எல்லாம் வல்லசித்து இயற்கைய தாகிச் 1266

Koviloor Digital Library

சாகா வரமும் தனித்தபேர் அறிவும்
மாகா தலில்சிவ வல்லப சத்தியும்

செயற்கரும் அனந்த சித்தியும் இன்பமும்
மயக்கறத் தருந்திறல் வண்மைய தாகிப்

பூரண வடிவாய்ப் பொங்கிமேல் ததும்பி
ஆரண முடியுடன் ஆகம முடியும்

கடந்தெனது அறிவாம் கனமேற் சபைநடு
நடந் திகழ்கின்ற மெய்ஞ்ஞானவார் அமுதே

சத்திய அமுதே தனித்திரு அமுதே
நித்திய அமுதே நிறைசிவ அமுதே

சச்சிதா னந்தத் தனிமுதல் அமுதே
மெய்ச்சிதா காச விளைவருள் அமுதே

ஆனந்த அமுதே அருளொளி அமுதே
தானந்த மில்லாத் தத்துவ அமுதே

நவநிலை தருமோர் நல்லதெள் அமுதே
சிவநிலை தனிலே திரண்டஉள் அமுதே

பொய்படாக் கருணைப் புண்ணிய அமுதே
கைபடாப் பெருஞ்சீர்க் கடவுள்வான் அமுதே

அகம்புறம் அகப்புறம் ஆகிய புறப்புறம்
உகந்த நான்கிடத்தும் ஓங்கிய அமுதே 1286

Koviloor Digital Library

பனிமுதல் நீக்கிய பரம்பர அமுதே
தனிமுத லாய சிதம்பர அமுதே

உலகெலாம் கொள்ளினும் உலப்பிலா அமுதே
அலகிலாப் பெருந்திறல் அற்புத அமுதே

அண்டமும் அதன்மேல் அண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பரம்பர மணியே

பிண்டமும் அதிலுறு பிண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பராபர மணியே

நினைத்தவை நினைத்தவை நினைத்தாங் கெய்துற
அனைத்தையும் தருமோர் அரும்பெறல் மணியே

விண்பதம் அனைத்தும் மேற்பத முழுவதும்
கண்பெற நடத்தும் ககனமா மணியே

பார்பதம் அனைத்தும் பகரடி முழுவதும்
சார்புற நடத்தும் சரவொளி மணியே

அண்ட கோடிகளெல்லாம் அரைக்கணத் தேகிக்
கண்டு கொண்டிடஒளிர் கலைநிறை மணியே

சராசர உயிர்தொறும் சாற்றிய பொருள்தொறும்
விராவியுள் விளங்கும் வித்தக மணியே

மூவரும் முனிவரும் முத்தரும் சித்தரும்
தேவரும் மதிக்கும் சித்திசெய் மணியே 1306

Koviloor Digital Library

தாழ்வெலாம் தவிர்த்துச் சகமிசை அழியா
வாழ்வெனக்கு அளித்த வளரொளி மணியே

நவமணி முதலிய நலமெலாம் தருமொரு
சிவமணி எனுமருட் செல்வமா மணியே

வான்பெறற்கு அரிய வகையெலாம் விரைந்து
நான்பெற அளித்த நாதமந் திரமே

கற்பம் பலபல கழியினும் அழியாப்
பொற்புற வளித்த புனிதமந் திரமே

அகரமும் உகரமும் அழியாச் சிகரமும்
வகரமும் ஆகிய வாய்மை மந்திரமே

ஐந்தென எட்டென ஆறென நான்கென
முந்துறு மறைமுறை மொழியுமந் திரமே

வேதமும் ஆகம விரிவுகள் அனைத்தும்
ஓதநின்று உலவாது ஓங்குமந் திரமே

உடற்பிணி அனைத்தையும் உயிர்ப்பிணி அனைத்தையும்
அடர்ப்பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே

சித்திக்கு மூலமாம் சிவமருந்து எனஉளந்
தித்திக்கு ஞானத் திருவருள் மருந்தே

இறந்தவர் எல்லாம் எழுந்திடப் புரியும்
சிறந்த வல்லபமுறு திருவருள் மருந்தே 1326

Koviloor Digital Library

மரணப் பெரும்பிணி வாரா வகைமிகு
கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே

நரைதிரை மூப்புஅவை நண்ணா வகைதரும்
உரைதரு பெருஞ்சீர் உடையநன் மருந்தே

என்றே என்னினும் இளமையோடு இருக்க
நன்றே தருமொரு ஞானமா மருந்தே

மலப்பிணி த்விர்த்து அருள்வலம் தருகின்றதோர்
நலத்தகை அதுவென நாட்டிய மருந்தே

சிற்சபை நடுவே திருநடம் புரியும்
அற்புத மருந்தெனும் ஆனந்த மருந்தே

இடையுறப் படாத இயற்கை விளக்கமாய்த்
தடையொன்றும் இல்லாத் தகவுடை அதுவாய்

மாற்றிவை என்ன மதித்தளப் பரிதாய்
ஊற்றமும் வண்ணமும் ஒருங்குடை யதுவாய்க்

காட்சிக்கு இனியநற் கலையுடை யதுவாய்க்
ஆட்சிக்கு உரியபன் மாட்சியும் உடைத்தாய்

கைதவர் கனவினும் காண்டற்கு அரிதாய்ச்
செய்தவப் பயனாம் திருவருள் வலத்தால்

உளம்பெறும் இடமெலாம் உதவுக எனவே
வளம்பட வாய்த்து மன்னிய பொன்னே **1346**

Koviloor Digital Library

புடம்படாத் தரமும் விடம்படாத் திறமும்
வடம்படா நலமும் வாய்த்தசெம் பொன்னே

மும்மையும் தருமொரு செம்மையை உடைத்தாய்
இம்மையே கிடைத்திங்கு இலங்கிய பொன்னே

எடுத்தெடுத்து உதவினும் என்றுங் குறையாது
அடுத்தடுத்து ஓங்குமெய் அருளுடைப் பொன்னே

தளர்ந்திடேல் எடுக்கின் வளர்ந்திடு வேமெனக்
கிளர்ந்திட உரைத்துக் கிடைத்தசெம் பொன்னே

எண்ணிய தோறும் இயற்றுக என்றெனை
அண்ணிஎன் கரத்தில் அமர்ந்தபைம் பொன்னே

நீகேள் மறக்கினும் நின்னையாம் விட்டுப்
போகேம் எனஎனைப் பொருந்திய பொன்னே

எண்ணிய எண்ணியாங்கு எய்திட எனக்குப்
பண்ணிய தவத்தால் பழுத்தசெம் பொன்னே

விண்ணியல் தலைவரும் வியந்திட எனக்குப்
புண்ணியப் பயனால் பூத்தசெம் பொன்னே

நால்வகை நெறியினும் நாட்டுக எனவே
பால்வகை முழுதும் பணித்தபைம் பொன்னே

எழுவகை நெறியினும் இயற்றுக எனவே
முழுவகை காட்டி முயங்கிய பொன்னே 1366

Koviloor Digital Library

எண்ணிய படியெலாம் இயற்றுக என்றெனைப்
புண்ணிய பலத்தால் பொருந்திய நிதியே

ஊழிதோர் ஊழி உலப்புறாது ஓங்கி
வாழிஎன்று எனக்கு வாய்த்தநன் நிதியே

இதமுற ஊழிதோறு எடுத்தெடுத்து உலகோர்க்கு
உதவினும் உலவாது ஓங்குநன் நிதியே

இருநிதி எழுநிதி இயல்நவ நிதிமுதல்
திருநிதி எல்லாம் தருமொரு நிதியே

எவ்வகை நிதிகளும் இந்தமா நிதியிடை
அவ்வகை கிடைக்குமென்று அருளிய நிதியே

அற்புதம் விளங்கும் அருட்பெரு நிதியே
கற்பனை கடந்த கருணைமா நிதியே

நற்குண நிதியே சற்குண நிதியே
நிற்குண நிதியே சிற்குண நிதியே

பளகிலாது ஓங்கும் பளிக்குமா மலையே
வளமெலா நிறைந்த மாணிக்க மலையே

மதியுற விளங்கும் மரகத மலையே
வதிதரு பேரொளி வச்சிர மலையே

உரைமனம் கடந்தாங்கு ஓங்குபொன் மலையே
துரியமேல் வெளியில் ஜோதிமா மலையே· 1386

Koviloor Digital Library

புற்புதந் திரைநுரை புரைமுதல் இலதோர்
அற்புதக் கடலே அமுதத்தண் கடலே

இருட்கலை தவிர்த்துஒளி எல்லாம் வழங்கிய
அருட்பெருங் கடலே ஆனந்தக் கடலே

பவக்கடல் கடந்துநான் பார்த்தபோது அருகே
உவப்புறு வளங்கொண்டு ஓங்கிய கரையே

என்துயர்ச் சோடைகள் எல்லாம் தவிர்த்துள
நன்றுற விளங்கிய நந்தனக் காவே

சேற்றுநீர் இன்றிநல் தீஞ்சுவை தருமோர்
ஊற்றுநீர் நிரம்ப உடையபூந் தடமே

கோடைவாய் விரிந்த குளிர்தரு நிழலே
மேடைவாய் வீசிய மெல்லிய! காற்றே

களைப்பறக் கிடைத்த கருணைநன் நீரே
இளைப்பற வாய்த்த இன்சுவை உணவே

தென்னைவாய்க் கிடைத்த செவ்விள நீரே
தென்னைவான் பலத்தில் தீருகுதீம் பாலே

நீர்நசை தவிர்க்கும் நெல்லியங் கனியே
வேர்விளை பலவின் மென்சுவைச் சுளையே

கட்டுமாம் பழமே கதலிவான் பழமே
இட்டநற் சுவைசெய் இலந்தையங் கனியே 1406

Koviloor Digital Library

புனிதவான் தருவில் புதுமையாம் பலமே
கனியெலாங் கூட்டிக் கலந்ததீஞ் சுவையே

இதந்தரு கரும்பில் எடுத்ததீஞ் சாறே
பதந்தரு வெல்லப் பாகினின் சுவையே

சாலவே இனிக்கும் சர்க்கரைத் திரளே
ஏலவே நாவுக்கு இனியகற் கண்டே

உலப்புறாது இனிக்கும் உயர்மலைத் தேனே
கலப்புறா மதுரங் கனிந்தகோற் றேனே

நவையிலாது எனக்கு நண்ணிய நறவே
சுவையெலாம் திரட்டிய தூயதீம் பதமே

பதம்பெற காய்ச்சிய பசுநறும் பாலே
இதம்பெற உருக்கிய இளம்பசு நெய்யே

உலர்ந்திடாது என்றும் ஒருபடித் தாகி
மலர்ந்துநல் வண்ணம் வயங்கிய மலரே

இகந்தரு புவிமுதல் எவ்வுலகு உயிர்களும்
உகந்திட மணக்கும் சுகந்தநன் மணமே

யாழுறும் இசையே இனியவின் இசையே
ஏழுறும் இசையே இயலருள் இசையே

திவளொளிப் பருவம் சேர்ந்தநல் அவளே
அவளொடும் கூடி அடைந்ததோர் சுகமே 1426

Koviloor Digital Library

நாதநல் வரைப்பின் நண்ணிய பாட்டே
வேத கீதத்தில் விளைதிருப் பாட்டே

நன்மார்க்கர் நாவில் நவிற்றிய பாட்டே
சன்மார்க்க சங்கம் தழுவிய பாட்டே

நம்புறும் ஆகம நவிற்றிய பாட்டே
எம்பல மாகிய அம்பலப் பாட்டே

என்மனக் கண்ணே என்னருட் கண்ணே
என்னிரு கண்ணே என்கணுண் மணியே

என்பெருங் களிப்பே என்பெரும் பொருளே
என்பெருந் திறலே என்பெருஞ் செயலே

என்பெருந் தவமே என்தவப் பலனே
என்பெருஞ் சுகமே என்பெரும் பேறே

என்பெரு வாழ்வே என்றன்வாழ் முதலே
என்பெரு வழக்கே என்பெருங் கணக்கே

என்பெரு நலமே என்பெருங் குலமே
என்பெரு வலமே என்பெரும் புலமே

என்பெரு வரமே என்பெரும் தரமே
என்பெரு நெறியே என்பெரு நிலையே

என்பெருங் குணமே என்பெருங் கருத்தே
என்பெருந் தயவே என்பெருங் கதியே 1446

Koviloor Digital Library

என்பெரும் பதியே என்னுயிர் இயலே
என்பெரும் நிறைவே என்றனி அறிவே

தோலெலாங் குழைந்திடச் சூழ்நரம் பனைத்தும்
மேலெலாங் கட்டவை விட்டுவிட்டு இயங்கிட

என்பெலா நெக்குநெக்கு இயலிடை நெகிழ்ந்திட
மென்புடைத் தசையெலா மெய்யுறத் தளர்ந்திட

இரத்தம் அனைத்தும்உள் இறுகிடச் சுக்கிலம்
உரத்திடை பந்தித்து ஒருதிரள் ஆயிட

மடலெலாம் மூளை மலர்ந்திட அமுதம்
உடலெலாம் ஊற்றெடுத்து ஓடி நிரம்பிட

ஒண்ணுதல் வியர்த்திட ஒளிமுகம் மலர்ந்திட
தண்ணிய உயிர்ப்பினில் சாந்தந் ததும்பிட

உண்ணகை தோற்றிட உரோமம் பொடித்திடக்
கண்ணினீர் பெருகிக் கால்வழிந்து ஓடிட

வாய்துடித்து அலறிட வளர்செவித் துணைகளில்
கூயிசைப் பொறியெலாம் கும்மெனக் கொட்டிட

மெய்யெலாங் குளிர்ந்திட மென்மார்பு அசைந்திடக்
கையெலாங் குவிந்திடக் காலெலாஞ் சுலவிட

மனங்கனிந்து உருகிட மதிநிறைந்து ஒளிர்ந்திட
இனம்பெறு சித்தம் இயைந்து களித்திட 1466

Koviloor Digital Library

அகங்காரம் ஆங்காங்கு அதிகரிப்பு அமைந்திடச்
சகங்காண உள்ளம் தழைத்து மலர்ந்திட

அறிவுரு அனைத்தும் ஆனந்தம் ஆயிடப்
பொறியுறும் ஆன்ம தற்போதமும் போயிடத்

தத்துவம் அனைத்துந் தாமொருங்கு ஒழிந்திடச்
சத்துவம் ஒன்றே தனித்துநின்று ஓங்கிட

உலகெலாம் விடயம் உளவெலாம் மறைந்திட
அலகிலா அருளின் ஆசைமேற் பொங்கிட

என்னுளத்து எழுந்துஉயிர் எல்லாம் மலர்ந்திட
என்னுளத்து ஓங்கிய என்றனி அன்பே

பொன்னடி கண்டருட் புத்தமுது உணவே
என்னுளத்து எழுந்த என்னுடை அன்பே

தன்னையே எனக்குத் தந்தருள் ஒளியால்
என்னை வேதித்த என்றனி அன்பே

என்னுளே அரும்பி என்னுளே மலர்ந்து
என்னுளே விரிந்த என்னுடை அன்பே

என்னுளே விளங்கி என்னுளே பழுத்து
என்னுளே கனிந்த என்னுடை அன்பே

தன்னுளே நிறைவுறு தரமெலாம் அளித்தே
என்னுளே நிறைந்த என்றனி அன்பே 1486

Koviloor Digital Library

துன்புள அனைத்தும் தொலைத்தெனது உருவை
இன்புறு வாக்கிய என்னுடை அன்பே

பொன்னுடம்பு எனக்குப் பொருந்திடும் பொருட்டா
என்னுளங் கலந்த என்றனி அன்பே

தன்வச மாகித் ததும்பிமேற் பொங்கி
என்வசம் கடந்த என்னுடை அன்பே

தன்னுளே பொங்கிய தண்ணமுது உணவே
என்னுளே பொங்கிய என்றனி அன்பே

அருளொளி விளங்கிட ஆணவம் எனுமோர்
இருளற என்னுளத்து ஏற்றிய விளக்கே

துன்புறு தத்துவத் துரிசெலாம் நீக்கிநல்
இன்புற என்னுளத்து ஏற்றிய விளக்கே

மயலற அழியா வாழ்வுமேன் மேலும்
இயலுற என்னுளத்து ஏற்றிய விளக்கே

இடுவெளி அனைத்தும் இயலொளி விளங்கிட
நடுவெளி நடுவே நாட்டிய விளக்கே

கருவெளி அனைத்தும் கதிரொளி விளங்கிட
உருவெளி நடுவே ஒளிர்தரு விளக்கே

தேற்றிய வேதத் திருமுடி விளங்கிட
ஏற்றிய ஞான இயலொளி விளக்கே 1506

Koviloor Digital Library

ஆகம முடிமேல் அருளொளி விளங்கிட
வேகமது அறவே விளங்கொளி விளக்கே

ஆரியர் வழுத்திய அருள்நிலை அனாதி
காரியம் விளக்குமோர் காரண விளக்கே

தண்ணிய அமுதே தந்தெனது உளத்தே
புண்ணியம் பலித்த பூரண மதியே

உய்தர அமுதம் உதவியென் உளத்தே
செய்தவம் பலித்த திருவளர் மதியே

பதியெலாந் தழைக்கப் பதம்பெறும் அமுத
நிதியெலாம் அளித்த நிறைதிரு மதியே

பாலெனத் தண்கதிர் பரப்பிளஞ் ஞான்றும்
மேல்வெளி விளங்க விளங்கிய மதியே

உயங்கிய உள்ளமும் உயிருந் தழைத்திட
வயங்கிய கருணை மழைபொழி மழையே

என்னையும் பணிகொண்டு என்னுளே நிரம்ப
மன்னிய கருணை மழைபொழி மழையே

உளங்கொளும் எனக்கே உவகைமேற் பொங்கி
வளங்கொளக் கருணை மழைபொழி மழையே

நலந்தர உடலுயிர் நல்லறிவு எனக்கே
மலர்ந்திடக் கருணை மழைபொழி மழையே 1526

Koviloor Digital Library

தூய்மையால் எனது துரிசெலாம் நீக்கிநல்
வாய்மையால் கருணை மழைபொழி மழையே

வெம்மல இரவது விடிதரு ணந்தனில்
செம்மையில் உதித்துஉளந் திகழ்ந்தசெஞ் சுடரே

திரையெலாம் தவிர்த்துச் செவ்வியுற் றாங்கே
வரையெலாம் விளங்க வயங்குசெஞ் சுடரே

அலகிலாத் தலைவர்கள் அரசுசெய் தத்துவ
உலகெலாம் விளங்க ஓங்குசெஞ் சுடரே

முன்னுறு மலவிருள் முழுவதும் நீக்கியே
என்னுள வரைமேல் எழுந்தசெஞ் சுடரே

ஆதியும் நடுவுடன் அந்தமுங் கடந்த
ஜோதியாய் என்னுளஞ் சூழ்ந்தமெய்ச் சுடரே

உள்ளொளி ஓங்கிட உயிரொளி விளங்கிட
வெள்ளொளி காட்டிய மெய்யருட் கனலே

நலங்கொளப் புரிந்திடு ஞானயா கத்திடை
வலஞ்சுழித்து. எழுந்து வளர்ந்தமெய்க் கனலே

வேதமும் ஆகம விரிவும் பரம்பர
நாதமும் கடந்த ஞானமெய்க் கனலே

எண்ணிய எண்ணிய எல்லாந்தர எனுள்
நண்ணிய புண்ணிய ஞானமெய்க் கனலே 1546

Koviloor Digital Library

வலமுறு சுத்த சன்மார்க்க நிலைபெறு
நலமெலாம் அளித்த ஞானமெய்க் கனலே

இரவொடு பகலிலா இயல்பொது நடமிடு
பரம வேதாந்தப் பரம்பரஞ் சுடரே

வரநிறை பொதுவிடை வளர்திரு நடம்புரி
பரமசித் தாந்தப் பதிபரஞ் சுடரே

சமரச சத்தியச் சபையில் நடம்புரி
சமரச சத்தியத் தற்சுயஞ் சுடரே

சபையெனது உளமெனத் தானமர்ந்து எனக்கே
அபயம் அளித்ததோர் அருட்பெருஞ் ஜோதி

மருளெலாம் தவிர்த்து வரமெலாங் கொடுத்தே
அருளமுது அருத்திய அருட்பெருஞ் ஜோதி

வாழிநின் பேரருள் வாழிநின் பெருஞ்சீர்
ஆழியொன் றளித்த அருட்பெருஞ் ஜோதி

என்னையும் பொருளென எண்ணிஎன் உளத்தே
அன்னையும் அப்பனும் ஆகி வீற்றிருந்து

உலகியல் சிறிதும் உளம்பிடி யாவகை
அலகில்பேர் அருளால் அறிவது விளக்கிச்

சிறுநெறி செல்லாத் திறனளித்து அழியாது
உறுநெறிஉணர்ச்சிதந்து ஒளியுறப் புரிந்து 1566

Koviloor Digital Library

சாகாக் கல்வியின் தரமெலாம் உணர்த்திச்
சாகா வரத்தையும் தந்துமேன் மேலும்

அன்பையும் விளைவித்து அருட்பேர் ஒளியால்
இன்பையும் நிறைவித்து என்னையும் நின்னையும்

ஒருரு வாக்கியான் உன்னிய படியெலாம்
சீருறச் செய்துஉயிர்த் திறம்பெற அழியா

அருளமுது அளித்தனை அருள்நிலை ஏற்றினை
அருளறிவு அளித்தனை அருட்பெருஞ் ஜோதி

வெல்கநின் பேரருள் வெல்கநின் பெருஞ்சீர்
அல்கலின்று ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

உலகுயிர்த் திரளெலாம் ஒளிநெறி பெற்றிட
இலகும் ஐந்தொழிலையும் யான்செயத் தந்தனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

மூவரும் தேவரும் முத்தரும் சித்தரும்
யாவரும் பெற்றிடா இயல்எனக்கு அளித்தனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

சித்திகள் அனைத்தையும் தெளிவித்து எனக்கே
சத்திய நிலைதனைத் தயவினில் தந்தனை 1586

Koviloor Digital Library

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

உலகினில் உயிர்களுக்கு உறுமிடை யூறெலாம்
விலகநீ அடைந்து விலக்குக மகிழ்க

சுத்தசன் மார்க்க சுகநிலை பெறுக
உத்தமன் ஆகுக ஓங்குக என்றனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் ஜோதி

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி 1596

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

# அருட்பெருஞ்ஜோதி அட்டகம்

அருட்பெரு வெளியில் அருட்பெரு உலகத்து
அருட்பெருந் தலத்துமேல் நிலையில்
அருட்பெரும் பீடத்து அருட்பெரு வடிவில்
அருட்பெருந் திருவிலே அமர்ந்த
அருட்பெரும் பதியே அருட்பெரு நிதியே
அருட்பெருஞ் சித்திஎன் அமுதே
அருட்பெருங் களிப்பே அருட்பெருஞ் சுகமே
அருட்பெருஞ் ஜோதிஎன் அரசே!. 1

குலவுபேர் அண்டப்பகுதி ஓர் அனந்த
கோடி கோடிகளும் ஆங்காங்கே
நிலவிய பிண்டப் பகுதிகள் முழுதும்
நிகழ்ந்த பற்பல பொருள் திரளும்
விலகுறாது அகத்தும் புறத்தும் மேல்இடத்தும்
மெய் அறிவானந்தம் விளங்க
அலகுறாது ஒழியாது அதுவதில் விளங்கும்
அருட்பெருஞ் ஜோதி என் அரசே. 2

கண்முதல் பொறியால் மனமுதல் கரணக்
கருவினால் பகுதியின் கருவால்
எண்முதல் புருட தரத்தினால் பரத்தால்
இசைக்குமோர் பரம்பர உணர்வால்
விண்முதல் பரையால் பராபர அறிவால்
விளங்குவது அரிது என உணர்ந்தோர்
அண்முதல் தடித்துப் படித்திட ஓங்கும்
அருட்பெருஞ் ஜோதி என் அரசே. 3

Koviloor Digital Library

நசைத்த மேல்நிலை ஈதுஎன உணர்ந்தாங்கே
நண்ணியுங் கண்ணுறாது அந்தோ
திசைத்த மாமறைகள் உயங்கின மயங்கித்
திரும்பின எனில் அதன் இயலை
இசைத்தல் எங்ஙனமோ ஐயகோ சிறிதும்
இசைத்திடுவேம் என நாவை
அசைத்திடற்கு அரிதென்று உணர்ந்துளோர் வழுத்தும்
அருட்பெருஞ் ஜோதி என் அரசே. 4

சுத்த வேதாந்த மவுனமோ அலது
சுத்த சித்தாந்த ராசியமோ
நித்த நாதாந்த நிலை அனுபவமோ
நிகழ்பிற முடிபின் மேன்முடிபோ
புத்தமுது அனைய சமரசத் ததுவோ
பொருளியல் அறிந்திலம் எனவே
அத்தகை உணர்ந்தோர் உரைத்து உரைத்து ஏத்தும்
அருட்பெருஞ் ஜோதி என் அரசே. 5

ஏகமோ அன்றி அனேகமோ என்றும்
இயற்கையோ செயற்கையோ சித்தோ
தேகமோ பொதுவோ சிறப்பதோ பெண்ணோ
திகழ்ந்திடும் ஆணதோ அதுவோ
யோகமோ பிரிவோ ஒளியதோ வெளியோ
உரைப்பதெற்றோ என உணர்ந்தோர்
ஆகமோடு உரைத்து வழுத்த நின்றோங்கும்
அருட்பெருஞ் ஜோதி என் அரசே. 6

Koviloor Digital Library

தத்துவம் அனைத்தும் தனித்தனி கடந்தேம்
தத்துவாதீத மேல் நிலையில்
சித்தியல் முழுதும் தெரிந்தனம் அவைமேல்
சிவநிலை தெரிந்திடச் சென்றேம்
ஒத்த அந்நிலைக்கண் யாமும் எம்உணர்வும்
ஒருங்குறக் கரைந்து போயினம் என்று
அத்தகை உணர்ந்தோர் வழுத்த நின்றோங்கும்
அருட்பெருஞ் ஜோதி என் அரசே. 7

எங்குமாய் விளங்கும் சிற்சபை இடத்தே
இதுஅது என உரைப்பரிதாய்த்
தங்குமோர் இயற்கைத் தனி அனுபவத்தைத்
தந்து எனைத் தன்மய மாக்கிப்
பொங்கும் ஆனந்த போக போக்கியனாய்ப்
புத்தமுது அருத்தி என் உளத்தே
அங்கையில் கனிபோன்று அமர்ந்து அருள்புரிந்த
அருட்பெருஞ் ஜோதி என் அரசே. 8

## வேண்டுதல்

நன்னாலும் கடந்தே ஒளிர் ஞான சபாபதியே
பொன்னாரும் சபையாய் அருட்பூரண புண்ணியனே
என்னால் ஆவதொன்றும்உனக்கு இல்லையெனினும்
எந்தாய்
உன்னால் வாழுகின்றேன் எனக்கு உண்மை
உரைத்தருளே!

Koviloor Digital Library

புண்படா உடம்பும் புரைபடா மனமும்
பொய்படா ஒழுக்கமும் பொருந்தி
கண்படாது இரவும் பகலும் நின்றனையே
கருத்தில் வைத்து ஏத்துதற்கு இசைந்தேன்
உண்பனே யெனினும் உடுப்பனே யெனினும்
உலகரை நம்பிலேன் எனது
நண்பனே! நலஞ்சார் பண்பனே! உனையே
நம்பினேன்! கைவிடேல் எனையே! 1

சற்சபைக் குரியார் தம்மொடும் கூடித்
தனித்த பேரன்பும் மெய்யறிவும்
நற்சபைக்கு உரிய ஒழுக்கமும் அழியா
நல்லமெய் வாழ்க்கையும் பெற்றே
சிற்சபை நடமும் பொற்சபை நடமும்
தினந்தொறும் பாடிநின் றாடித்
தெற்சபை உலகத்து உயிர்க்கெலாம் இன்பம்
செய்வது என் இச்சையாம் எந்தாய் 2

தாயும்என் ஒருமைத் தந்தையும் ஞான
சபையிலே தனிநடம் புரியும்
தூயநின் பாதம் துணையெனப் பிடித்தேன்
தூக்கமும் சோம்பலும் துயரும்
மாயையும் வினையும் மறைப்பும் ஆணவமும்
வளைத்தெனைப் பிடித்திடல் வழக்கோ
நாயினேன் இனி ஓர் கணம் தரிப்பறியேன்
நல் அருட்ஜோதி தந்து அருளே 3

Koviloor Digital Library

# ஜோதி

| | | | |
|---|---|---|---|
| ஜோதி | ஜோதி | ஜோதி | சுயம் |
| ஜோதி | ஜோதி | ஜோதி | பரம் |
| ஜோதி | ஜோதி | ஜோதி | அருள் |
| ஜோதி | ஜோதி | ஜோதி | சிவம் |

| | | | |
|---|---|---|---|
| வாம | ஜோதி | சோம | ஜோதி |
| வான | ஜோதி | ஞான | ஜோதி |
| மாக | ஜோதி | யோக | ஜோதி |
| வாத | ஜோதி | நாத | ஜோதி |
| ஏம | ஜோதி | வியோம | ஜோதி |
| ஏறு | ஜோதி | வீறு | ஜோதி |
| ஏக | ஜோதி | ஏக | ஜோதி |
| ஏக | ஜோதி | ஏக | ஜோதி |
| ஆதி | நீதி | வேத | னே |
| ஆடல் | நீடு | பாத | னே |
| வாதி | ஞான | போத | னே |
| வாழ்க | வாழ்க | நாத | னே |

- - - - -

வாழி என் ஆண்டவன் ! வாழி எங்கோன் அருள் வாய்மை என்றும் !
வாழி எம்மான் புகழ் ! வாழி என்நாதன் மலர்ப்பதங்கள் !
வாழி மெய்ச் சுத்த சன்மார்க்கப் பெருநெறி மாண்பு கொண்டு
வாழி இவ்வையமும் வானமும் மற்றவும் வாழியவே !

- - - - -

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

வள்ளல் மலரடி வாழ்க! வாழ்க!

Koviloor Digital Library

# சுத்த சன்மார்க்க வேண்டுகோள்

அப்பாநான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தை நினது அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான் செயினும் நீ பொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே 1

ஐயா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
அடிமுடி கண்டு எந்நாளும் அனுபவித்தல் வேண்டும்
பொய்யாத வாய்மைகளே புகன்றிடுதல் வேண்டும்
புகன்றபடி புகன்றபடி புரிந்திடுதல் வேண்டும்
எய்யாத அருட்ஜோதி என்கையுறல் வேண்டும்
இறந்தஉயிர் தமைமீட்டும் எழுப்பியிடல் வேண்டும்
நையாத வண்ணம் உயிர் காத்திடுதல் வேண்டும்
நாயக நின்றனைப் பிரியாது உறுதலும் வேண்டுவனே 2

அண்ணா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும்
அழியாத தனிவடிவம் யான் அடைதல் வேண்டும்
கண்ணார நினையெங்கும் கண்டு உவத்தல் வேண்டும்
காணாத காட்சியெலாம் கண்டு கொளல் வேண்டும்
பண்ணார நின்றனையே பாடியுறல் வேண்டும்
பரமானந்தப் பெரும் கூத்தாடியிடல் வேண்டும்
உண்ணாடி உயிர்கள் உறும் துயர்தவிர்த்தல் வேண்டும்
உனைப்பிரியாது உறுகின்ற உறவது வேண்டுவனே 3

Koviloor Digital Library

அத்தாநான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்ஜோதியைப் பெற்றே அகங்களித்தல் வேண்டும்
செத்தாரை மீட்டும் இங்கே எழுப்பியிடல் வேண்டும்
திருச்சபைக்கே அடிமைகளாச் செய்வித்தல் வேண்டும்
ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுளராகி உலகியல் நடத்தல் வேண்டும்
எத்தாலும் அழியாத வடிவதிலே நானும்
எந்தாயும் ஒன்றாக இனிதுறல் வேண்டுவனே 4

அரைசேநான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்ஜோதியைப் பெற்றே அகமகிழ்தல் வேண்டும்
வரைசேர் எவ்வுலகமும் ஓர் ஒழுக்கமுறல் வேண்டும்
மடிந்தாரை மீளவும்நான் வருவித்தல் வேண்டும்
புரைசேரும் கொலைநெறியும் புலைநெறியும் சிறிதும்
பொருந்தாமல் எவ்வுயிரும் புரிந்து உவத்தல் வேண்டும்.
உரைசேர் மெய்த் திருவடிவில் எந்தாயும் நானும்
ஒன்றாகி எஞ்ஞான்றும் ஓங்குதல் வேண்டுவனே 5

அடிகேள் நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
அண்டமெலாம் பிண்டமெலாம் கண்டுகொளல் வேண்டும்
துடிசேர் எவ்வுலகமும் எத்தேவரும் எவ்வுயிரும்
சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றிடுதல் வேண்டும்
படிவானும் படைத்தல் முதல் ஐந்தொழிலும் ஞானம்
படைத்தல் முதல் ஐந்தொழிலும் நான்புரிதல் வேண்டும்
ஒடியாத திருவடிவில் எந்தாயும் நானும்
ஒன்றாகி எஞ்ஞான்றும் ஓங்குதல் வேண்டுவனே 6

KovilorDigital Library

அம்மாநான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும்
ஆணவமாதிய முழுதும் அறுத்துநிற்றல் வேண்டும்
இம்மாலைத் தத்துவங்கள் எல்லாம் என் வசத்தே
இயங்கி ஒரு தீமையும் இல்லாது இருத்தல்வேண்டும்
எம்மான்நான் வேண்டுதல் வேண்டாமையறல் வேண்டும்
ஏகசிவபோகம் அனுபோக முறல் வேண்டும்
தம்மானத் திருவடிவில் எந்தாயும் நானும்
சார்ந்து கலந்து ஓங்குகின்ற தன்மையும் வேண்டுவனே 7

அச்சா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆறந்த நிலைகளெலாம் அறிந்து அடைதல் வேண்டும்
எச்சார்பும் ஆகி உயிர்க்கு இதம் புரிதல் வேண்டும்
எனை அடுத்தார் தமக்கெல்லாம் இன்புதரல் வேண்டும்
இச்சாதி சமய விகற்பங்கள் எல்லாம் தவிர்த்தே
எவ்வுலகும் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்
உச்சாதி அந்தமிலாத் திருவடிவில் யானும்
உடையாயும் கலந்து ஓங்கும் ஒருமையும் வேண்டுவனே 8

அறிவா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஐந்தொழில் நான் புரிந்து உலகில் அருள்விளக்கல் வேண்டும்
செறியாத கரணமெலாம் செறித்து அடக்கல் வேண்டும்
சித்தாந்த வேதாந்தப் பொது சிறத்தல் வேண்டும்
எறியாது என் எண்ணமெலாம் இனிதருளல் வேண்டும்
எல்லாஞ்செய் வல்லசித்தே எனக்களித்தல் வேண்டும்
பிறியாது என்னொடு கலந்து நீ இருத்தல் வேண்டும்
பெருமான் நின்றனைப் பாடி ஆடுதல் வேண்டுவனே 9

Koviloor Digital Library

அருளாநான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
அணுத்துணையும் சினங்காமம் அடையாமை வேண்டும்
மருளாய உலகமெலாம் மருள்நீங்கி ஞான
மன்றிடத்தே வள்ளல் உனை வாழ்த்தியிடல் வேண்டும்
இருளாமையுறல் வேண்டும் எனையடுத்தார் சுகம்வாய்ந்
திடல் வேண்டும் எவ்வுயிரும் இன்படைதல் வேண்டும்
பொருளாம் ஓர் திருவடிவில் உடையாயும் நானும்
புணர்ந்து கலந்து ஒன்றாகிப் பொருந்துதல்
வேண்டுவனே 10

அமலாநான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆடிநிற்கும் சேவடியைப் பாடிநிற்க வேண்டும்
எமனாதித் தடையென்றும் எய்தாமை வேண்டும்
எல்லாம் செய் வல்லதிறன் எனக்களித்தல் வேண்டும்
கமையாதி அடைந்து உயிர்கள் எல்லாம் சன்மார்க்கம்
காதலித்தே திருப்பொதுவைக் களித்து ஏத்தல் வேண்டும்
விமலாதி உடைய ஒரு திருவடிவில் யானும்
விமலா நீயும் கலந்தே விளங்குதல் வேண்டுவனே 11

- - - - -

தருணம் இஞ்ஞான்றே சுத்த சன்மார்க்கத்
தனிநெறி உலகெலாம் தழைப்பக்
கருணையும் சிவமே பொருள் எனக் கருதும்
கருத்தும் உற்று எம்மனோர் களிப்பப்
பொருள்நிறை ஓங்கத் தெருள்நிலை விளங்கப்
புண்ணியம் பொற்புற வயங்க
அருள்நயந்து அருள்வாய் திருச்சிற்றம் பலத்தே
அருட்பெருஞ் ஜோதி என் அரசே

Koviloor Digital Library

# திருவருள் வேட்டல்

பெரியன் அருட்பெருஞ்ஜோதிப் பெருங்கருணைப் பெருமான்
பெரும்புகழைப் பேசுதலே பெரும்பேறு என்றுணர்ந்தேன்
துரிய நிலத்தவர் எல்லாம் துதிக்கின்றார் ஏழை
துதித்தல் பெரிதல இங்கே துதித்திட என்றெழுந்த
அரிய பெரும் பேராசைக் கடல் பெரிதே அதுவென்
அளவுகடந்து இழுக்கின்றது ஆதலினால் விரைந்தே
உரிய அருள் அமுதளித்தே நினைத் துதிப்பித்து அருள்வாய்
உலகமெலாம் களித்தோங்க ஓங்கு நடத்தரசே! 1

உன்னை மறந்திடுவேனோ மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணந்தரியேன் உன் ஆணை இது நீ
என்னை மறந்திடுவாயோ மறந்திடுவாய் எனில் யான்
என்ன செய்வேன் எங்குறுவேன் எவர்க்குரைப்பேன் எந்தாய்
அன்னையினும் தயவுடையாய் நீமறந்தாய் எனினும்
அகிலமெலாம் அளித்திடும் நின் அருள் மறவாதென்றே
இன்னும் மிகக் களித்து இங்கே இருக்கின்றேன் மறவேல்
இதுதருணம் அருட்ஜோதி எனக்கு விரைந்து அருளே 2

நான் மறந்தேன் எனினும் எனைத்தான் மறவான் எனது
நாயகன் என்று ஆடுகின்றேன் எனினும் இதுவரையும்
வான் மறந்தேன் வானவரை மறந்தேன் மால் அயனை
மறந்தேன் அம் உருத்திரரை மறந்தேன் என்னுடைய
ஊன் மறந்தேன் உயிர்மறந்தேன் உணர்ச்சியெலாம் மறந்தேன்
உலகமெலாம் மறந்தேன் இங்கு உன்னை மறந்தறியேன்
பான் மறந்த குழவியைப்போல் பாரேல் இங்கு எனையே
பரிந்து நினது அருட்ஜோதி புரிந்து மகிழ்ந்து அருளே 3

Koviloor Digital Library

படமுடியாது இனித்துயரம் பட முடியாது அரசே
பட்டதெலாம் போதும் இந்த பயம் தீர்த்து இப்பொழுது என்
உடலுயிர் ஆதியவெல்லாம் நீ எடுத்துக் கொண்டு உன்
உடலுயிர் ஆதியவெல்லாம் உவந்து எனக்கே அளிப்பாய்
வடலுறு சிற்றம்பலத்தே வாழ்வாய் என் கண்ணுண்
மணியே என் குருமணியே மாணிக்க மணியே
நடன சிகாமணியே என் நவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராஜமணியே 4

வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட
மரபினில் யான் ஒருவனன்றோ வகையறியேன் இந்த
ஏழைபடும் பாடு உனக்குத் திருவுளச் சம்மதமோ
இது தகுமோ இது முறையோ இது தருமந்தானோ
மாழை மணிப் பொதுநடஞ்செய் வள்ளால் யான் உனக்கு
மகன் அலனோ நீ எனக்கு வாய்த்த தந்தை அலையோ
கோழை உலகு உயிர்த்துயரம் பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள் நின்அருள்ஒளியைக் கொடுத்தருள்
இப்பொழுதே 5

ஆணை உன்மேல் ஆணை உன்மேல் ஆணை உன்மேல்
ஐயா
அரைக்கணமும் நினைப்பிரிந்தே இனித்தரிக்க மாட்டேன்
கோணை நிலத்தவர் பேசக் கேட்டதுபோல் இன்னும்
குறும்புமொழி செவிகளுறக் கொண்டிடவு மாட்டேன்
ஊணை உறக்கத்தினை நான் விடுகின்றேன் நீ தான்
உவந்து வராய் எனில் என்றன் உயிரையும் விட்டிடுவேன்
மாணை மணிப் பொது நடஞ்செய் வள்ளால் நீ எனது
மனமறிவாய் இனம் உனக்கு வகுத்துரைப்ப தென்னே 6

Koviloor Digital Library
கவலையெலாம் தவிர்ந்து மிக களிப்பினொடு நினையே
கைகுவித்துக் கண்களில் நீர் கனிந்து சுரந்திடவே
சவலைமனச் சலனமெலாம் தீர்ந்து சுகமயமாய்த்
தானே தானாகி இன்பத் தனிநடஞ்செய் இணைத்தாள்
தவலருஞ்சீர்ச் சொன்மாலை வனைந்து வனைந்து அணிந்து
தானாகி நானாடத் தருணம் இது தானே
குவலயத்தார் அதிசயிக்க எழுந்தருளி வருவாய்
குருவே என் குற்றமெலாம் குணமாக் கொண்டவனே 7

தடித்த ஓர் மகனைத் தந்தையீண்டு அடித்தால்
தாயுடன் அணைப்பள் தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன் இங்கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத்தாடும்
புனித நீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மை அப்பா இனி ஆற்றேன். 8

மருளும் துயரும் தவிரும் படிஎன்
மனமன் றிடை நீ வருவாய் அபயம்
இருளும் பவமும் பெறுவஞ் சகநெஞ்
சினன்என் றிகழேல் அபயம் அபயம்
வெருளும் கொடுவெம் புலையும் கொலையும்
விடுமா றருள்வாய் அபயம் அபயம்
அருளும் பொருளும் தெருளும் தருவாய்
அபயம் அபயம் அபயம் அபயம். 9

Koviloor Digital Library

வருவாய் என் கண்மணி நீ என்
மனத்தில் குறித்த வண்ணமெலாம்
தருவாய் தருணம் இதுவே மெய்த்
தலைவா ஞான சபாபதியே
உருவாய் சிறிது தாழ்க்கில் உயிர் ஒருவும்
உரைத்தேன் என்னுடை வாய்
இருவாய் அல நின் திருவடிப் பாட்டிசைக்கும்
ஒருவாய் உரைத் தேனே 10

எந்தவகை செய்திடில் கருணை எந்தாய்
நீ தான் இரங்குவையோ
அந்த வகையை நானறியேன் அறிவிப்
பாரும் எனக் கில்லை
இந்தவகை இங்கு ஐயோ நான் இருந்தால்
பின்னர் என் செய்கேன்
பந்தவகை அற்றவர் உளத்தே நடிக்கும்
உண்மைப் பரம்பொருளே 11

கூடுங்கருணைத் திருக் குறிப்பை
இற்றைப் பொழுதே குறிப்பித்து
வாடுஞ் சிறியேன் வாட்டமெலாந் தீர்த்து
வாழ்வித் திடல் வேண்டும்
பாடும் புகழோய் நினை அல்லால்
துணை வேறில்லைப் பரவெளியில்
ஆடுஞ் செல்வத் திருவடிமேல்
ஆணை முக்கால் ஆணையதே 12

Koviloor Digital Library

# மரணமிலாப் பெருவாழ்வு (அல்லது) ஞான சரியை

1873 ஸ்ரீ முக வருடம் கார்த்திகை மாதம் புனர்பூச நட்சத்திரத்தில், திருவருட் பிரகாச வள்ளற் பெருமான் அவர்கள், உள்ளிருந்த விளக்கை திருமாளிகைப் புறத்தில் வைத்துத், "தடைபடாது ஆராதியுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். மேலும் "ஆண்டவர் இப்போது, தீப முன்னிலையில் விளங்குகின்றபடியால் உங்களுடைய காலத்தை வீணில் கழிக்காமல் நினைந்து நினைந்து' என்னும் பாசுரங்கள் அடங்கிய பாடலிற் கண்டபடி தெய்வபாவனையை இந்த தீபத்தில் செய்யுங்கள்" என்று திருக்கட்டளை இட்டார்கள். இதற்கு சான்றாக

"ஆதி அந்தமும் இல்லதோர் அம்பலத்தாடும்
சோதி தன்னையே நினைமின்கள் சுகம்பெற விழைவீர்
நீதி கொண்டு உரைத்தேன் இது நீவிர் மேலேறும்
வீதி மற்றைய வீதிகள்கீழ்ச் செலும் வீதி"

என்ற தமது திருவருட்பாவில் உத்தம வழியாகிய 'ஒளி வழிபாட்டை' வற்புறுத்தியுள்ளார்கள். அருட்பெருஞ்சோதி வடிவாய் உள்ள இறைவனின் திருவருளை நாம் அடைந்து 'மரணமிலாப் பெருவாழ்வில்' வாழ நம்மை அழைத்துச் செல்வதே 'ஞான சரியை' என்னும் மரணமிலாப் பெருவாழ்வு பாடல்கள் ஆகும். இதை ஓதி பயன் பெறுவோம் வாரீர்! வாரீர்!

Koviloor Digital Library

நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து
நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீர்
அதனால் உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துதும் நாம் வம்மின் உலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம் சொல்கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே. 1

புகுந்தருணம் இது கண்டீர் நம்மவரே நான்தான்
புகல்கின்றேன் என்மொழி ஓர் பொய்ம்மொழி என்னாதீர்
உகுந்தருணம் உற்றவரும் பெற்றவரும் பிறரும்
உடைமைகளும் உலகியலும் உற்றதுணை அன்றே
மிகுந்த சுவைக் கரும்பே செங்கனியே கோற்றேனே
மெய்ப்பயனே கைப்பொருளே விலையறியா மணியே
தகுந்த தனிப் பெரும்பதியே, தயாநிதியே, கதியே
சத்தியமே என்றுரைமின் பத்தியொடு பணிந்தே 2

பணிந்து பணிந்து அணிந்து அணிந்து பாடுமினோ உலகீர்
பரம்பரமே சிதம்பரமே பராபரமே வரமே
துணிந்து வந்த வேதாந்த சுத்த அனுபவமே
துரியமுடி அனுபவமே சுத்த சித்தாந்தமதாய்த்
தணிந்த நிலைப் பெருஞ்சுகமே சமரச சன்மார்க்க
சத்தியமே இயற்கையுண்மைத் தனிப்பதியே என்று
கணிந்து உளத்தே கனிந்து நினைந்து உரைத்திடில்
அப்பொழுதே
காணாத காட்சியெலாம் கண்டுகொளலாமே! 3

Koviloor Digital Library

கண்டதெலாம் அநித்தியமே கேட்டதெலாம் பழுதே
கற்றதெலாம் பொய்யே நீர் களித்ததெலாம் வீணே
உண்டதெலாம் மலமே உட்கொண்டதெலாம் குறையே
உலகியலீர் இதுவரையும் உண்மை அறிந்திலிரே
விண்டதனால் என் இனிநீர் சமரச சன்மார்க்க
மெய்ந் நெறியைக் கடைப்பிடித்து மெய்ப்பொருள் நன்குணர்ந்தே
எண்டகு சிற்றம்பலத்தே எந்தை அருள் அடைமின்
இறவாத வரம் பெறலாம் இன்பம்உறலாமே! 4

இன்புறலாம் எவ்வுலகும் ஏத்திட வாழ்ந்திடலாம்
எல்லாம்செய் வல்ல சித்தி இறைமையும் பெற்றிடலாம்
அன்புடையீர் வம்மின் இங்கே சமரச சன்மார்க்கம்
அடைந்திடுமின் அகவடிவு இங்கு அனக வடிவாகிப்
பொன்புடை நன்கு ஒளிர் ஒளியே புத்தமுதே ஞான
பூரணமே ஆரணத்தின் பொருள் முடிமேல் பொருளே
வன்புடையார் பெறற்கரிதாம் மணியே சிற்சபையின்
மாமருந்தே என்றுரையின் தீமையெலாம் தவிர்ந்தே 5

தீமையெலாம் நன்மைஎன்றே திருவுளங் கொண்டருளிச்
சிறியேனுக்கு அருளமுதத் தெளிவளித்த திறத்தை
ஆமயம் தீர்த்து இயற்கை இன்ப அனுபவமே மயமாய்
அம்பலத்தே விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோதியை ஓர்
ஓமயவான் வடிவுடையார் உள்ளகத்தே நிறைந்த
ஒரு பொருளைப் பெருங்கருணை உடைய பெரும்பதியை
நாம்மருவி இறவாத நலம் பெறலாம் உலகீர்
நல்லஒரு தருணமிது வல்லை வம்மின் நீரே 6

Koviloor Digital Library

நீர் பிறரோ யான் உமக்கு நேய உறவலனோ
நெடுமொழியே உரைப்பன் அன்றிக் கொடுமொழி
சொல்வேனோ
சார்புறவே அருளமுதம் தந்து எனை மேல் ஏற்றித்
தனித்த பெரும் சுகமளித்த தனித்த பெரும் பதிதான்
சீர்பெறவே திருப்பொதுவில் திருமேனி தரித்துச்
சித்தாடல் புரிகின்ற திருநாள்கள் அடுத்த
ஓர்புறவே இதுநல்ல தருணம் இங்கே வம்மின்
உலகியலீர் உன்னியவாறு உற்றிடுவீர் விரைந்தே 7

விரைந்து விரைந்து அடைந்திடுமின் மேதினியீர் இங்கே
மெய்ம்மை உரைக்கின்றேன் நீர் வேறு நினையாதீர்
திரைந்து திரைந்து உளுத்தவரும் இளமை அடைந்திடவும்
செத்தவர்கள் எழுந்திடவும் சித்தாடல் புரிய
வரைந்து வரைந்து எல்லாஞ்செய் வல்ல சித்தன் தானே
வருகின்ற தருணமிது வரம்பெறலாம் நீவிர்
கரைந்து கரைந்து உளம் உருகிக் கண்களில் நீர்பெருகிக்
கருணை நடக் கடவுளை உட்கருதுமினோ களித்தே 8

களித்து உலகில் அளவிகந்த காலம் உலகு எல்லாம்
களிப்படைய அருட்ஜோதிக் கடவுள் வரு தருணம்
தெளித்திடும் எத்தருணம் அதோ என்னாதீர் இதுவே
செத்தவரை எழுப்புகின்ற திகழ்தருணம் உலகீர்
ஒளித்து உரைக்கின்றேன் அலன் நான் வாய்ப்பறை
ஆர்க்கின்றேன்
ஒரு சிறிதும் அச்சமுறேன் உள்ளபடி உணர்ந்தேன்
அளித்திடு சிற்றம்பலத்து என் அப்பன் அருள்பெறவே
ஆசையுண்டேல் வம்மின் இங்கே நேசம் உடையீரே 9

Koviloor Digital Library

ஆசை உண்டேல் வம்மின் இங்கே அருட்ஜோதிப் பெருமான்
அம்மையுமாய் அப்பனுமாய் அருளும் அருளாளன்
ஏசறநீத்து எனை ஆட்கொண்டு எண்ணியவாறு அளித்தான்
எல்லாம்செய் வல்ல சித்தன் என் உயிரில் கலந்தான்
தேசுடைய பொதுவில் அருள் திருநடனம் புரியத்
திருவுளங் கொண்டு எழுந்தருளும் திருநாள் இங்கு இதுவே
மோசஉரை என நினைத்து மயங்காதீர் உலகீர்
முக்காலத்தினும் அழியா மூர்த்தம் அடைந்திடவே 10

அடைந்திடுமின் உலகீர் இங்கு இது தருணம் கண்டீர்
அருட்ஜோதிப் பெரும்பதி என் அப்பன் வருதருணம்
கரைந்ததனித் திருவமுதம் களித்தருத்தி எனக்கே
காணாத காட்சியெலாம் காட்டுகின்ற தருணம்
இடைந்து ஒருசார் அலையாதீர் சுகம் எனைப் போல் பெறுவீர்
யான்வேறு நீர்வேறு என்று எண்ணுகிலேன் உரைத்தேன்
உடைந்த சமயக்குழிநின்று எழுந்து உணர்மின் அழியா
ஒருநெறியாம் சன்மார்க்கத் திருநெறிபெற்று உவந்தே 11

திருநெறி ஒன்றே அதுதான் சமரச சன்மார்க்கச்
சிவநெறி என்று உணர்ந்து உலகீர் சேர்ந்திடுமின் ஈண்டு
வருநெறியில் எனை ஆட்கொண்டு அருள் அமுதம் அளித்து
வல்லப சத்திகள் எல்லாம் வழங்கிய ஓர் வள்ளல்
பெருநெறியில் சித்தாடத் திருவுளங் கொண்டருளிப்
பெருங்கருணை வடிவினொடு வருதருணம் இதுவே
கருநெறி வீழ்ந்து உழலாதீர் கலக்கம் அடையாதீர்
கண்மையினால் கருத்து ஒருமித்து உண்மை உரைத்தேனே 12

Koviloor Digital Library

உண்மை உரைக்கின்றேன் இங்கு உவந்து அடைமின் உலகீர்
உரை இதனில் சந்தேகித்து உளறி வழியாதீர்
எண்மையினான் என நினையீர் எல்லாம் செய் வல்லான்
என்னுள் அமர்ந்து இசைக்கின்றான் இது கேண்மின் நீவிர்
தண்மையொடு சுத்தசிவ சன்மார்க்க நெறியில்
சார்ந்து விரைந்து ஏறுமினோ சத்திய வாழ்வளிக்கக்
கண்மைதரும் ஒருபெருஞ்சீர் கடவுள்எனப் புகலும்
கருணைநிதி வருகின்ற தருணம் இது தானே 13

தானே தானாகி எலாம் தானாகி அலனாய்த்
தனிப்பதியாய் விளங்கிடும் என் தந்தையை என் தாயை
வானே அவ்வான் கருவே வான்கருவின் முதலே
வள்ளால் என்று அன்பரெலாம் உள்ளா நின்றவனைத்
தேனே செம்பாகே என்று இனித்திடும் தெள்ளமுதைச்
சிற்சபையில் பெருவாழ்வைச் சிந்தைசெய்மின் உலகீர்
ஊனேயும் உடல் அழியாது ஊழிதொறும் ஓங்கும்
உத்தம சித்தியைப் பெறுவீர் சத்தியம் சொன்னேனே 14

சத்திய வேதாந்தமெலாம் சித்தாந்தமெல்லாம்
தனித்தனி மேல் உணர்ந்து உணர்ந்தும் தனை
உணர்தற்கு அரிதாய்
நித்திய சிற்சபை நடுவே நிறைந்து நடம் புரியும்
நித்த பரிபூரணனைச் சித்த சிகா மணியை
அத்தகையோர் பெரும்பதியை அருமருந்தை அடியேன்
ஆவியை என் ஆவியிலே அமர்ந்த தயாநிதியைச்
சித்தியெலாம் எனக்களித்த சிவகதியை உலகீர்
சிந்தைசெய்து வாழ்த்துமினோ நிந்தையெலாம்
தவிர்ந்தே 15

Koviloor Digital Library

நிந்தையிலார் நெஞ்சகத்தே நிறைந்த பெருந்தகையை
நிலையனைத்தும் காட்டி அருள்நிலை அளித்த குருவை
எந்தையை என் தனித்தாயை என்னிரு கண்மணியை
என் உயிரை என் உணர்வை என் அறிவுள் அறிவை
சிந்தையிலே தனித்தினிக்கும் தெள்ளமுதை அனைத்தும்
செய்யவல்ல தனித்தலைமைச் சிவபதியை உலகீர்
முந்தைமல இருட்டொழிய முன்னுமினோ கரண
முடுக்கொழித்துக் கடைமரண நடுக்கொழித்து
முயன்றே 16

முயன்று உலகில் பயனடையா மூட மதம் அனைத்தும்
முடுகி அழிந்திடவும் ஒரு மோசமும் இல்லாதே
இயன்ற ஒரு சன்மார்க்கம் எங்கும் நிலை பெறவும்
எம் இறைவன் எழுந்தருள இதுதருணங் கண்டீர்
துயின்றுணர்ந்தே எழுந்தவர்போல் இறந்தவர்கள் எல்லாம்
தோன்ற எழுகின்றது இது தொடங்கி நிகழ்ந்திடும் நீர்
பயின்று அறிய விரைந்துவம்மின் படியாத படிப்பைப்
படித்திடலாம் உணர்ந்திடலாம் பற்றிடலாம் சுகமே 17

சுகமறியீர் துன்பம் ஒன்றே துணிந்து அறிந்தீர் உலகீர்
சூதறிந்தீர் வாதறிந்தீர் தூய்மை அறிந்திலிரே
இகம் அறியீர் பரம் அறியீர் என்னேநும் கருத்து ஈது
என்புரிவீர் மரணம் வரில் எங்குறுவீர் அந்தோ
அகமறியீர் அனகமறிந்து அழியாத ஞான
அமுத வடிவம் பெறலாம் அடைந்திடுமின் ஈண்டே
முகமறியார் போலிருந்தீர் என்னை அறியீரோ
முத்தரெலாம் போற்றும் அருட்சித்தர்மகன் நானே 18

Koviloor Digital Library

நான் உரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்றன் வார்த்தை
நம்புமினோ நமரங்காள் நற்றருணம் இதுவே
வான் உரைத்த மணிமன்றில் நடம்புரி எம்பெருமான்
வரவு எதிர்கொண்டு அவன் அருளால் வரங்களெலாம் பெறவே
தேன் உரைக்கும் உளம் இனிக்க எழுகின்றேன் நீவிர்
தெரிந்து அடைந்து என்னுடன் எழுமின் சித்திபெறலாகும்
ஏனுரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன் கண்டீர்
யான் அடையும் சுகத்தினை நீர்தான் அடைதல்
குறித்தே 19

குறித்து உரைக்கின்றேன் இதனைக் கேண்மின் இங்கே
வம்மின்
கோணுமனக் குரங்காலே நாணுகின்ற உலகீர்
வெறித்த உம்மால் ஒரு பயனும் வேண்டுகிலேன் எனது
மெய்யுரையைப் பொய்யுரையாய் வேறு நினையாதீர்
பொறித்த மதம் சமயமெலாம் பொய் பொய்யே அவற்றில்
புகுதாதீர் சிவம் ஒன்றே பொருளெனக் கண்டறிமின்
செறித்திடு சிற்சபை நடத்தைத் தெரிந்து துதித்திடுமின்
சித்தியெலாம் இத்தினமே சத்தியம் சேர்ந்திடுமே

சேர்ந்திடவே ஒருப்படுமின் சமரச சன்மார்க்கத்
திருநெறியே பெரு நெறியாம் சித்தியெலாம் பெறலாம்
ஓர்ந்திடுமின் உண்ணுதற்கும் உறங்குதற்கும் உணர்ந்தீர்
உலகமெலாம் கண்டிடும் ஓர் உளவை அறிந்திலிரே
வார்ந்த கடல் உலகறிய மரணம் உண்டே அந்தோ
மரணம் என்றால் சடமெனும் ஓர் திரணமும் சம்மதியா
சார்ந்திடு அம்மரணமதைத் தடுத்திடலாம் கண்டீர்
தனித்திடு சிற்சபை நடத்தை தரிசனம் செய்வீரே 2

Koviloor Digital Library

செய்தாலும் தீமையெலாம் பொறுத்தருள்வான் பொதுவில்
திருநடஞ்செய் பெருங்கருணைத் திறத்தான் அங்கு அவனை
மெய்தாவ நினைத்திடுக சமரச சன்மார்க்கம்
மேவுக என்று உரைக்கின்றேன் மேதினியீர் எனைத்தான்
வைதாலும் வைதிடுமின் வாழ்த்தெனக் கொண்டிடுவேன்
மனங்கோணேன் மானம் எலாம் போனவழி விடுத்தேன்
பொய்தான் ஓர் சிறிதெனினும் புகலேன் சத்தியமே
புகல்கின்றேன் நீவிர்எலாம் புனிதமுறும் பொருட்டே 22

பொருட்டலநும் போகமெலாம் பொய்யாம் இங்கு இது நான்
புகலுவதென் நாடொறு நும் புந்தியிற் கண்டதுவே
மருட்டுலகீர் இருட்டுலகில் மடிவது அழகலவே
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ வம்மின் இங்கே
பொருட்டிறஞ்சேர் சுத்தசிவ சன்மார்க்க நிலையில்
பொருந்துமின் சிற்சபை அமுதம் அருந்துமின் அன்புடனே
அருட்டிறஞ் சேர்ந்து எண்ணியவாறு ஆடுமினோ நும்மை
அடுப்பவரே அன்றி நின்று தடுப்பவர் மற்றிலையே 23

மற்றறிவோம் எனச் சிறிது தாழ்த்திருப்பீர் ஆனால்
மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ
சற்றும் அதை நும்மாலே தடுக்க முடியாதே
சமரச சன்மார்க்க சங்கத்தவர்கள் அல்லால் அதனை
என்றிநின்று தடுக்கவல்லார் எவ்வுலகில் எவரும்
இல்லை கண்டீர் சத்தியமீது என்மொழி கொண்டு உலகீர்
பற்றிய பற்று அனைத்தினையும் பற்றற விட்டு அருள்
அம்பலப்பற்றே பற்றுமினோ என்றும் இறவீரே 24

Koviloor Digital Library

இறந்தவரை எடுத்திடும்போது அரற்றுகின்றீர் உலகீர்
இறவாதப் பெருவரம் நீர் ஏன் அடைய மாட்டீர்
மறந்திருந்தீர் பிணிமூப்பில் சம்மதமோ நுமக்கு
மறந்தும் இதை நினைக்கில் நல்லோர் மனம் நடுங்கும் கண்டீர்
சிறந்திடு சன்மார்க்கம் ஒன்றே பிணிமூப்பு மரணம்
சேராமல் தவிர்த்திடுங்காண் தெரிந்து வம்மின் இங்கே
பிறந்த பிறப்பு இதில்தானே நித்திய மெய் வாழ்வு
பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே 25

உற்றமொழி உரைக்கின்றேன் ஒருமையினால் உமக்கே
உறவன் அன்றி பகைவனென உன்னாதீர் உலகீர்
கற்றவரும் கல்லாரும் அழிந்திடக் காண்கின்றீர்
கரணமெலாம் கலங்கவரும் மரணமும் சம்மதமோ
சற்றும் இதை சம்மதியாது என் மனந்தான் நுமது
தன்மனந்தான் கன்மனமோ வன்மனமோ அறியேன்
இற்று இதனைத் தடுத்திடலாம் என்னொடும் சேர்ந்திடுமின்
என்மார்க்கம் இறப்பு ஒழிக்கும் சன்மார்க்கம் தானே 26

சன்மார்க்கப் பெருங்குணத்தார் தம்பதியை என்னைத்
தாங்குகின்ற பெரும்பதியைத் தனித்த சபாபதியை
நன்மார்க்கத்து எனை நடத்திச் சன்மார்க்க சங்கம்
நடுவிருக்க அருளமுதம் நல்கிய நாயகனைப்
புன்மார்க்கர்க்கு அறிவரிதாம் புண்ணியனை ஞான
பூரண மெய்ப் பொருளாகிப் பொருந்திய மா மருந்தை
அன்மார்க்கம் தவிர்த்தருளி அம்பலத்தே நடஞ்செய்
அருட் பெருஞ்ஜோதியை உலகீர் தெருட்கொளச் சார்வீரே 27

Koviloor Digital Library

சார் உலக வாதனையைத் தவிர்த்தவர் உள்ளகத்தே
சத்தியமாய் அமர்ந்தருளும் உத்தம சற்குருவை
நேர்உறவே எவராலும் கண்டுகொளற்கு அரிதாம்
நித்தியவான் பொருளை எலா நிலைகளும் தானாகி
ஏர் உறவே விளங்குகின்ற இயற்கை உண்மை தன்னை
எல்லாம் செய் வல்லபத்தை எனக்களித்த பதியை
ஓர் உறவென்று அடைந்து உலகீர் போற்றி மகிழ்ந்திடுமின்
உள்ளமெலாம் கனிந்துருகி உள்ளபடி நினைந்தே 28

—முற்றும்—

சொல்லுகின்றேன் பற்பல நான் சொல்லுகின்றவெல்லாம்
துரிசலவே சூதலவே தூய்மை உடையனவே
வெல்லுகின்ற வார்த்தையன்றி வெறும் வார்த்தை என்வாய்
விளம்பாது என் ஐயர் நின்று விளம்புகின்ற படியால்
செல்லுகின்ற படியே நீ காண்பாய் இத்தின்த்தே
தேமொழி அப்போது எனை நீ தெளிந்து கொள்வாய் கண்டாய்
ஒல்லுகின்ற வகையெல்லாம் சொல்லுகின்றேனடி நான்
உண்மை இது உண்மை இது உண்மை இது தானே! 1

சத்தியவான் வார்த்தை இது தானுரைத்தேன் கண்டாய்
சந்தேகம் இலை இதனில் சந்தோடம் உறுவாய்
இத்தினமே அருட்ஜோதி எய்துகின்ற தினமாம்
இனிவரும் அத்தினங்கள் எல்லாம் இன்பமுறு தினங்கள்
சுத்தசிவ சன்மார்க்கம் துலங்கும் எலா உலகும்
தூய்மையுறும் நீ உரைத்தசொல் அனைத்தும் பலிக்கும்
செத்தவர்கள் எழுந்து உலகில் திரிந்து மகிழ்ந்திருப்பார்
திருவருட் செங்கோல் எங்கும் செல்லுகின்ற தாமே 2

Koviloor Digital Library


கற்றதென்றும் சாகாத கல்வியென்று கண்டு கொண்டுன்
அற்புத சிற் றம்பலத்தில் அன்புவைத்தேன் ஐயாவே
ஈடணைகள் நீக்கிநமக் கின்பளிக்கும் என்று மன்றில்
ஆடும் திருவடிக்கே ஆசைவைத்தேன் ஐயாவே
நானந்த மெய்தா நலம்பெறவே எண்ணிமன்றில்
ஆனந்த நாடகத்துக் கன்புவைத்தேன் ஐயாவே
வாடலறச் சாகா வரங்கொடுக்கும் என்று மன்றில்
ஆடலடிப் பொன் மலர்க்கே அன்புவைத்தேன் ஐயாவே
பொற்புறவே பொன்றாப் பொருள் அளிக்கும் என்று மன்றில்
அற்புதப்பொற் சேவடிக்கே அன்புவைத்தேன் ஐயாவே
ஈனமறுத் தென்றும் இறவாமை நல்குமென்றே
ஞானமணி மன்றிடத்தே நண்புவைத்தேன் ஐயாவே
ஓர்துணைநின் பொன்னடியென்று உன்னுகின்றேன் உன்னையன்றி
யார்துணையும் வேண்டேன் என் அன்புடைய ஐயாவே
இச்சைநின்மேல் அன்றியெனக் கெள்ளளவும் வேறுமொன்றில்
இச்சையிலை நின்னாணை என்னருமை ஐயாவே
எப்படி நின்னுள்ளம் இருக்கின்ற தென்னளவில்
அப்படி நீ செய்கவெனக் கன்புடைய ஐயாவே
எவ்வண்ணம் நின்கருத்து இங்கு என்னளவில் எண்ணியதோ
அவ்வண்ணஞ் செய்க எனக் கன்புடைய ஐயாவே
நாசமிலா நின்னருளாம் ஞானமருந் துண்ண உள்ளே
ஆசை பொங்கு கின்றதெனக் கன்புடைய ஐயாவே

Koviloor Digital Library

# சிற்சத்தி துதி

ஜோதிக் கொடியே ஆனந்த
சொரூபக் கொடியே ஜோதியுரு
பாதிக் கொடியே ஜோதிவலப்
பாகக் கொடியே எனையீன்ற
ஆதிக் கொடியே உலகுகட்டி
ஆளுங் கொடியே சன்மார்க்க
நீதிக் கொடியே சிவகாம
நிமலக் கொடியே அருளுகவே. 1

பொருணற் கொடியே மாற்றுயர்ந்த
பொன்னங் கொடியே போதாந்த
வருணக் கொடியே எல்லாஞ்செய்
வல்லார் இடஞ்சேர் மணிக்கொடியே
தருணக் கொடியே என்றன்னைத்
தாங்கி ஓங்குந் தனிக்கொடியே
கருணைக் கொடியே ஞானசிவ
காமக் கொடியே அருளுகவே. 2

நீட்டுக் கொடியே சன்மார்க்க
நீதிக் கொடியே சிவகீதப்
பாட்டுக் கொடியே இறைவர்வலப்
பாகக் கொடியே பரநாத
நாட்டுக் கொடியே எனையீன்ற
ஞானக் கொடியே என்னுறவாங்
கூட்டுக் கொடியே சிவகாமக்
கொடியே அடியேற்கு அருளுகவே. 3

Koviloor Digital Library

மாலக் கொடியேன் குற்றமெலாம்
 மன்னித்தருளி மரணமெனுஞ்
சாலக் கொடியை ஒடித்து எனக்குட்
 சார்ந்து விளங்குந் தவக் கொடியே
காலக் கருவைக் கடந்து ஒளிர்வான்
 கருவுங் கடந்து வயங்குகின்ற
கோலக் கொடியே சிவஞானக்
 கொடியே அடியேற்கு அருளுகவே. 4

நாடாக் கொடிய மனமடக்கி
 நல்ல மனத்தைக் கனிவித்துப்
பாடாப் பிழையைப் பொறுத்து எனக்கும்
 பதம் ஈந்து ஆண்ட பதிக்கொடியே
தேடாக் கரும சித்தியெலாம்
 திகழத் தயவால் தெரிவித்த
கோடாக் கொடியே சிவதருமக்
 கொடியே அடியேற்கு அருளுகவே. 5

மணங்கொள் கொடிப்பூ முதல் நான்கு
 வகைப்பூ வடிவுள் வயங்குகின்ற
வணங்கொள் கொடியே ஐம்பூவும்
 மலிய மலர்ந்த வான்கொடியே
கணங்கொள் யோக சித்தியெலாங்
 காட்டுங் கொடியே கலங்காத
குணங்கொள் கொடியே சிவபோகக்
 கொடியே அடியேற்கு அருளுகவே. 6

Koviloor Digital Library

புலங்கொள் கொடியே மனம்போன
போக்கில் போகாது எனைமீட்டு
நலங்கொள் கருணைச் சன்மார்க்க
நாட்டில் விடுத்த நற்கொடியே
வலங்கொள் ஞான சித்தியெலாம்
வயங்க விளங்கு மணிமன்றிற்
குலங்கொள் கொடியே மெய்ஞானக்
கொடியே அடியேற்கு அருளுகவே. 7

வெறிக்குஞ் சமயக் குழியில் விழ
விரைந்தேன் தன்னை விழாதவகை
மறிக்கும் ஒருபேர் அறிவளித்த
வள்ளற்கொடியே மனக்கொடியைச்
செறிக்கும் பெரியர் உளத்தோங்கும்
தெய்வக் கொடியே சிவஞானங்
குறிக்குங் கொடியே ஆனந்தக்
கொடியே அடியேற்கு அருளுகவே. 8

தடுத்தல் அரிய பயங்கவலை
எல்லாந் தவிர்த்துக் கருத்துள்ளே
அடுத்த கொடியே அருளமுதம்
அளித்து என்றனை மெய்யருட்கரத்தால்
எடுத்த கொடியே சித்தியெலாம்
இந்தா மகனே என்றெனக்கே
கொடுத்த கொடியே ஆனந்தக்
கொடியே அடியேற்கு அருளுகவே. 9

Koviloor Digital Library

ஏட்டைத் தவிர்த்து என் எண்ணமெலாம்
எய்த ஒளிதந்து யான் வனைந்த
பாட்டைப் புனைந்து பரிசளித்த
பரமஞானப் பதிக் கொடியே
தேட்டைத் தனிப்பேர் அருட்செங்கோல்
செலுத்துஞ் சுத்த சன்மார்க்கக்
கோட்டைக் கொடியே ஆனந்தக்
கொடியே அடியேற்கு அருளுகவே 10

▪ ▪ ▪ ▪ ▪

## வள்ளலார் வருகைப் பதிகம்

உலகந் தழைக்க வந்துதித்த
உருவே வருக ! ஓதாதே
உற்ற கலைகள் அனைத்தினையும்
உணர்ந்தோய் வருக ! ஒன்றிரண்டற் (று)
இலகும் பரமா னந்தசுக
இயல்பே வருக ! இம்பர்தமை
இறவாக் கதியில் ஏற்றுகின்ற
இறையே வருக ! என்போல்வார்
கலகந் தவிர்த்துக் கதியளிக்கும்
கண்ணே வருக ! கண்நிறைந்த
களிப்பே களிப்பில் ஊறுகின்ற
கனிவே வருக ! கலைமதிதோய்
வலகஞ் செறிந்த வடற்பதியின்
வாழ்வே வருக ! இராமலிங்க
வள்ளல் எனுமோர் மாணிக்க
மணியே வருக ! வருகவே !!

Koviloor Digital Library

# நாமாவளி

அம்பலத் தரசே அருமருந் தே
ஆனந்தத் தேனே அருள்வி ருந்தே

பொது நடத்தரசே புண்ணிய னே
புலவ ரெலாம் புகழ் கண்ணியனே

அம்பல வாசிவ மாதே வா
அம்பல வாஇங்கு வாவா வா

சங்கர சிவசிவ மாதே வா
எங்களை ஆட்கொள வாவா வா

அரகர சிவசிவ மாதே வா
அருளமு தந்தர வாவா வா

இக்கரை கடந்திடில் அக்கரை யே
இருப்பது சிதம்பர சக்கரை யே

அருட்பொது நடமிடு தாண்டவ னே
அருட்பெருஞ் ஜோதியென் ஆண்டவ னே

நடராஜர் பாட்டே நறும் பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும் பாட்டு

சிதம்பரப் பாட்டே திருப் பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப் பாட்டு

அம்பலப் பாட்டே அருட் பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட் பாட்டு

நான் சொன்ன பாடலும் கேட்டாரே
ஞான சிதம்பர நாட்டா ரே

அருட்பெருஞ் ஜோதியைக் கண்டே னே
ஆனந்தத் தெள்ளமு துண்டே னே

Koviloor Digital Library

# ஜீவ காருண்யம்

ஒருவித ஆதாரமும் இல்லாத ஏழைகளின் பசி நீக்குவதே உண்மையான ஜீவ காருண்யம்

பசித்தவர்களுக்கு பசியாற்றுவிப்பதே விரதமாகக் கொண்ட ஜீவகாருண்யமுள்ள சமுசாரிகளுக்குக் கோடையில் வெயிலும் வருத்தாது, மண்ணும் சூடுசெய்யாது, 'பெருமழை' பெருங்காற்று, பெரும்பனி, பேரிடி, பெருநெருப்பு முதலிய உற்பாதங்களும் துன்பம் செய்விக்க மாட்டா. விடுசீகை, விஷக்காற்று, விஷசுரம் முதலிய அஜாக்கிரத்தைப் பிணிகளுமுண்டாகா. அந்த ஜீவகாருண்யமுள்ள சமுசாரிகள் ஆற்று வெள்ளத்தாலும், கள்ளர்களாலும், விரோதிகளாலும் கலக்கப்படார்கள். அரசர்களாலும், தெய்வங்களாலும் அவமதிக்கப்படார்கள். ஜீவகாருண்யமுள்ள சமுசாரிகளது விளை நிலத்தில் பிரயாசையில்லாமல் விளைவு மேன்மேலும் உண்டாகும்; வியாபாரத்தில் தடையில்லாமல் லாபங்களும், உத்தியோகத்தில் கெடுதியில்லாத மேன்மையும் உண்டாகும்; சுற்றங்களாலும், அடிமைகளாலும் சூழப்படுவார்கள்; துஷ்ட மிருகங்களாலும், துஷ்ட ஜந்துக்களாலும், துஷ்ட பசாசுகளாலும், துஷ்ட தெய்வங்களாலும் பயஞ் செய்யப்படார்கள்.

ஜீவ காருண்யமுள்ள சமுசாரிகளுக்கு எப்படிப்பட்ட ஆபத்துக்களும் அஜாக்கிரத்தையினாலும் ஊழ்வகை யினாலும் சத்தியமாக வராது.

Koviloor Digital Library

ஜீவகாருண்ய வொழுக்கம் உடையவர்களாகி ஜீவர்களைப் பசியென்கின்ற அபாயத்தில் நின்றும் நீங்கச் செய்கின்ற உத்தமர்கள் எந்த ஜாதியாராயினும், எந்த சமயத்தராயினும், எந்த செய்கையையுடையவர்களாயினும், தேவர், முனிவர், சித்தர், யோகர், முதலிய யாவரானும் வணங்கத்தக்க சிறப்புடையர் ஆவார்களென்று சர்வ சக்தியையுடைய கடவுள் சாட்சியாக சத்தியஞ் செய்யப்படுமென்று அறிய வேண்டும்.

## பசியின் அவத்தை

1. ஜீவர்களுக்குப் பசி அதிகரித்த காலத்தில், ஜீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றது.
2. அது மயங்கவே அறிவுக்கறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகின்றது.
3. அது மறையவே, புருடதத்துவம் சோர்ந்து விடுகின்றது.
4. அது சோரவே, பிரகிருதி தத்துவம் மழுங்குகின்றது.
5. அது மழுங்கவே, குணங்களெல்லாம் பேதப்படுகின்றது.
6. மனம் தடுமாறிச் சிதறுகின்றது.
7. புத்தி கெடுகின்றது.
8. சித்தம் கலங்குகின்றது.
9. அகங்காரம் அழிகின்றது.
10. பிராணன் சுழல்கின்றது.
11. பூதங்களெல்லாம் புழுங்குகின்றன.

Koviloor Digital Library

12. வாத பித்த சிலேட்டுமங்கள் நிலைமாறுகின்றன.
13. கண் பஞ்சடைந்து குழிந்து போகின்றது.
14. காது கும்மென்று செவிடுபடுகின்றது.
15. நா உலர்ந்து வறளுகின்றது.
16. நாசி குழைந்து அழல்கின்றது.
17. தோல் மெலிந்து ஸ்மரணை கெடுகின்றது.
18. கை கால் சோர்ந்து துவளுகின்றன.
19. வாக்குதொனி மாறிக் குளறுகின்றது.
20. பற்கள் தளருகின்றன.
21. மல சல வழி வெதும்புகின்றது.
22. மேனி கருகுகின்றது. 23.ரோமம் வெறிக்கின்றது.
24. நரம்புகள் குழைந்து நைகின்றன.
25. நாடிகள் கட்டுவிட்டுக் குழைகின்றன.
26. எலும்புகள் கருகிப் பூட்டுகள் நெக்குவிடுகின்றன.
27. இருதயம் வேகின்றது.
28. மூளை சுருங்குகின்றது.
28. சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது.
29. ஈரல் கரைகின்றது.
30. இரத்தமும் சலமும் சுவறுகின்றன.
31. மாமிசம் குழைந்து தன்மை கெடுகின்றது.
32. வயிறு பகீலென்று எரிகின்றது.
33. தாப சோபங்கள் மேன்மேலும் உண்டாகின்றன.

Koviloor Digital Library

34. உயிரிழந்து விடுவதற்கு மிகவுஞ் சமீபித்த அடையாளங்களும் அனுபவங்களும் தோன்றுகின்றன.

பசியினால் இவ்வளவு அவத்தைகளுந் தோன்றுவது ஜீவர்களுக்கெல்லாம் பொதுவாகவே இருக்கின்றது. இவ்வளவு அவத்தைகளும் ஆகாரம் கிடைத்தபோது உண்டு பசி நீங்க, நீங்குகின்றன. அப்போது தத்துவங்களெல்லாம் தழைத்து, உள்ளங் குளிர்ந்து, அறிவு விளங்கி அகத்திலும் முகத்திலும் ஜீவகளையும், கடவுள் களையுந் துளும்பி ஒப்பில்லாத திருப்தி இன்பம் உண்டாகின்றது.

இப்படிப்பட்ட இன்பத்தை உண்டுபண்ணுகின்ற புண்ணியத்துக்கு எந்தப் புண்ணியத்தை இணையென்று சொல்லலாம்? இந்த புண்ணியத்தைச் செய்கின்ற புண்ணியர்களை எந்தத் தெய்வத்திற்குச் சரியென்று சொல்லலாம்? எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுள் அம்சமென்றே சத்தியமாக அறிய வேண்டும்.

■ ■ ■ ■ ■

Koviloor Digital Library

# மனுமுறை கண்ட வாசகம்

1. நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ !
2. நட்டாற்றில் கையை நழுவ விட்டேனோ !
3. வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ !
4. வரவு போக்கொழிய வழியடைத்தேனோ !
5. தானம் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ !
6. தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ !
7. கலந்த் சினேகிதரை கலகஞ் செய்தேனோ !
8. களவு செய்வோருக்கு உளவு சொன்னேனோ !
9. மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனோ !
10. மண்ணோரம் பேசி வாழ் வழித்தேனோ !
11. குடிவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ !
12. குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தேனோ !
13. ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ !
14. இரப்போர்க்கு பிச்சை இல்லை என்றேனோ !
15. உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரம் செய்தேனோ !
16. ஊன்சுவை உண்டு உடல் வளர்த்தேனோ !
17. பொது மண்டபத்தைப் போயிடித்தேனோ!
18. ஆசைகாட்டி மோசஞ் செய்தேனோ !
19. அன்புடையவர்க்கு துன்பஞ் செய்தேனோ !
20. வேலையிட்டுக் கூலி குறைத்தேனோ !
21. வெயிலுக்கு ஒதுங்கும் விருக்ஷத்தை அழித்தேனோ !

Koviloor Digital Library

22. பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ !
23. பகைகொண்டு அயலோர் பயிரை அழித்தேனோ !
24. கோள் சொல்லிக் குடும்பங் குலைத்தேனோ !
25. கலங்கி ஒளித்தோரைக் காட்டிக் கொடுத்தேனோ !
26. கற்பழிந்தவளைக் கலந்திருந்தேனோ !
27. காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தேனோ !
28. கருப்பமழித்துக் களித்திருந்தேனோ !
29. கற்றவர்தம்மைக் கடுகடுத்தேனோ !
30. கன்றுக்குப் பாலுட்டாது கட்டி வைத்தேனோ !
31. குருவை வணங்கக் கூசி நின்றேனோ !
32. குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ !
33. பக்ஷியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ !
34. பெரியோர் பாட்டில் பிழை சொன்னேனோ !
35. கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ !
36. தவம் செய்வோரைத் தாழ்வு சொன்னேனோ !
37. ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ !
38. சிவனடியாரைச் சீறி வைதேனோ !
39. சுத்த ஞானிகளை தூஷணம் செய்தேனோ !
40. மாதா பிதாவை வைது நின்றேனோ !
41. தந்தை தாய் மொழியைத் தள்ளி நடந்தேனோ !
42. தெய்வத்தை இகழ்ந்து செருக்கடைந்தேனோ !

என்ன பாவம் செய்தேனோ !

Koviloor Digital Library

# வள்ளலார் அருளிய சுத்த சன்மார்க்கக் கொள்கைகள்

1. கடவுள் ஒருவரே.
2. அவரே அருட்பெருஞ் ஜோதியர்.
3. சிறு தெய்வ வழிபாடுகள் கூடாது.
4. அத்தெய்வங்களின் பெயரால் உயிர்ப்பலி கூடாது.
5. புலால் உண்ணலாகாது.
6. சாதி, சமய முதலிய வேறுபாடுகள் கூடா.
7. எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணும் ஆன்ம நேய ஒருமைப் பாட்டுரிமையைக் கடைபிடிக்க வேண்டும்.
8. ஜீவகாருண்ய ஒழுக்கமே தெய்வ வழிபாடு.
9. ஏழைகளின் பசியைப் போக்க உதவ வேண்டும்.
10. இறந்தவரைப் புதைக்க வேண்டும்.
11. எவ்வித சமய மத ஆசார சடங்குகளும் கூடாது.

Acc. No. 16555

Koviloor Digital Library

Koviloor Digital Library